வார இதழ்

ஆதவன்

ராவய வெளியீடு

ATHAVAN ආදවන්

ஒளி: 27
17.12.2000
விலை ரூபா 12.00
Registered as a Newspaper in Sri Lanka

யாழ். மக்களுக்கு மறுக்கப்பட்ட மனித உரிமை தினம்

மீண்டும் வந்த சோளகம் என்ற நூலில் இருந்து

இலக்கணமாக இலக்கியம்

சென்ற வாரத் தொடர்ச்சி.....

இக்கொள்கைகள் எல்லாம் வெறும் இலக்கிய உத்திகள் மட்டுமா? இலக்கியக் கொள்கைகளா? அன்றி அவைகள் தத்துவங்களா? என்ற கேள்விகள் எழுகின்றன.

எந்த ஒரு முயற்சியும் இலக்கிய உத்தி என்ற முறையில் வரவேற்கத்தக்கதே. ஆனால் அதையும் மீறி அது கொள்கையாகவும் கடைசியின தத்துவமாகவும் ஆக்கப்படும் போது அதைப் பற்றிய விசாரனை அவசியம் ஆகிறது.

உதாரணமாக பின் நவீனத்துவம் என்ன சொல்கிறது? சென்ற நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் மார்டனிஸம் அல்லது நவீனத்துவம் தோன்றியது. அது யதார்த்தவாத்தைப் பயன்படுத்திக் கொண்டது. இவ்வுலகில் இன்பமும் துன்பமும் நிறைந்திருக்கிறது என்றும் துன்பத்தை மனிதன் வெல்லலாம் என்றும் இன்பத்தை அவன் கைக் கொள்ளலாம். அதற்கு முன்னதாக இவ்வுலகைப் புரிந்து கொள்ளுதல் இயலும் என்றும் அக்கொள்கை போதித்தது. இத்த நவீனத்துவம் பழமை வாதத்தை எதிர்த்தது. இதனை என்லைட்மண்ட் என்று அழைத்தார்கள். இந்நவீனத்துவம் மார்க்ஸீயத்தைப் போன்று புற உலகையும் சமூகத்தையும் விஞ்ஞான பூர்வமாகப் பார்க்கவில்லை. ஆயினும் அது கன்சர்வேடிஸத்தை பழமை வாதத்தை எதிர்த்த வகையில் முற்போக்கான தன்மை உடையதாக இருந்தது.

நம்முடைய எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் இவ்வகையில் குறிப்பிடத் தகுந்தவர். தான் பிறந்த தமிழ் சமூகத்தின் வரட்டு கௌரவங்களையும் முடமாகிப்போன அதன் நிலவுடைமை மதிப்புகளையும் அவர் எதிர்த்து நிற்கிறார். தான் பழமையை எதிர்க்கும் புதுமைவாதி (மொடனிஸ்ட்) என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளவே அவர் தனது பெயரை "புதுமைப்பித்தன்" என வைத்துக் கொண்டார்.

ஆனால் இந்த மாடர்னிஸம் கொடுமைகளை எதிர்ப்பதோடு நின்று கொண்டது. எனவே மாடர்னிஸத்தின் அதாவது நவீனத்துவத்தின் பிரதிநிகள் பலர் விமர்சன யதார்த்தவாதிகளாக நின்று போனார்கள். கொடுமைகளை மாற்றுவது இயலுமா? என்ற கேள்விக்கு அது நமது வேலையல்ல என்று அவர்கள் விடையளித்தார்கள். என்றாலும் பழமைவாதத்தை எதிர்த்த அளவில் அவர்கள் முற்போக்காளர்களே!

சமீப ஆண்டுகளாக பின் நவீனத்துவம் என்ற பெயரில் இலக்கியக் கொள்கையொன்று தோன்றி வளர்ந்து வருகிறது. தோன்றிய ஐரோப்பிய, அமெரிக்க மண்ணிலேயே அது தோற்றும் வருகிறது. அதனைத் தோற்றுவித்தவர்களே அதனைக் கைவிடும் நிலையும் அங்கே தோன்றியுள்ளது. அது நவீனத்தவத்தைக் காலாவதியான கொள்கை எனக் கூறியது. இந்தப் பின் நவீனத்துவம் பிறந்த மண்ணில் வழக்கொழிந்து கொண்டு வரும் இக்கொள்கை நவீனத்துவத்தை எதிர்க்கின்றது.

விரிவஞ்சி அதன் கொள்கையையும் தத்துவத்தையும் சுருக்கமாக விவாதிக்கலாம்.

பின்நவீனத்துவத்தின் சொல்லாட்சியில் வாசித்தல் என்பது முக்கியமானது நாம் ஒரு புத்தகத்தை சாதாரணமாக "படித்தல்" என்று கூறுவதற்கும் இவர்கள் வாசித்தல் என்பதற்கும் பாரதூரமான வேறுபாடு உண்டு. நாம் ஒரு நூலைப் படிக்கிறோம் என்றால் அதன் பொருளை நூலாசிரியரின் கருத்தைப் புரிந்து கொள்கிறோம் என்பது தாற்பரியம். அவ்வாறு புரிந்து கொள்ளுதல் இயலும் என்று நாம் கூறுகிறோம். பாரதி கூறியது போல் நூலில் ஆழ்ந்திருக்கும் "கவியுளம்" காண்பது நமது நோக்கம். அக்கவிஞனை அவன் வாழ்ந்த காலத்தை வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ள இயலும் என்பது நமது கருத்து.

ஆனால் பின்நவீனத்துவ வாதிகளோ வாசித்தல் என்பது நூலைப் புரிந்து கொள்வது இல்லை என்கிறார்கள். நமது சொந்தக் கருத்தையே நூலில் நாம் காண்கிறோமே என்றி அந்த நூலின் ஆசிரியனின் கருத்தை நாம் காண இயலாது என்று கூறுகிறார்கள். இது ஆங்கிலம் தெரியாத சிலர் ஆங்கிலப் படம் பார்க்கச் சென்றதை ஒக்கும். மொழி தெரியாத காரணத்தால் படம் முடிந்து வெளி வரும் போது ஒவ்வொருவரும் தமக்குத் தாமே புனைந்து கொண்டதோர் கதையோடு வெளியே வருவார்கள். அதைப் போலவே தான் எந்த ஒரு பனுவலிலும் (டெக்ஸ்) நாம் நமது கருத்தைத் தான் காண்கிறோமே அன்றி பனுவல் ஆசிரியரின் கருத்தை அல்ல என்று அவர்கள் கூறுகிறார்கள்.

டெக்ஸ் அல்லது பனுவல் என்று கூறும்போது அச்சொல்லை அவர்கள் நூல் அல்லது புத்தகம் என்று கூறுவதோடு நின்று விடுவதில்லை. மொழியையும் டெக்ஸ் என்ற சொல்லிலேயே இவர்கள் அழைக்கிறார்கள். அதே போன்று அச்சொல்லைப் புற உலக யதார்த்தம் (ஒப்ஜெக்டிவ் ரியலிட்டி) சமூகம் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்துகிறார்கள்.

எவ்வாறு ஒரு நூலைப் புரிந்து கொள்வது இயலாதோ அதே போன்றே புற உலகையும் சமூகத்தையும் புரிந்து கொள்வது இயலாது என்றும் எனவே அதை மாற்றுதல் இயலாது என்றும் கூறுகிறார்கள். நூலில் எவ்வாறு நமது கருத்தைத் தான் நாம் காண்கிறோமோ அவ்வாறே புற உலகிலும் நாம் நமது கருத்தைத்தான் காண்கிறோம். புற உலகை அல்ல. இது கடைந்தெடுத்த பிற்போக்குக் கருத்து முதல் வாதம் என்பதில் ஐயமில்லை. இன்றைய மனித மனமும் சிதைவுற்றுக்கிடக்கிறது.

சிதைவுற்ற இந்த மனத்தினால் புற உலகைப் புரிந்து கொள்ளுதல் இயலாது என்றும் அவர்கள் கூறுகிறார்கள் அத்தோடு மட்டுமின்றி புற உலகே சிதைவுற்றுக் கிடக்கிறது என்றும் அக்காரணத்தாலேயே புற உலகை மாற்றுகின்ற கொடுமையை எதிர்த்துப் போராடுகிற போராட்டங்களும் சிதிலமானவை, பொருளற்றவை என்றும் பின் நவீனத்தவவாதிகள் கூறுகிறார்கள்.

மக்கள் வர்க்கங்களாகப் பிரிந்து கிடப்பதையும் இவ்வர்க்கங்களிடையே உக்கிரமான போர் நிகழ்ந்து கொண்டிருப்பதையும் இவர்கள் மறுக்கிறார்கள். இன்றைய முதலாளித்துவமும் சிதைந்து கிடக்கிறது. சென்ற நூற்றாண்டில் இருந்த முதலாளித்துவம் வேறு. அதைப் போன்றே தொழிலாளிவர்க்கமும் சிதைந்து கிடக்கிறது. எனவே வர்க்கப் போராட்டம் பொருளற்றது.

ஆனால் இக் காலகட்டத்தில் காணப்படும் அடக்குமுறைகளை எதிர்ப்பது எப்படி? செக்ஸ் அடிப்படையிலான அடக்கு முறையை எதிர்த்துப் பெண்ணியமும் ஓரினச்சேர்க்கையையும் அதற்கான போராட்டமும், கறுப்பர்கள், நமது நாட்டில் "தலித்துகள்" ஆகியோர் சமூக அந்தஸ்தை வேண்டி நடத்தும் போராட்டங்களே இந்த நூற்றாண்டிற்குப் பொருந்தக் கூடிய போராட்டங்கள் என்று கூறுகிறார்கள். இவ்வடக்கு முறைகள் எல்லாம் உண்மையே எனினும் இவை மட்டுமே போராட்டங்கள் என இவர்கள் கூறும் போது இவர்கள் வர்க்க ரீதியிலான போராட்டங்களைப் புறந்தள்ள நினைக்கிறார்கள் என்பதே இதன் பொருள்.

இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள யதார்த்தவாதம் நமது பின் நவீனத்துவ வாதிகளுக்கு இடைஞ்சலாகவும் தடையாகவும் இருக்கிறது. எனவே இவர்கள் தமக்கென்று ஒரு உத்தி முறையை வகுத்துக் கொண்டு யதார்த்தை விட்டு விலகியதோர் வடிவத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு நாவல் எழுத முயன்று தோற்று வருகிறார்கள். ஒரே இரவில் 'மனிதன் கரப்பான் பூச்சியாக மாறுவதை ஒத்தது, இவர்களது நாவல் உத்திமுறை. இதுவே இன்றைய நிலை. மிக விரைவில் இம்முயற்சிகள் தமிழகத்திலும் வழக்கொழிந்து போகும் என்பதில் ஐயமில்லை.

தோழர் செ.யோகநாதனின் மீண்டும் வந்த சோளகம் என்ற நாவல் இத்தகைய பின் நவீனத்துவப் பிற்போக்கு வாதங்களின் படைப்பு ரீதியான விமரிசனம் என்று நான் கணிக்கிறேன்.

நெஞ்சோடு நெஞ்சம்

தொட்டம் தொட்டமாய்
குருதி தோய்ந்த கறுப்புக் கம்பளம்
வெறிச்சோடிக் கிடக்கிறது!
சங்கிலிப் பாலம் அறுந்து விழ
துளிர்விடும் அன்புப் பயிர்
கொதிநீரில் குளித்தது – வீணாக

மலைப் பாம்புகள் தலைதூக்க
கிருமி கலங்கும்.
தாள் அமுக்கம் கூடிவர
உக்கிரமான புயலினால்
கலங்கரை விளக்குகளும் சிதறிப்பொயின.

பூகம்பத்துள் சிக்கி
திசை தெரியாது தத்தளித்த ஓடங்கள்
வந்த தடமும் தெரியாமல்
ஆழ்ந்து விட்டன.
எத்தனை எத்தனை படகுகள்
அழிந்து போயிற்று.
இதயம் குளிரும் பூச்சொரிய
கறைபடியாக் கரங்கள் உயரட்டும்
கருங்காலிக் கட்டைகளை வேலிக்குப் போட்டு
கப்பல் வாழைகளை கிணற்றடியில் நடுவோம்!
கண்ணில் பாசம் துளிர்க்கும் நீர் வார்த்து
கதியிழந்த இதயங்களைக் கைகொடுத்துத் தூக்க
காதல் பெருகி கொடிகட்டிப் பறக்கும்!
நஞ்சு மனத்தைக் கழற்றி எறி!
காற்றில் போகட்டும் அது!
வேறு அண்ட வெளிக்கு
மனித வாடையே இல்லாக் கிரகத்துக்கு!

மு.சடாட்சரன்.

நஞ்சு மனத்தைக் கழற்று

வாசகர் குரல்

ஆசிரியர் அவர்களுக்கு,

ஆதவனின் தொடர் வாசகன் என்ற முறையிலும் திருகோணமலை மண்ணை சேர்ந்தவன் என்ற முறையிலும் சில கருத்துக்களை கூறவேண்டிய கடமை எனக்குண்டு. கடந்த இதழில் (3.12.2000) வெளியாகியிருந்த பறிபோன தமிழ் பிரதிநிதித்துவம் தமிழர் மகாசங்கத்தை செயல்படத்தூண்டுமா என்ற தலைப்பில் நாட்டாமுட்டியன் என்பவர் எழுதிய கட்டுரை திருகோணமலையை நாகப்படுத்திய இருவரது புகைப்படத்துடன் பிரசுரமாகியிருந்தது. அரைத்தமாவை அரைக்கும் கதையான இத்தகைய கட்டுரைகளை பிரசுரிப்பது ஆதவனின் செழுமையான வளர்ச்சி நகர்விற்கு உகந்ததல்ல. திருகோணமாலை தேர்தல் நிலவரங்கள் தொடர்பாக ஒஷோ யதீந்திரா என்பவர் எழுதிய இருகட்டுரைகள் ஏற்கனவே ஆதவனில் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. தவிர நட்டாமுட்டியன் கட்டுரையில் ஆழ்ந்த அரசியல் அவதானம் வெளிப்படவில்லை. இனிவரும் தேர்தலில் அம்பாறையில் கிடைத்த பாடத்தை அரிச்சுவடியாகக் கொள்ள வேண்டும் என்று கூறும் நட்டாமுட்டியன் அம்பாறை தமிழ் பிரதிநிதித்துவத்தின் மறுபக்கத்தை பார்க்க தவறிவிட்டார். உண்மையில் அம்பாறையில் மகா சங்கம் சாதித்தது என்ன? பாசிச அரசிற்கு ஒரு பங்காளியை உருவாக்கி கொடுத்தது மட்டும் தான் இதுமட்டுமன்றி மகாசங்கத்தில் இருக்கும் சிலர் ஊழலின் தந்தைகள் ஒரு காலத்தில் கூட்டணிக்கு முதுகு சொறிந்தவர்கள். மீண்டும் முதுகு சொறியமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம். அண்மையில் கூட மகாசங்கத்தின் கொள்கையுல் அதிருப்பத்தி கொண்டு அதன் முக்கிய உறுப்பினரான தேவகடாட்சம் விலகியிருக்கிறார். உண்மையில் திருகோணமலையை பொறுத்தவரையில் மகாசங்கம் மட்டுமல்ல அந்த மகேசனே (சிவன்) தேர்தலில் போட்டியிட்டாலும் இரண்டு பிரதிநிதித்துவங்களை தக்கவைப்பது சாத்தியமல்ல.

எஸ்.புஸ்பகரன்
திருகோணமலை.

பிரதம நீதியதிக்கு எதிராக நீதியதிகள் முறைப்பாடு

நீதிமன்ற நீதிபதிகள் பலர் பிரதம நீதிபதி சரத் என். சில்வா அவர்களின் தன்னிச்சையான, போக்குகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சில காலம் தபுத்தேகமவிலும் மேலும் சில காலம் கொழும்பு மேலதிக நீதவானாகாவும் சேவை யாற்றிய கண்டி லேடிமகலம் விதியில் வதியும் சிரான் ஏக்க நாயக்கா அவர்கள் பிரதம நீபதிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் செய்யப்பட்டுள்ள முறைப் பாட்டில் பல பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

சிரான் ஏக்கநாயக்க தபுத்தேகமவில் மேலதிக நீதவானாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி தேர்தல் களத்தில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிரேம் லால் தலைமையில் நீதிமன் றத்திற்கு அண்மையில் ஒலிபெருக்கிகள் பாவித்து பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. இது நீதிமன்றத் தின் செயல்பாடுகளுக்கு தடையாக இருந்த கார ணத்தினால் நீதிபதி அவர்கள் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.டப்ள்யூ.ஏ. சலாம் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இவ்விடயம் பற்றி தெளிவுபடுத்தி என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்மென கேட்டுள்ளார்.ஆணைக்குழுவின் செயலாளர் பதிலளிக்கையில் அரசியல் வாதிகளுடன் அவதானமாக செயல்பட வேண்டும், எனவே நீதிமன்ற செயல்பாடுகளுக்கு ஒலிபெருக்கி தடையாக இருந்தால் வழக்குகளை பின்போடுமாறு கூறியுள்ளார்.

இச்சம்பவம் நடைபெற்று சில தினங்களின் பின்னர் ஒலிபெருக்கியின் சப்தம் இருந்ததன் காரணமாக நீதிபதி வழக்குகளை பின்போடு வதற்காக தொலைபேசி மூலம் நீதிமன்ற சேவைகளின் ஆணைக்குழுவின் செயலாளரிடம் இது பற்றி தெரியப்படுத்தியுள்ளதோடு என்ன செய்ய வேண்டும் என வினவியுள்ளார். இதற்குச் செயலாளர் இன்னும் பத்து நிமிடங்கள் கழித்து தன்னோடு தொடர்பு கொள்ளுமாறு கூறியுள்ளார்.

பத்து நிமிடங்களின் பின் செயலாளருடன் மீண்டும் தொடர்பு கொண்ட பொழுது உடனே ஒலிபெருக்கி பாவிப்பதற்கு தடைவிதிக்குமாறு அறிவித்தார்.

முன்பு பொதுஜன முன்னணியின் கூட்டம் நடைபெறும் போது ஒரு கொள்கையும் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் நடைபெறும் பொழுது இன்னொரு கொள்கையும் கடைப்படிக்க நீதிபதியின் மனசாட்சி இடம் தராத காரணத்தினால் முன்பு மேற்கொண்ட நடைமுறையை இவற்றின் அடிப்படையிலேயே



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பிரசாரக் கூட்டம் இதே இடத்தில் நடை பெற்றுள்ளது. அன்றும் முன்பு போல நீதிமன்ற செயல்பாடுகளுக்கு தடையாக

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மறைப்பாடு செய்யப்பட்டது. நடைமுறைப்ப டுத்தியுள்ளார்.

அன்றுமாலை செயலாளர் நீதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒலிபெருக்கி தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றி வினவியுள்ளார். செயலாளரின் கூற்றிற்கு அமைய நடக்காத கார ணத்தால் வழக்குகளை பின் போட்டதற்குரிய காரணங்களை பரதம நீதியரசரிடம் தெளிவுபடுத்த வேண்டி வரும் எனவும் மேலும் நீதிபதியின் மீது குற்றம்சாட்டி வசைபாடியுள்ளார்.

இச்சம்பவம் நடைபெற்று சில வாரங்களின் பின்னார் நீதிபதியை கொழும்பிற்கு திடீரென இடமாற்றம் செய்துள்ளனர். இவர் கொழும்பில் கடமையாற்றும் போது பல வழக்குகள் தொடர்பாக பிரதான நீதிபதியின் குறுக்கீடுகள் நடைபெற்றுள்ளது.

அத்வானியா, கமலசபேசனா:
யார் சொல்வது உண்மை?

மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே அத்வானி இந்திய மாநிலங்கள் அவையிலே இந்தியாவின் பல்துறைக் கண்காணிப்புக் குழு நவம்பர் மாதம் 13ல் இருந்து 23ம் திகதி வரை இலங்கையில் பல்வகைப்பட்ட விசாரணைகளை மேற்கொண்டது. அவ்வமயம் இலங்கையில் சட்டமா அதிபரை யும் சொலிசிட்டர் ஜெனரலையும் சந்தித்து உள்ளனர். அவ்வேளையில் ராஜிவ்காந்தி கொலை வழக்கின் முதல் எதிரியான விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனைப் பிடித்து இந்தியாவிற்கு நாடு கடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைத்து உதவ வேண்டும் என்று கேட்டுள்ளனர் ஆனால் இலங்கையின் சட்டமா அதிபர் கமலசபேசன் ஒரு இலங்கை நாளேட்டுக்கு டிசம்பர் 3ம் திகதி அளித்த பேட்டியில் இப்படிச் சொல்லியிருக்கின்றார். இந்திய பல்துறைக் கண்காணிப்புக் குழுவினர் மூவர் தன்னை வந்து சந்தித்ததாகவும் அவர்கள் எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ பிரபாகரனை பிடித்து இந்தியாவிற்கு கொண்டு போவது தொடர்பாக எதுவுமே பேசவில்லை எனவும் எவ்வித கோரிக்கையும் முன்வைக்கப்படவும் இல்லையென தெரிவித்துள்ளார். "இதிலே யார் சொல்வது உண்மை" இப்படிச் சொல்லப்பட்ட பொய் எப்போது அம்பலத்திற்கு வரும்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள்?

அல்லாரைப்பகுதியில் பொதுமக்களை அங்கிருந்து இடம் பெயர்ந்து செல்லுமாறு படையினர் வற்புறுத்தி இருக்கின்றனர். பொதுமக்களோ பிறந்த இடத்தை விட்டு வெளியேற விரும்பவில்லை. இதனாலே கோபமடைந்த படையினர் அங்கிருந்த 18 குடிசைகளை கொழுத்திவிட்டு மக்களை அடித்துத் துரத்தி இருக்கிறார்கள்.

சொந்தமண்ணையும் வீட்டையும் இழந்த மக்கள், இதைப்பற்றி பல சர்வதேச அமைப்புகளுக்கு ஆங்கிலத்தட்டெழுத்தாளர் ஒருவரின் உதவியுடன் மனுக்கள் அனுப்பியுள்ளனர். இப்படி உதவிய தட்டெழுத்தாளரை படையினர் வலைபோட்டுத் தேடி வருகின்றனர். அவர் வீட்டிலே நிம்மதியாக இருக்கமுடியாமல் தலைமறை வாகிவிட்டார். தகவலை வெளியுலகுக்கு அறிவித்த 18 குடிசையைச் சேர்ந்த மக்களைப் பற்றியும் அப்பகுதிக்கிராம சேவையாளரிடம் விசாரிக்கப்பட்டிருக்கிறது. இடத்தில் இல்லாதவர்களைப்பற்றி அவர் எதைக் கூற முடியும்? இதனால் அவரும் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டார்.

இதைவிட தமிழ்ப்பகுதிகளில் படையின ரால் மரணமடைவோருக்கு இப்போது மரண விசாரணையே நடைபெறுவதில்லை எனத்தகவல்கள் வருகின்றன. இதைப் பற்றியெல்லாம் பேச யாழ்ப்பாணத்தில் யாருமே இல்லையா?

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் என்ன நடக்கிறது?

பாலர் வகுப்புமுதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி பயிற்ற முடியும் என்பதை தமிழ் கூறும் நல்லுலகில் இலங்கையே சாத்தியப்படுத்திக் காட்டிற்று. இதற்கு அனுசரணையாக தமிழிற் கலைச்சொல் அகராதிகள், பாடப்புத்தகங்கள் என்பனவற்றை இலங்கையில் தமிழ்க் கல்விமான்கள் உருவாக்கினார்கள்; தமிழ் மொழியிலே பல பட்டதாரிகள் தோன்றினார்கள் மேற்பட்டங்களைப் பெற்றுள்ளனர். தமிழ்மொழி மூலம் பயின்ற வர்களே இன்று நிர்வாகத்துறை கல்வித்துறை என்பனவற்றில் உயர் பதவிகளை வகிக்கின்ற னர். பல்கலைக்கழத்து துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், துறைத் தலைவர்களில் பெரும்பான்மையோர் தாய்மொழியில் கல்வி பயின்றே இந்தப்பெருமையைப் பெற்றனர்.

இந்தப் பின்னணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விப் போதனை வெகுவேகமாக ஆங்கிலமொழிக்கு மாறிவரு வதாகச் செய்திகள் வந்தன. இதை ஆதவன் இதழ் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தி இருந்தது. அத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளரும் இதை மேலும் புள்ளிவிபரங்களுடன் அம்பலப்படுத்தி இருந்தார். மேற்பட் டப்படிப்பின் பயிற்று மொழியாக ஆங்கிலம் கட்டாயப்படுதப்பட்டதால் இரண்டு வீதமான மாணவர்கள், பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி விட்டார்கள் என்ற தகவல் மனச்சாட்சியுள்ள எந்த மனிதனது நெஞ்சையும் சுடும்.

துணைவேந்தர் பொபாலசுந்தரம்பிள்ளை சுறுசுறுப்பான நிர்வாகி. தமிழ் மொழி மூலம் பயின்று இந்தப் பதவிக்கு வந்தவர். அவரா இந்தச் செயலுக்கு உடன்போகிறார்? ஆங்கிலம் உலக அறிவுக்கு அவசியமானது என்ற கருத்து காலமாகிவிட்டது. பெரும்பான்மையான மொழிகள் இன்று எல்லாத்துறைகளிலும் முதிர்ச்சி பெற்று வருகின்றன. ஆங்கிலம் உலக மொழிகளில் ஏராளமாகக் கடன் வாங்கி தன்னை வளர்த்துக்கொண்ட மொழி இன்றும் அது அப்படியே கடன் வாங்கிக் கொண்டிருக்கிறது.

வளர்ச்சி பெற்ற மொழிகள் பிறமொழிச் செல்வங்களை தமது மொழிக்கு உடனுடன் கொண்டு வருகின்றன. தாய்மொழி பயில்வோருக்கு அதைக் கற்பித்து அந்தத் தடத்திலிருந்து அவர்களை வளர்த்து சிறந்த சிந்தனையாளர் களாக்குகின்றது. இணைப்பு மொழியாக ஒரு மொழியைப் பயிற்றுவது வேறு. தாய் மொழிப் பயிற்சியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்னொரு மொழியைக் கட்டாயமொழி ஆக்கி மாணவர்களின் மூளைக்குள் பாரம் சுமத்துவது வேறு. இது கொடுமை மோசமான துரோகம்.

தொழில் நுட்பம் இன்று உச்ச வளர்ச்சியடைந்துள்ளது. காதினுள் ஒரு கருவியைச் செருகிக் கொண்டால், கணப்பொ முதிலேயே மொழிபெயர்ப்பைக்கேட்டு, தாய்மொழியில் கூறுவதை மற்றொரு மொழிக்கு கொண்டு செல்லும் நுட்பம் நமக்கு கைவசப்பட்டிருக்கிறது. இணைப்புக்கும் அறிவுக்குமென எவரும் ஆங்கிலத்தைப் பயிலலாம். இப்படிப்பயின்று வந்த துணைவேந்தர்களும், பீடாதிபதிகளும் பேரா சிரியர்களும் தங்களின் பழைய காலத்தை எண்ணிப்பாக்க வேண்டும். இணைப்பு மொழி பயிற்று மொழிக்கருத்து நிலைகளை நிதானமாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்த வியாதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து மெதுவாக தமிழ் மாணவர்கள் பயிலும் கிழக்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கும் பரவுகின்றது எனத் தெரிய வருகின்றது.

இப்போதைய பல்கலைக்கழக மாணவர்கள் எந்தக் கொடுமையையும் பொறுக்காது கிளர்ந்து எழுபவர்கள். எந்த இழப்பையும் பொருட்படுத்தாதவர்கள். போராடுபவர்கள். அவர்கள் இந்த மோசமான போக்கினை ஒத்துக் கொள்ளுகிறார்களா? பொறுத்துக் கொண்டு அடிமை முறைக் கல்வியைக் கற்கப் போகிறார்களா? என்ன செய்யப்போகிறார்கள்?

தமிழுக்காக உயிரையே விடுவோம் என்று கூறும் அரசியல் வாதிகள் இதைப்பற்றி மௌனம் சாதிப்பது ஏன்? இது அவர்களுக்குத் தெரியாதா? தமிழுக்காக அமைக்கப்பட்ட அமைச்சும் திணைக்களங்களும் யாழ்பபாண, ஏனைய பல்கலைக்கழக தமிழ் விரோதப் போக்குகளுக்கு தலையாட்டி சம்மதம் கூறப் போகின்றனவா?

தமிழ் மக்கள் எந்த உரிமைகளுக்காக கடந்த பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்களோ, அவையெல்லாவற்றையும் குழிதோண்டிப் புதைப்பதற்குச்சமமானது அல்லவா இந்தச் செயற்பாடுகள்.

"கொன்றிமடல் போலொரு வார்த்தையைப்" பலரும் கூறலாம். ஆனால் அதனை நாம் பொறுக்காமல் நிராகரிப்பதும் செயற்படுத்துவதும் இன்றைய தேவையாய் நிற்ப்பந்தமுமாய் நிற்கிறது.

தொல்காப்பியன்

சமாதானம் தொடர்பாக அரசுக்குத் தேவையான பொய் முகம்

இன நெருக்கடிக்குத் தீர்வு காணப்படுவது தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை தரக்கூடிய ஒரு கட்டத்தை எட்டிய பின்னரே போர் நிறுத்தம் குறித்து பரிசீலிக்கப்படுமென்றும், வழமை நிலை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயப்படுமென்றும் அரசு உறுதியான நிலைப்பாட்டுடன் உள்ளதாகவும், இதுவே தென்னிலங்கையிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடென்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். அரசின் இன்றைய நிலைப்பாடும் இந்த நாட்டில் சமாதானச் சூழல் ஒன்றை எதிர் நோக்குவதென்பது மிகப் பாரியதோர் விடயமென்பதையே தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யுமாறு தொடர்ந்தும் சர்வதேச நாடுகளைக் கோருவோம். இந்த நடவடிக்கைக்கும் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்றும், அத்துடன் வெளிநாடுகள் வழங்கும் பெருமளவு நிதியைக் கொண்டே போர்த்தள பாடங்களைக் கொள்வனவு செய்து போர் நடவடிக்கையைத் தொடர வேண்டிய நிலையில் தங்கியிருப்பதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் முரண்பாடான, தெளிவற்ற கருத்துக்களையும் வெளியிட்டு வருவது இன்றைய அரசியல் நோக்கில் சமாதானம் பற்றிய சூழல் தொடர்பான கீறல்களையே உருவாக்குகிறது.

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் அனுப்பிவைக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான அரசின் இன்றைய நிலைப்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் மாவீரர்தின உரையில் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாக பிரபாகரன் விடுத்த சமாதானச் சமிக்ஞை மற்றும் நோர்வேயின் தூதுக்குழுவினருடனான நேரடிச் சந்திப்புக்கள் என்பன புலிகளின் இன்றைய நிலைப்பாட்டை விளக்குவதாக தெரிவித்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து ஒரு நம்பிக்கையளிக்கக்கூடிய கட்டத்தை அடைந்த பின்னரே போர்நிறுத்தம் தொடர்பாகவோ, வடக்கு கிழக்கில் வழமை நிலையை உருவாக்குவது தொடர்பாகவோ பேசமுடியும். ஏனெனில் 1994 - 1995 காலப்பகுதியில் 8 மாத காலங்கள் வரை தொடர்ச்சியாக இடம்பெற்ற சமாதானச் சூழலுக்கான பேச்சுவார்த்தைகளை உடைத்துக் கொண்டு வெளியேறியவர்கள் புலிகளேயென்றும் விளக்கமளித்துள்ளார்.

இதெல்லாவற்றிற்கும் அப்பால் கடந்த வெள்ளிக்கிழமை இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இலங்கையின் இனநெருக்கடி விவகாரம் தொடர்பில் கையாளப்படும் நடைமுறைகள், ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள், எதிர்கொள்ள வேண்டிய அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் உட்பட ஏனைய முக்கிய தலைவர்களுக்கும் விளக்கமளித்துள்ளார்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கடந்த நவம்பர் முதல்வாரத்தில் வன்னிக்குச் சென்று பிரபாகரனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்துத் தீர்வு முயற்சிகள் தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள நகர்வுகள் குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பான விடயங்கள் உட்பட இன நெருக்கடி விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு மற்றும் இரு நாடுகளும் இது தொடர்பில் இணைந்து செயற்படுவது எவ்வாறு என்பன தொடர்பான பல்வேறு விடயங்கள் பேசப்பட்டதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு ஆதரவாக இந்தியாவில் செயற்படுவோர் தொடர்பான அறிக்கையொன்றை இந்திய உள்துறை அமைச்சு தயாரித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இந்திய விஜயம் சர்ச்சைக்குரியதொன்றாகவே கருதப்படுகிறது.

இதைவிட இன நெருக்கடி தொடர்பில் சமாதான வெளிப்பாடுகள் கடுமையான சட்ட விதிகள் குறித்து இலங்கை அரச உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் மீதான தடையை மேற்கொள்ளுமாறு பிரிட்டனை இலங்கை அரசு கடந்த பல வருடங்களாக நிர்ப்பந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்தப் பயங்கரவாதச் சட்ட விதிகள் பிரிட்டனில் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது புலிகளுக்கு பெரும் பாதிப்பை உருவாக்குமென்றே நம்பப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க, மறுபுறம் லண்டனிலும், ஒஸ்லோவிலும் சமாதானப் பேச்சவார்த்தைகளை முன்னெடுப்பது தொர்பான ஆரோக்கியமான காய் நகர்த்தல்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் சில இராஜதந்திர வட்டாரங்கள் சுருத்துத் தெரிவித்துள்ளன.

தமது அமைப்பின் மீதான தடையை நீக்குவதன் மூலமே சமாதானப் பேச்சுவார்த்தையில் சுமுகமான நிலைப்பாடொன்றுடன் ஈடுபட முடியுமென விடுதலைப் புலிகள் நோர்வேயின் சமாதான முன்னெடுப்பாளர்களிடம் வலியுறுத்தி வருவதாகவும் தமது அமைப்பை, தடைசெய்யுமாறு சர்வதேச நாடுகளை இலங்கை அரசு கோரி வருகின்ற நிலையில் சமாதானப் பேச்சவார்த்தைகளை முன்னெடுப்பதில் எவ்வாறு கலந்து கொள்வதென புலிகள் இயக்கத்தினர் கேள்வியெழுப்பியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேநேரம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமொன்று 18, 19 ஆம் திகதிகளில் பிரான்சின் தலைநகர் பாரிசில் நடைபெறுகிறது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் கூடவிருந்த இக்கூட்டம் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் இலங்கையின் இன்றைய அரசியல், பொருளாதார நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது. எனவே இன்றைய சூழலில் இலங்கை அரசுக்கும், சமாதானம் தொடர்பான "பொய் முகம்" மிகவும் அவசியத் தேவையாகவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பொருளாதார நிலைமைகள் மிகவும் மோசமான ஒரு கட்டத்தை எட்டியுள்ள இன்றைய நிலையில், அதிகரித்து வரும் இராணுவ தேவைகளுக்கு வெளிநாடுகளில் கிடைக்கும் நிதி உதவியிலேயே தங்கியிருக்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலை தோன்றியிருக்கும் நிலையிலேயே பாரிசில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கையின் இன்றைய அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர்பாகக் கூடி ஆராய்கின்றன.

இந்த நிலைமைகளுக்கு அப்பால் நோர்வே முன்னெடுக்கும் சமாதான முன் முயற்சிகளைக் கைவிடாது தொடர்ந்து முன்னெடுக்குமாறு கோரி 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் சமாதானப் பேரணியொன்றை நடத்தியதுடன் ஊர்வலமாகச் சென்று நோர்வேத் தூதுவரிடம் மகஜரொன்றையும் கையளித்துள்ளனர்.

காணாமல் போன படை வீரர்களின் பெற்றோர், உறவினர்கள் உட்பட பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தோரே இந்தச் சமாதானப் பேரணியில் பெருமளவில் கலந்து கொண்டமை நல்லதோர் விடயமே என்ற போதிலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், பாரிசில் கலந்து கொள்ளும் இவ்வேளையில் தலைநகர் கொழும்பில் சமாதானத்தை வலியுறுத்தும் இவ்வாறான போக்குகளை அதிகரித்துக் காட்டும் உள்நோக்கங்களும் இருக்கலாமென்ற கருத்தையும் நிராகரிக்க முடியாது.

இதேவேளை அன்றைய தினம் விஹாரமஹாதேவி பூங்காவிற்கு அருகே வைத்து சமாதானம் தொடர்பான பதாதைகளை ஒன்று சேர்த்து குவித்து சிலவிஷமிகள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

வறுமையும், போரின் தீவிரமும் மிகவும் மோசமாக அதிகரித்துள்ள இலங்கையின் இன்றைய போக்குகளுக்கு தீர்வொன்றைக் காண நோர்வே முன்னெடுக்கும் சமாதானப் பாதையிலிருந்து விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் நழுவிச் செல்லுமாக இருந்தால் இலங்கையின் எதிர்காலம் சுடுகாட்டை விட மிக மோசமாகவே காட்சி தரும்.

> இலங்கையின் பொருளாதார நிலைமைகள் மிகவும் மோசமான ஒரு கட்டத்தை எட்டியுள்ள இன்றைய நிலையில், அதிகரித்து வரும் இராணுவ தேவைகளுக்கு வெளிநாடுகளில் கிடைக்கும் நிதி உதவியிலேயே தங்கியிருக்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலை தோன்றியிருக்கும் நிலையிலேயே பாரிசில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கையின் இன்றைய அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர்பாகக் கூடி ஆராய்கின்றன.

செந்தணலோன்

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம
தொலைபேசி எண் - 851672, 851814
விநியோகப் பிரிவு - 842064
தொலைமடல் - 851814

வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை வாசகருக்குண்டு.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம் எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வோடு எவரும் விளையாட வேண்டாம்

தேசிய இனப்பிரச்சினை காரணமாக எமது நாட்டில் யுத்தத் தீ பரவி நாடே அழிந்து கொண்டிருக்கின்றது. இத் தீச்சுவாலைகள் அணைக்கப்பட வேண்டும், இல்லையேல் இலங்கை சாம்பல் மேடாகிவிடும். தமிழர், முஸ்லிம் பிரச்சினைக்கான நியாயமான தீர்வுடன் கூடிய சமாதானமே இத்தீயை அணைக்கத்தக்க வழியாகும்.

எனவே சமாதானத்திற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. இதனைச் சமாதான விரும்பிகள் அனைவரும் வரவேற்கின்றனர், யுத்தத்தை விரும்புகின்றவர்கள் எதிர்த்து நிற்கின்றனர். தமிழர், முஸ்லிம்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என சமாதான விரும்பிகள் குரல் எழுப்புகின்ற அதேவேளை, தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக யுத்தமே ஒரே முடிவு என யுத்த விரும்பிகள் ஓங்கிக் குரல் எழுப்புவதுடன் நாம் பார்த்து ஏதாவது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு கொடுப்போம் எனக் குறைந்தபட்சத் திட்டத்தையும் முன்மொழிகின்றனர். தமிழ், முஸ்லிம் மக்கள் இன்று கையேந்தி உரிமை பிச்சை கேட்கும் நிலைமையில் இல்லை.

நாட்டின் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும். இரண்டு தசாப்தங்களாக யுத்தம் நடைபெறும் நாட்டில் சமாதானம் திடீரென வானத்தில் இருந்து இறங்கிவிடாது. இந்த யுத்தத்தின் காரணத்தையும் அதன் விளைவுகளையும் நாம் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். எனவே இதற்கமைவான முறையில் சமாதானத்திற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால், எமது அரசியல்வாதிகள் சமாதானப் பேச்சுக்களை வாயளவிலேயே பேசுகின்றனர். யுத்தத்தின் நிலைமையை விளங்கிக் கொண்டு இதய சுத்தியுடன் ஏதும் நடப்பதாக தெரியவில்லை. சர்வதேச சமூகத்தை திருப்திபடுத்தி கிடைக்கும் உதவிகளை பொறுக்கிக் கொள்ளும் நோக்குடனும் சமாதானம் பற்றி பேசப்படுகின்றது. இப்பொழுது முன்னெடுக்கப்படப்போகும் சமாதான பேச்சுவார்த்தையிலும் ஆழத்தைக் காண முடியவில்லை.

எனவே இது சம்பந்தப்பட்டவர்கள் இதனை நன்றாக விளங்கிக் கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். என்ன நடைபெறுகின்றது என்பது நாட்டு மக்களுக்கும், சர்வதேசிய சமூகத்திற்கும் நன்றாகத் தெரியும். மக்களையும், சர்வதேசிய சமூகத்தையும் சமாதானத்தின் பெயரால் ஏமாற்ற விளையக் கூடாது. கடந்த கால அனுபவங்கள் எம்முன்னே படிப்பினையாக இருக்கின்றது. யுத்தத்தை நியாயப்படுத்தி கூக்குரல் இடுவதால் பயனில்லை. சமாதானத்தைக் காட்டி ஏமாற்ற நினைத்தால் நாடு பாரிய எதிர் விளைவுகளையே சந்திக்கும். எனவே சமாதானத்திற்கான தீர்வோடு எவரும் விளையாடாமல் உண்மையான சமாதானத்திற்காக, புத்திசாலித்தனத்துடனும் இதயசுத்தியுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான புனர்வாழ்வு!

பாராளுமன்ற அங்கத்தவரொருவரின் செயற்குழுவிற்கு இன்னுமொரு கண்காணிப்பு உத்தியோகஸ்தர் நியமிக்கப் படவுள்ளார். கண்காணிப்பு உத்தியோகத் தர்களை நியமிப்பதினால் மாத்திரம் பாராளு மன்ற உறுப்பினர்களது செயற்பாடுகளில் ஆரோக்கியமான மாற்றங் களை ஏற்படுத்த முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களுக் கான செயற்குழுவை மேலும் அதிகரிப் பதற்குப் பதிலாகத் தற்போதுள்ள செயற் குழுவினரின் செயற்பாடுகளை மிகவும் நல்ல முறையில் செயற்படுவதற்கான நிலையொன் றை உருவாக்குவதே சிறந்ததாகும்.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினருக் கும் செயலாளரொருவர், தட்டச்சாளர் ஒருவர், ஒரு உதவியாளர் இருக்கின்றார்கள். ஒருவருக்கு இவ்வாறான செயற்பாட்டாளர்களை வழங்குவதன் நோக்கம் செயற்திறன் கொண்ட பொதுமக்கள் சேவையை ஊக்குவிப்பதற்காகும். இருந்தாலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரச உத்தியோகத்திலிருக்கும் மிகத் திறமையான உத்தியோகத்தர்களை நியமிப் பதற்கு பதிலாக அவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அவர்களிடம் வழங்கும் முறை யினுள், அந்த உத்தியோகத்தர்களை தமது குடும்ப அங்கத்தவர்களுள் இருந்தும் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுவதால் அவர்களுக்காக வழங்கப்படும் சம்பளத்தை பாராளுமன்ற அங்கத்தவர்களின் குடும்பத் திற்கான வருமானமொன்றாக மாற்றிக் கொள்ளும் நிலையொன்று உருவாகியுள்ளது. அதனால் நாட்டிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் அதிகமானவர்களுக்கு செயல்குழுவொன்று இல்லையென்றே கூற வேண்டும். பெயரளவில் மட்டும்தான் நிர்வாகக் குழுவொன்று உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களது செயற் திறனின்மைக்கு இது ஒரு காரணமாக அமைகின்றது. தாம் விரும்புபவர்களை நியமித்துக் கொள்வதற்குப் பதிலாக அரசால், அரச சேவையிலிருந்தும்

அவர்களை நியமிக்கும் முறையொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களது செயற் பாடுகளை செயற்திறன் கொண்டதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை பாராளு மன்ற உறுப்பினர்களுக்குச் சுங்க வரியற்ற ஆடம்பரமான வாகனமொன்றை வழங்கும் ஒரே நாடு இலங்கையாகும். செயற்திறன் கொண்ட பொதுமக்கள் சேவைக்கு நல்லதொரு வாகனம் அத்தியாவசியமானது என்ற கருத்து அவர்களுள் பொதுவாக இருந்த போதிலும், பாராளுமன்ற உறுப்பினர்களுள் அதிகமா னவர்கள் அந்த ஆடம்பரமான வாகனங் களைப் பொதுமக்கள் சேவைக்காக உபயோகப் படுத்திக் கொள்வதில்லை. அதற்குப் பதிலாக பெற்றுக் கொண்ட வாகனத்தை அதிகமான விலைக்கு விற்பனை செய்துவிட்டு சாதாரண மான வாகனமொன்றை விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர். இருந்தாலும் இந்த நாட்டுச் சட்டதிட்டத்தின்படி வாகனத்தை விற்பதோ அல்லது இன்னொருவருக்கு உரிமையாக்குவ தோ சட்ட விரோதமான செயலாகும். முழு நாட்டுக்கும் சட்டமியற்றுவது பாராளுமன்ற மாவதினாலோ என்னவோ இதுபோன்ற வாகனங்களை விற்பனை செய்வதற்கு எதிரான சட்டதிட்டங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் செயற்படு வதில்லை. சட்ட விரோதமாக இன்னொரு நிறுவனத்திற்காக சுங்க வரியற்றதாக வரவழைக்கப்பட்ட இரண்டு வானங்களை உபயோகத்ததற்கான சென்ற சில வாரங் களுக்கு முன்னர் சுங்கத் திணைக்களம் அரவிந்த த சில்வாவுக்கும், அவரது தந்தைக்கும் தலா ஒருவருக்கு முன்று இலட்சம் ரூபாவை அபராதமாகவும் விதித்தது. அத்துடன் ஆறு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு வாகனங்களையும் அரசுடமையாக் கியது. இருந்தாலும் அரவிந்த த சில்வாவுக்கு எதிராகச் செயற்பட்ட அந்தச் சட்டம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் செயற்படாவிட்டால் அது மிகவும் அநீதியான தாகும். பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆடம்பரமான வாகனங்கள் மீது ஆசை கொண்டிருக்கும் இந்த முறையை முழுமையாக வே மாற்றிக் கொள்ள முடியாவிட்டாலும், அனைவருக்கும் உரிமையாகாத முறையில் அரசாங்கத்தால் வாகனங்களைப் பெற்றுக் கொடுக்கும் முறையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் நடைமுறையிலுள்ள ஊழலில் மாற்றங் களையேற்படுத்திக் கொள்ள முடியும்.

விக்டர் ஐவன் எழுதுகிறார்

நாட்டில் இருக்கும் வருமானம் சம்பந்தமான சட்டதிட்டங்களின் படி, பாராளுமன்றத் தேர்தலுக்கு, மாகாண சபைத் தேர்தலுக்கு, போட்டியிடும் அனைத்து அங்கத்தவர்களும், தேர்தல் ஆணையாளருக்கு, தேர்தல்களின் மூலம் தெரிவாகும் எல்லா அங்கத்தவர்களும் குறிப்பிடப்பட்ட அதிகாரி களிடம் தனதும், தனது குடும்ப அங்கத்தவர் களினதும் சொத்துக்களும், வருமானங்களும் பற்றிய விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த சட்டத்திட்டங்களின் படி அந்த சொத்துக்கள், வருமானங்கள் பற்றி வங்கிக் கணக்குகளையும், காணிகள் பற்றிய விபரங்களையும் வாங்கிய அல்லது விற்பனை செய்யும் விபரங்களும் அடங்குதல் வேண்டும். சட்டத்தால் வற்புறுத்தியுள்ளபடி சொத்துக் களின் வருமானங்களின் விபரங்களைச் சமர்ப்பிக்காமலிருப்பது, அவைகளின் விபரங்களை அளிக்காமல் இருப்பது அல்லது தவறான விபரங்களைச் சேர்ப்பது சிறைத் தண்டனை பெறுவதற்குரிய குற்றமாவதோடு குடியுரிமை இல்லாமல் போவதற்கான குற்ற மாகும். சட்டத்தால் தனது வருமானம் பற்றிய விபரங்களை முன்வைக்கக் கட்டுப்பட்டிருக்கும் அனைத்து நபர்களும் முன்வைக்கும் விபரங்களைக் குறிக்கப்பட்ட பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள் வதற்கான உரிமை பொது மக்களுக்கு உண்டு.

அதிகாரத்திற்கு வரும்போது சாதாரண நிலையில் இருந்த சில அமைச்சர்கள் அதிகாரத்திற்கு வந்து சில வருடங்கள் செல்லும் போது பாரிய ஆடம்பரமான வீடுகளுக்கு உரிமை கொண்டவர்களாக இருப்பது அநீதியாகும். இவர்கள் இந்தக் குறுகிய காலத்தில் இந்தளவு பணத்தை எவ்வாறு உழைத்தனர் என்ற கேள்வி எழுகின்றது. இது போன்ற கேள்விகளுக்கு தெளிவான பதிலைப் பெற்றுக் கொள்வதற் கான சிறந்த வழி அவர்களது வருமான, சொத்து விபரங்கள் பற்றி ஆராய்ந்து பார்ப்பதேயாயினும் அது சம்பந்தமான விபரங்களைக் கோரும் ஜனாதிபதிக் காரியாலயத்தினால் வழங்கப்படும் பத்திரங்களுக்கு பதில் கூறும் நிலையில் இருந்தும் உறுப்பினர்கள் இதனை தவிர்த்து கொள்ளும் கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றனர்.

இங்கிலாந்தில் பாராளுமன்ற அங்கத்தவர் களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு பாராளுமன்றத்திலேயே விஷேமான அமைப்பு முறைகள் உண்டு. கிடைக்கும் குற்றச் சாட்டுக்களுள் விசாரணை செய்யுமளவுக்குப் பாரதூரமான நிலையில் உள்ள குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்து விபரங்களை பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படும்.

தொடர்ச்சி 15ம் பக்கம்



தேவதாசிகள் தொடர்பான இவ்வாய்வுக் கட்டுரை கலாநிதி செல்வி திருச்சந்திரனின் தமிழ் வரலாற்றுப் படிமங்களில் ஒரு பெண் நிலை நோக்கு எனும் புத்தகத்திலிருந்து வாசகர்களுக்காக தொடர்சியாக தொகுத்து வழங்கப்படுகிறது.

தொகுப்பாசிரியர்

தோவதாசிகள் தொடர்பான இத்தொகுப்புரை இந்த இதழுடன் முற்றுகிறது. இது தொடர்பான ஆரோக்கியமான விமர்சனங்களை வாசகர்களிடமிருந்து எதிர்ப்பார்க்கின்றோம்.

சுதேச கலாசாரத்தை தூய்மைப்படுத்தும் நாவலர்

யாழ்ப்பாணத்தில் தேவதாசிகள் வந்தது தொடர்பான விடயங்களில் சான்றுகள் எதுவும் அற்ற நிலையில் 10-10-1877ல் இலங்கை நேசன் பத்திரிகையில் வந்த செய்தி ஒன்று அங்கு இருந்த தேவதாசிகள் அமைப்பு பற்றி அறியத்தருகிறது. பல வருடங்களுக்கு முன்னர் வைத்தியலிங்கச் செட்டியார் என்பவரால் வண்ணார் பண்ணையில் சிவன் கோயில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அக்கோயிலுக்கு தேவைப்பட்ட பொருட்களோடு, இசையிலும் நடனத்திலும் தேர்ச்சி பெற்ற சிலரை யும் இந்தியாவில் இருந்து தருவித்தார். தைஸ்வரன் கோயிலில் தொடர்ந்து வாழ்ந்து வந்த இம்மக்கள் இங்கு நடனக்கலையில் ஈடுபட்டவர்களாய் இருந்ததோடு படித்தவர்களாகவும் இருந்தார்கள். அனேகமான இக் கணிகையர் கூட்டம் மிகத்திறமை வாய்ந்த நாட்டியக்காரர்களாவும். இசைத்திறமை மிக்கவர்களாவும் இருந்து வந்தனர்.

இக்கோயிலில் இருந்த தேவதாசிகள் வேறு கோயில் வைபவங்களின் போதும் கூலிக்கமர்த்தப்பட்டனர். இவர்களைப் பற்றிப் பத்திரிகையில் எழுதியவர் மேலும் விபரிக்கையில், நாகரத்தினம், கமலம், வேதக்குட்டி என்போர் வடமராட்சியில் உள்ள விஷ்ணு கோயிலுக்குச் சென்றனர். நாகரத்தினம் அங்கு ஏதோ கொடிய நோய்வாய்பட்டு இறந்து போனார். ஒரு முக்கிய சமூகத் தகவலுக்கு முன்னுரை யாக அமையும் இந்நிகழ்ச்சி இவ்வாய்வுக்குப் பொருத்தமானதாகும். இறந்துபோன நாகரத்தினத்துக்கு அஞ்சலி செலுத்தும் அதேநேரத்தில் இக்கடிதத்தின் கடைசிப்பகுதி, பேத்தியார், சித்தி, சித்தப்பா,மகள்மார் ஆகியோரைக் கொண்ட அக்குடும்பம் எவ்வாறு மரணச்சடங்கின் போது அழுதது என்பது பற்றி விபரிக்கின்றது. அம்மரணச் சடங்கில் அவளது தாயார் இல்லாமல் போனதற்குரிய காரணம் அவள் தாயாரும் அவளது சகோதரனும் வைசூரிநோயினால் சில வருடங்களுக்கு முன்னர் இறந்து போனமையாகும் என்றால் துக்கத்தில் பங்கு கொண்ட பிரதான உறவினர் கூட்டமானது தாய்வழி உறவை மையமாகக் கொண்ட இனக் கூட்டமாகும் என்பதையே இங்கு ஆய்வாளர் வலியுறுத்த விரும்புகிறார். இது தென்னிந்திய தாய்வழி வம்ச உரிமையைப் பேணும் தேவதாசிகளை நிவூட்டுவதாகும். கடிதத்தை எழுதிய பிரமுகர் இறந்த தேவதாசி நாகரத்தினத்தின் மறைவுக்காக வருந்தும் அதே வேளை அவளது உயர் குணங்களை போற்றி அவளை மாது சிரோன்மணி என்றும் மங்கை நல்லாள் என்றும் அவளது உணர் பண்புகளையும், குணங்களையும் காட்டும் வகையில் வார்த்தைகளால் வர்ணிக்கின்றார்.

இக்கடிதமானது கலையால் ஈர்க்கப்பட்ட கலை விமர்சகரது கலைச் சுவையைக் காட்டுவதோடு. அக்காலத்தில் தேவதாசியின் ஆடலுக்கிருந்த சமூக ஆதரவு பற்றியும் கூறுகிறது. பகிரங்கமாக ஒரு பத்திரிகையில் இவ்வாறு நடனம் பற்றிய நயத்திலும் அந்நடனத்தை அரங்கேற்றியவர் குணநலன்களை போற்றுவதும் சமூகரீதியாக தேவதாசிகள் அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தனர் என்பதையே காட்டுகிறது.

சோழர் காலத்தில் தென்னிந் தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட இப்பெண்களின் கலைத்துவ வளர்ச்சியானது அருகி வந்தமையையே இங்கு நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. தென்னிந்தியாவில் இன்றும் நடனத்துக்கும் கர்நாடக சங்கீதத்துக்கும் இருக்கும் முக்கியத்துவம் போன்று இங்கு காணப்படுவது மிகவும் அரிது. இவை இலங்கையில் இவை வீழ்ச்சியடை வதற்கு அரசர்களின் ஆதரவு இல்லாமல் போனதும், இலங்கை அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையாலும் அது தனது கலாசார சீரழிவுக்குள்ளானது. இச்சீரழிவுகளுக்கு பிரதான ஆதரவா ளராக இருந்தவர் ஆறுமுகநாவலர் ஆவார். சுதேச கலாசாரத்தை தூய்மைப்படுத்தும் அவரது போக்கானது மரபுக்குப் புறம்பான தன்மைகள் உடைய எல்லாவற்றையும் அப்புறப்படுத்தியது. இது சமயத்தை சீர்த்திருத்தியமைக்கு ஒப்பாகக் கொள்ளப்பட்டது. கிராம மக்களது சமயம், தாழ்த்தப்பட்ட மக்களிடையே காணப்பட்ட வழிபாட்டு முறைகள், பத்தினி வழிபாடு இவற்றோடு தேவதாசி முறையும் கீழ்த்தர மானவையாகக் கருதப்பட்டதால் அவை இந்து சமயத்திலிருந்து அமைப்பு ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் அகற்றப்பட வேண்டும் என நினைத்தார். சைவசமயமே அவரது இந்து சமயமாக இருந்ததால் இது புதிய ஒழுக்க இசைவேற்பாடுகள் மூலம் மேன்மைப் படுத்தபட வேண்டும் என நினைத்தார். சிறு பாரம்பரியமும் அதன் வழி வந்த கீழானதாகக் கருதப்பட்ட கலை வடிவங்களும் சீரழிவைத் தருவனவாகப் பரிகசிக்கப்பட்டன. தேவதாசி ஒழுக்க மற்ற பெண் என்ற ஒருதரப்புவாதங்கள் அவரால் முன் வைக்கப்பட்டன. ஆண்களை அழிவுக்கு இட்டுச்செல்லும் வக்கிரமிக்க பெண்களாக தேவதாசிகள் குறிக்கப்படுகின்றனர்.

தேவதாசி என்பவள் ஆண்களை கீழான உணர்வுகளுக்கு வசியப்ப டுத்துபவள் என்றும் கருத்துவடிவம் யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் பல விளைவுகளை ஏற்படுத்தியது. இதனால் தேவதாசிகள் நாட்டியமுறை மீளாக்கம் செய்யப்பட்டு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பரத நாட்டியமாக மாறிய பின்னரும் நாட்டியத்தில் ஈடுபடுவது ஒரு பகீரதப் பிரயத்த னமாகவே யாழ்ப்பாணப் பெண்களுக்கு இருந்தது. இந்தச் சமூகத்தடை அதிக காலம் நீடித்ததால் யாழ்பாபாணத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் ஆண்களே பெண்வேடமும் தரித்தனர். தேவதாசி பற்றிய தரக்குறைவான கருத்துவடிவமே நாடகத்துறையைப் பாதித்தது. எல்லாவற்றுக்கும் தேவதாசிக் கருத்துவடிவமே மிகுந்தபாதிப்பைக் கொடுத்தது.

இதனாலேயே பரதநாட்டியத்தில் யாழ்ப்பாணப் பெண்களுக்கு ஆர்வமிருக்கவில்லை. ஆனால் கொழும்பில் வசித்த தமிழ்ப் பெண்களும் சிங்களப் பெண்களும் இத்துறையில் மிகவும் ஆர்வம் காட்டி அதனை முதலில் ஏற்றுக்கொண்டனர். தென்னிந்தியச் செல்வாக்கால் இவர்கள் ஈர்க்கப்பட்டனர். 1960 பின்னர் வேகமாக இந்நிலை அபிவிருத்தியடைந்தது.

முற்றும்.

சுதர்சினி

தமிழ் மக்களின் இரத்தக் கண்ணீரும் ஜே.வி.பியின் நீலிக்கண்ணீரும்!

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆதவன் பத்திரிகையின் டிசம்பர் 10ம் திகதி 26ம் இதழில் இனப்பிரச்சினையில் தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். அது பற்றிய எனது கருத்தை ஆதவன் பத்திரிகை மூலம் வாசகர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

வீரவன்ச அவர்கள் தனது கட்டுரையில் தமிழ் மக்கள் மத்தியில் தமது கருத்துக்கள் சென்றடைவதில் உள்ள கஷ்டநிலை பற்றி ஆதங்கப்படுகின்றார். ஒருவர் தானும் தமது கருத்தைப் புரிந்து கொண்டால் அதுவே நாட்டின் ஒற்றுமைக்குப் பிரயோசனமாக இருக்கும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தமிழ் மக்கள் ஏன் ஜே.வி.பி.யின் கருத்தைக் கேட்பதற்குக் கூடத் தயார் இல்லாத நிலையில் இருக்கிறார்கள் என்பதற்கான காரணத்தை இன்றும் கூட அவர்களால் அறிய முடியாமல் இருப்பது அவர்களது அரசியல் தத்துவார்த்தக் கோளாற்றையும் வெறுமையையுமே எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால் மேற்படி கட்டுரையில் வீரவன்ச தமிழ் மக்கள் தமது கருத்துக்களைக் கேட்க மறுப்பதற்கு இரண்டு காரணங்களைக் கண்டு பிடித்துக் கூறுகின்றார். ஒன்று முழுத் தமிழ்ச் சமூகமும் உக்கிர மடைந்துள்ள தேசியப் பிரச்சினையுள் முழுமையாக அமிழ்த்தப்பட்டிருக்கின்றனர். இரண்டு தீவிர இனவாதக் கருத்துக்கள் அம் மக்கள் அனைவரினதும் கருத்தாக மாற்றியமைப்பதற்கு யுத்த ரீதியில் பலம் வாய்ந்த இனவாத இயக்கத்திற்கு முழியுமாயிருக்கின்றது. இவ்வாறு வீரவன்ச கூறுவதன் மூலம் தமிழ் மக்கள் அனைவரும் ஏதோ ஏமாந்து போய் இனவாதத்திற்குப் பலியாகி நிற்கின்றனர் என்னும் குற்றச்சாட்டையே சுமத்துகிறார்.

மேலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதற்கு மிகவும் வேடிக்கை தரும் விதத்தில் விளக்கம் தருகிறார். அதாவது "பொது சமூக அநீதியும் சமத்துவமின்மையும் சிறுபான்மை மக்களுக்கு விஷேடமாகத் தென்படுகின்றன என்று கூறித் தமிழ் மக்கள் மீது பார்வைக் கோளாறு ஏற்பட்டிருப்பதுதான் பிரச்சினைகளுக்கு காரணம் என்றும் கூறுகிறார். அது மட்டுமன்றி பொதுச் சமூக அநீதியும், சமத்துவமின்மையும், ஜனநாயக மறுப்பும் இல்லாதொழிக்கப்படும் திசையில் சென்றால் அதாவது ஜே.வி.பி. கூறும் சோஷலிசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்குப் பின்னால் மட்டும் சென்றால் தமிழ் மக்கள் பார்வைக் கோளாறு உட்படச் சகல பாவ தோசங்களில் இருந்தும் விமோசனம் பெற்று விட முடியும் என வீரவன்ச உபதேசம் செய்கிறார்.

அத்துடன் தமிழ்க் கட்சிகள் நோர்வே நாடு உட்பட மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி பூகோளமயமாக்கல் "சுரண்டல்" "பிரிவினைவாதத்திற்கு உதவுதல்" போன்ற குற்றப் பிரிவுகளைக் காட்டி குற்றப் பத்திரிகை வாசித்தளிக்கும் வீரவன்ச இலங்கையில் இனவாதத்தைத் தோற்றுவித்து இன்றைய பேரினவாத இராணுவ ஒடுக்கு முறையாக வளர்தெடுப்பதில் முன்னின்ற பௌத்த சிங்கள இனவாதிகள் பற்றி மறந்தும் கூட ஒரு சொல்லாவது உச்சரிக்கவில்லை. அது தற்செயலானது அல்ல. அங்கே தான் கடந்த தேர்தலில் ஜே.வி.பி. பத்து ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட இரகசியம் மட்டுமன்றி தேர்தலுக்கு முன்பு மகா சங்கத்தின் பீடாதிபதிகளின் முன்னால் வீழ்ந்து வணங்கி அதனைப் படப்பிடிப்புகள் மூலம் பிரசாரமாக்கியதன் மர்மமும் மறைந்திருக்கின்றது.

மேலும் தனது கட்டுரையின் ஓரிடத்தில் தமிழ் மக்களுக்கு சில பிரச்சினைகள் ஒடுக்கு முறைகள் இருக்கின்றன என ஒப்புக்குக் கூறி விட்டு அதற்கு அப்பால் சென்று இவ்வாறு கூறுகிறார். "அப்பிரச் சினையானது சில வெளிநாடுகள் போன்று கண்ட இடத்தில் படுகொலை செய்து கொள்கின்ற நிலைக்கு உக்கிரமடையவில்லை." இவ்வாறு கூறுவதன் மூலம் கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம் பெற்றுவரும் திட்டமிட்ட இனப் படுகொலைகளையும், இன அழிப்புகளையும் மறைத்துக் கட்டி பேரினவாத வெறியர்களின் செயல்களைத் தற்செயல் சம்பவங்களாகக் காட்ட முற்படுகின்றார்.

ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரின் கட்டுரை யின் சாராம்சம் தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று திட்டவட்டமான ஒடுக்கு முறை சம்பவங்களோடு இலங்கையில் இல்லை என்பதேயாகும். அவ்வாறானால் அதற்கொரு தீர்வு என்பதே இருக்க முடியாது என்பதாகும். இத்தகைய நிலைப்பாடு இப்பொழுது மட்டுமன்றி ஜே.வி.பி.யின் தலைவரான மறைந்த றோஹண விஜயவீர காலத்தில் இருந்தே கடைப்பிடிக்கப்படும் ஒன்றாகும்.

ஆனால் இங்கே உள்ள வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் இவ் ஜே.வி.பியினர் தங்களை மார்க்சியவாதிகள் என்றும் புதிய இளம் இடதுசாரிகள் என்றும் தாமே இலங்கையில் சோஷலிசத்தைக் கொண்டு வந்து கொலுவேற்றப் போவதாகவும் கூறி வருவது தான் மாமேதை லெனினம் கூறினார். மார்க்சிய வாதியையும் சோஷலிசம் பேசுபவர்களையும் அளவிடுவதற்கு உரிய அளவு கோல், அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதிலிருந்து அல்லாது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதிலிருந்தே அளவிட வேண்டும்." இதுவே இன்றைய ஜே.வி.பியினரை அளந்து கொள்வதற்குத் தகுதியான அளவுகோலாகும். பேரினவாத ஒடுக்கு முறைக்கு உள்ளாகி வாழ்விழந்து நிற்கும் தமிழ் மக்களுக்கும் பேரினவாத ஒடுக்கு முறை யைக்கண்டு கொள்ள மறுக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான தூரம் மிக மிக அதிகமானதாகும். இதுவே இன்றைய யதார்த்தம். இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் விமல் வீரவன்ச உள்ளிட்ட எந்த ஜே.வி.பி. தலைவர்களுக்கும் இல்லை என்பதே உண்மையாகும்.

சி. கா. செந்தில்வேல்,
பொதுச் செயலாளர்,
புதிய ஜனநாயக கட்சி.

சமாதான முன்னெடுப்பும் போர் முஸ்தீபும்!

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் தினத்தன்று ஆற்றிய உரைக்கு மூன்று வாரங்களின் பின்னர் அரசு பதிலளித்துள்ளது. நோர்வேயின் அனுசரணையுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு புலிகள் தயாரா யிருப்பதாக அவர் கூறியிருந்தார். இந்த நிலையில் அரசும் பேச்சுக்களுக்குத் தயாராகும் அறிகுறிகள் தென்படுகின்றன. யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டுக் கொண்டும் சர்வதேச ரீதியில் புலிகளை தடைசெய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தவாறும் சமாதானப் பேச்சுக்களுக்கு தானும் தயாரென கூறியுள்ளது. இலங்கை அரசின் இந்த நிலைப்பாட்டை கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மாவீரர் தினத்தில் பிர பாகரன் ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து எழுப்பிய சந்தேகங்களும் அது குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்களும் உண்மையில் அரசு இந்தச் சமாதானப் பேச்சுக்களில் நம்பிக்கை கொண்டுள்ளதா அல்லது நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயாரென அறிவித்திருக்கும் புலிகளின் நிலைப்பாட்டால் சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்திலிருந்து நிலைமையை திசை திருப்ப முயல்கின்றதா என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காணவேண்டுமாயின் அது, இலங்கையில் அரச படைகளுடன் போரில் ஈடுபட்டிருக்கும் புலிகளுடன் பேசுவதன் மூலமே சாத்தியப்படுமென சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ளது. அண்மைக்கால கள நிலைமைகள், புலிகள் தோற்கடிக்கப்பட முடியாததோர் மரபு வழிப் படையணி என்பதை உணர்த்தியுள்ளது. அத்துடன் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் வெளியுறவுத் துணை அமைச்சர் பீற்றர் ஹெய்ன் தெரிவித்த கருத்துக்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. இலங்கை படையினருக்கு இணையான சக்தியாக புலிகள் வளர்ந்துவிட்டனர். எதிர்வரும் காலங்களில் இந்தப் படைச்சம நிலையில் மாற்றம் ஏற்பட்டு புலிகளின் களநிலைவலு அதிகரித்து விடலாமென்ற எச்சரிக்கையும் வெளிநாட்டு இராணுவ நிபுணர்களாலும் விடுக்கப்பட்டுள்ளது. வெறுமனே சக்திமிக்க ஆயுதங்களை மட்டும் நம்பியிராது புலிகள் தந்தி ரோபாயம்மிக்க தாக்குதல் திட்டங்களையும் வகுத்து படையினரின் வலுமிக்க தளங்களினுள் நுழைந்து வெற்றிகரமாக தாக்குதல்களை நடத்தி பேரிழப்புகளையும் ஏற்படுத்தி வருவதையும் அவர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்த நோர்வே முயன்று வருகையில், புலிகளைத் தடை செய்ய வேண்டுமென பிரிட்டன் உட்பட பல்வேறு நாடுகளிடமும் இலங்கை அரசு கோரிக்கை விடுத்து வருவது சமாதானப் பேச்சுக்களின் எதிர்கால நிலைமை குறித்து ஐயப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. தங்கள் அமைப்பைத் தடை செய்துவிட்டு பேச்சுக்களை நடத்துவதென்பது சாத்தியப்படாததொன்றென்பதுடன் அப்பேச்சுக்கள் முன்னைய பேச்சுக்கள் போன்று அர்த்தமற்றதாய்ப் போய் விடுமெனவும் புலிகள் கூறியுள்ளனர். எனினும் தடை செய்யப்பட்ட நிலையில் புலிகளுடன் பேசுவது, சமாதானப் பேச்சுக்களை எவ்விதத்திலும் பாதிக்காதெனக் கூறிவரும் அரசு, தற்போது பேச்சுக்களுக்கு முன்னர் புலிகள், தமிழீழக் கோரிக்கையை கைவிட வேண்டுமெனவும் வலியுறுத்த முற்பட்டு வருகிறது. அத்துடன் பேச்சுக்கள் சுமுகமாய் நடைபெறு வதற்கு இருதரப்பும் மேற்கொள்ள வேண்டிய சில விட்டுக்கொடுப்புகள் என நோர்வே தெரிவித்த யோசனையையும் நிராகரிக்கவும் முற்பட்டுள்ளது.

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக புலிகள் அல்லது அவர்கள் சார்பாக கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கப்பட்டால் அவையெல்லா வற்றையும் நிபந்தனைகளாகவே கருதுவோமென பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க கூறிவருகிறார். இதே போன்றே பேச்சுக்கள் ஆரம்பமா வதற்கு முன்னர் விட்டுக்கொடுப்புகள் என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறும் அரசு, பேச்சுக்கள் நல்லதோர் சூழ்நிலைக்கு வந்து சமாதானம் தோன்றலாமெனக் கருதப்படும்பட்சத்தில் சில விட்டுக் கொடுப்புகள் குறித்து பரிசீலிக்கலாமெனவும் தெரிவித்துள்ளது. பேச்சுக்கள் ஆரம்ப மாவதற்கு முன்னர் புலிகள் பலமானதோர் சக்தியாய் இருக்கிறார் கள் என்பதை சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் அரசு இதனை ஏற்றுக் கொள்வதாயில்லை. ஆனையிறவு படைத் தளத்தை கைப்பற்றி குடா நாட்டினுள் நுழைந்த புலிகளால் அதன் பின்னர் கடந்த ஆறு மாதங்களாக குறிப்பிடத்தக்க வெற்றிகள் எதனையும் எட்ட முடியவில்லை என அரசு தரப்பில் கணக்கிடப்படுகிறது. பல்வேறு

நாடுகளிலுமிருந்து படையினருக்கு வந்து சேர்ந்த ஆயுதங்களும் தற்போது வந்து கொண்டிருக்கும் கடற்படைக் கலங்கள் உட்பட பல ஆயுதங்களும் புலிகளை பின்தள்ள போதுமானவை

என படையினரும் நம்புகின்றனர். இதனால் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதை விட தற்போதைய நிலையில் அவர்களுக்கெதிராக படை நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசுக்கு சாதகமான பலனைத் தருமெனக் கருதுகிறது.

படையினரின் இந்தக்

கருத்துக்களை வலுவூட்டுவது போல் அண்மைக் காலங்களில் தென்மராட்சி பகுதியில் பெற்ற சில வெற்றிகளை அரசு தரப்பும் தீவிரமாக ஆராய் கிறது. தென்மராட்சியில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட ஐந்து படை நடவடிக்கைகளில் படையினர் பெற்ற வெற்றி மிகச் சொற்பமே என்பதை சிலர் சுட்டிக்காட்டுகின்ற போதிலும், புலிகள் இன்று பலம்மிக்கதோர் சக்தியாக இருக்கையில் இந்த வெற்றிகள் குறிப்பிடத்தக்கவையே என இராணுவ தரப்பில் கருதப்படுகிறது. இதனால் மேலும் மேலும் படை நடவடிக்கையை தொடர்வதன் மூலம் படிப்படியாக தென்மராட்சி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து பின்னர் குடா நாடு முழுவதையும் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து விடலாமெனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன. இது எந்தளவுக்கு சாத்தியப்படுமென்பது, தற்போது குடாநாட்டில் மௌனமாயிருக்கும் புலிகளது அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தேயிருக்கும். ஓயாத அலைகள்-4 தாக்குதலை சற்றுத் தளர்த்தியிருக்கும் புலிகள் படையினரின் தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் தொடர அனுமதிப்பார்கள் என்பது எவரும் அறியாத புதிராகவேயுள்ளது. பேச்சுக்களுக்கு முன்னர் அல்லது பேச்சுக்களின் போது படையினரின் நடவடிக்கைகள் தொடருமாயிருந்தால் புலிகளின் பதிலடியும், பாய்ச்சலும் தொடருமென்பதில் சந்தேகமில்லை. சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக குடாநாட்டில் தங்கள் நகர்வுகளை தளர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கூறியுள்ள பிரபாகரன் எப்படியும் விரைவில் யாழ். குடாநாட்டை மீளக் கைப்பற்றிவிடு வோமென ஆணித்தரமாகக் கூறியி ருப்பதன் மூலம் புலிகள் தங்கள் நிலைப்பாட்டில் எவ்வளவு உறுதியாயிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

வெறுமனே, போரினால் ஏற்படும் அழிவுகளை தடுத்து நிறுத்தி நாட்டில் நிலையானதோர் சமாதானத்தை உருவாக்க சர்வபேஷமும் முன்வருகையில் இங்கு பேச்சுக்கள் நடத்தும் ஒரு தரப்பு தெரிவித்து வரும் கருத்துக்கள் அந்தச் சூழ்நிலையை மட்டுமன்றி சுமுகமானதோர் நிலையில் பேச்சுக்கள் ஏற்படுவதையும் தடுத்து நிறுத்தி விடுமே என்ற சந்தேகத்தையே கிளப்பியுள்ளது. இதைவிட குடா நாட்டிலும் குடா நாட்டுக்கு வெளியேயும் படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல் ஏற்பாடுகள் புலிகளையும் தீவிரமாக போரை நடத்தும் சூழ்நிலையையே உருவாக்கி வருகிறது. பேச்சுக்களுக்கு முன்னர் அல்லது பேச்சுக்களின் போது குறிப்பிடத்தக்களவு இராணுவ வெற்றியை பெற்றுவிட வேண்டும் அல்லது பேச்சுக்கள் தொடர்ந்தும் சுமுகமாக நடைபெறும் வாய்ப்புகள் குறையும் போது புலிகளுக்கெதிராக பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு பெறும வெற்றிகள் மூலம், சமாதானப் பேச்சுக்கள் சாத்தியப்படாதுபோனாலும் இனிவரும் காலத்தில் படையினர் இராணுவ ரீதியில் பலமடைந்து புலிகளுக்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுப்பர் என்பதை காட்டும் முனைப்புகளிலும் அரசு தீவிரமாக இறங்கியுள்ளதாகவே தென்படுகிறது. எனினும், அரசும் படையினரும் கருதுவது போல் புலிகளின் நிலை இல்லை என்பதே உண்மை. அவர்கள் இன்று, பாரிய மரபு வழிச்சமர் தொடுக்கக் கூடிய இரண்டாவது சக்தியாக நாட்டில் விளங்குவதை அனைத்துலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது. நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு அவர்கள் முன்வந்ததன் மூலம் இராணுவ ரீதியில் தாங்கள் மிகப் பலம் வாய்ந்த நிலையிலிருப்பதை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இதனை அர சும், படையினரும் உணர்கிறார்களோ இல்லையோ அனைத்துலகமும் உணர்ந்துள்ளது. புலிகளின் உண்மையான பலம் என்பதை தேவையேற்படின் அவர்கள் நிரூபித்துக் காட்ட தயங்கமாட்டார்கள் என அவர்களது ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கூறியுள்ளார். இதனால் பேச்சுக்களா? போரா? என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலையில் இன்று அரசே உள்ளது என்பதுதான் உண்மை.

யாழ். மக்களுக்கு மறுக்கப்பட்ட மனித உரிமை தினமும் சீரற்ற போக்குவரத்தும்

டிசம்பர் 10ம் திகதி அனைத்துலக மனித உரிமைகள் தினம். ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள பேச்சு, எழுத்து, நடமாடும், விரும்பிய மதத்தைப் பின்பற்ற உள்ள உரிமைகளை வலியுறுத்தும் நாள். உரிமைகளை இழந்து நிற்கும் மனிதர்களுக்கும், இனங்களுக்கும் அவற்றை நினைவூட்டி நிலைத்து நிற்கும் நாள்.

இத்தகையதொரு முக்கியத்துவம் வாய்ந்த நாளில் யாழ்ப்பாணத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட மத நிகழ்வு ஒன்றுக்குப் பாதுகாப்புக் காரணங்காட்டப்பட்டு இறுதி நேரத்தில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஞாயிற்றுக் கிழமை யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க மக்கள் ஒரு சமாதானத்தை வேண்டி திருச்செபமாலைப் பேரணியொன்றை நடத்தவிருந்தனர்.

யாழ். மறை மாவட்ட நீதி, சமாதானக் குழுவின் ஏற்பாட்டில் அருட் திரு. பேணாட் அடிகளாரின் தலைமையில் இப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. புனித அடைக்கல நாயகி தேவாலயத்தில் இருந்தும், புனித யாகப்பர் தேவாலயத்தில் இருந்தும் சமாதானத்துக்காகப் பிரார்த்தித்துக் கொண்டு பேரணியாக யாழ். மரியாள் பேராலயத்துக்குச் சென்று அங்கே வழிபாடுகளை மேற் கொள்வதே ஏற்பாடாக இருந்தது.

ஊர்வலம் நடத்துவதற்கு இப் பேரணியில் கத்தோலிக்க மக்களை ஒன்று திரட்டி ஊர்வலம் நடாத்துவதற்கு பொலிசாரிடம், அனுமதி பெறப்பட்டிருந்தது. இந்தச் செபமாலைப் பேரலையானது எந்தவொரு அரசியல் கலப்பற்றதாகவும், அமைதி பூர்வமானதாகவும், கோஷங்களையோ சுலோகங்களையோ கொண்டிராத, முற்றிலும் மத ரீதியான வழிபாட்டுப் பேரணியாகவே ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது.

ஆனால் நான்கு நாட்களுக்கு முன்னதாக இப்பேரணிக்கு வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போதைய பாதுகாப்புச் சூழலில் இவ்வாறான பேரணிகளுக்குரிய அனுமதிகளை வழங்க முடியாதெனவும் பொலிசார் ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்தனர். இதனால் இந்த திருச்செப மாலைப் பேரணி கைவிடப்பட்டது.

மனித உரிமைகளை வலியுறுத்தும் தினத்திலேயே யாழ்ப்பாணத் தமிழரின் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கிறது. கத்தோலிக்க மக்களின் மத உரிமைகள் மிரட்டப்பட்டிருக்கின்றது. ஒரு மத நிகழ்வுக்கே அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறதென்றால் யாழ்ப்பாணத்தின் மனித உரிமைகள் எந்தளவில் மீறப்பட்டிருக்கின்றது என்பதை தெளிவாக அறிய முடிகின்றது. தற்போது குடா நாட்டின் பாதுகாப்பு நிலைகள் தமது முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் அரச தரப்பு சமாதானத்தை வேண்டி நடத்தப்படவிருந்த, திருச்செபமாலைப் பேரணிக்குத் தடை விதித்திருப்பதானது சமாதானம் குறித்த அரசின் நிலைப்பாட்டைக் கேள்விக்குரியதாக்கியுள்ளது.

இது இவ்வாறிருக்க, யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் மீண்டும் கடுமையாகத் தலைதூக்கியுள்ளன. 1990களின் பின்னர் யாழ்ப்பாண மக்கள் வெளிமாவட்டங்களுடனான பாதுகாப்பான பாதைத் தொடர்புகளை நிறுத்தி விட்டனர். தரைவழிப் பாதைகள் மூடியிருந்த நிலையில் கிளாலி கடல் நீரேரிப் பயணம் ஆரம்பமானது.

அங்கும் கடற்படையினர் தாக்குதல் நடத்த இரத்தக் களரியான பயணங்கள் தொடர்ந்தன. இப்போது யாழ்ப்பாணக் குடா நாடு படையினரின் வசம் வந்து சுமார் ஐந்து வருடங்களாகின்றது. ஆனாலும் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்குப் போக மக்களால் முடியாதுள்ளது. பயணம் செய்ய விரும்பும் ஒருவர் விண்ணப்பப் படிவத்தைப் பெற கியூவில் நின்று ஆரம்பித்தால் கிராம அலுவலர், பிரதேச செயலர், அருகிலுள்ள படைமுகாம் பொறுப்பதிகாரி என கையொப்பம் பெற வேண்டியவர் பட்டியல் நீண்டு பின்னர் பிரிகேட் அலுவலகத்தில் அல்லது சிவில் அலுவலகத்தில் படிவத்தை ஒப்படைத்துப் பாதுகாப்பு அனுமதிக்குக் காத்திருக்க வேண்டும். அனுமதி கிடைத்தால் விமானப் பயணமாயின் வேறொரு விண்ணப்பமும், பாதுகாப்பு அனுமதியும் தேவை. அனுமதி கிடைத்தாலும் உடனே பயணம் செய்ய முடியாது.

ஓகஸ்ட் மாதத்தில் அனுமதி பெற்றவர்கள் கூட இன்னமும் பயணவசதியின்றி இருக்கின்றனர். செஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் இடம் பெற்ற கப்பல் சேவைகள் கடற் நேரத்தில் காங்கேசனில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டதுடன், அவர்களுக்குப் பதிலாக விடுமுறையில் சென்ற படையினர் ஏற்றிச் செல்லப் பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வாறு சென்ற கப்பல் திருமலையில் சுமார் 2500 பயணிகள் காத்திருந்த போதும் அவர்களில் ஒருவரையேனும் ஏற்றாமல் படையினரை மட்டும் ஏற்றிக் கொண்டு வடக்கே சென்றது. இதே நடைமுறை இரண்டாவது சேவையாலும் பின்பற்றப்பட்டது. இதனால் யாழ். செல்லக் காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் காத்துக் கிடந்தனர். மூன்றாவது கப்பல் சேவையில் தான் ஆயிரம் பயணிகள் ஏற்றிச் செல்லப் பட்டுள்ளனர்.

இவ்வாறாக, பாதி பயணிகளுக்காகவும் மீதி படையினருக்காகவும் நடைபெறும் கப்பல் சேவையில் பயணச்சீட்டுப் பெறுவதென்பது குதிரைக் கொம்பான விடயமாகவே உள்ளது. புதிய கூட்டரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் சிவில் நிர்வாகக் காரியாலயங்களிடம் இருந்த பயணச் சீட்டு வழங்கும் பொறுப்புகள் வட மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை (நான்) யிடம் மாற்றப்பட்டது.

இதன் பின்னர் பொது மக்களுக்கு ஏகப்பட்ட சிரமங்கள், நெருக்கடிகள்

கொந்தளிப்பினால் இடை நிறுத்தப்பட்டதை அடுத்துக் குடா நாட்டிற்கான பயண வசதிகள், பெரிதும் சீர்குலைந்து போயிருக்கிறது. இவ் நெருக்கடியைச் சமாளிக்கவே "லங்கா முதித்த" சரக்குக் கப்பல் மூலம் பயணம் செய்யும் ஒழுங்குகள் செய்யப்பட்டன.

இந்தக் கப்பற் சேவையானது குடா நாட்டுப் பயணிகளின் நன்மை கருதியா? அல்லது படையினரின் பாவனைக்காகவா நடத்தப்பட்டது என்ற கேள்வி எழும் வகையில் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. காங்கேசன்துறையில் இருந்து லங்கா முதித்த முதல் சேவைக்காக புறப்பட்ட போது 1250 பயணிகளுக்கு பயணச் சீட்டுகள் வழங்கப் பட்டிருந்தன. ஆனால் பயணத்துக்காக புறப்பட்டுச் சென்ற சுமார் 550 பேர் இறுதி ஏற்பட்டிருப்பதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர். படையினரின் வசம் அதிகாரம் உள்ள நிலையில் இவ்வாறான நிர்வாகப் பகிர்வு நடவடிக்கைகள் வீண் கால விரயத்தையும், சிரமங்களையுமே அதிகரிக்கச் செய்துள்ளது. அத்துடன் பயணச் சீட்டு வழங்கும் விவகாரத்தில் குளறுபடிகள், மோசடிகள் நிலவுவதாகவும் பயணிகள் அலுத்துக் கொள்கின்றனர்.

வர்த்தகர்கள் மற்றும் அரசியல் சார்படையவர்களின் சிபாரிசுகளுக்கு முன்னுரிமை கிடைப்பதும், பயணச்சீட்டு வாங்கிக் கொடுக்கும் தரகர்களும் அதிகமாக செல்வாக்குச் செலுத்துவதால் நியாயனமான நிதியில் பயணச் சீட்டுப் பெற முனையும் அப்பாவிப் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். அண்மையில் யாழ். ரயில் நிலையத்தில் பயணச்சீட்டு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த போது நியாயபூர்வமற்றவகையில் சிலர் பயணச் சீட்டுக்களைப் பெறமுனைந்தபோது அதற்கு ஒத்துழைத்த பொறுப்புவாய்ந்த அதிகாரி சில இளைஞர்களால் தாக்கப்பட்டார்.

இதனால் அவரது சேட் கிழிந்ததும் அதன் பின்னர் அப்பகுதியில் இருந்த சீருடை யினரால் பல பொதுமக்கள் தாக்குதலுக் குள்ளானதும் குறிப்பிடத்தக்கது. மறுநாள் இத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட படையினர் உயரதிகாரிகளால் விசாரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதையடுத்து மறுநாள் பயண ஒழுங்கு நடவடிக்கைகளில் பொது மக்கள் முண்டியடித்த போதும் பொலிசாரோ, படையினரோ அதை முறைப்படுத்த முன்வர வில்லை. ஆக சிவில் நிர்வாக அலுவலகத்திடம் இருந்து இந்த விவகாரம் நாளுக்கு மாற்றப் பட்டமை சில கசப்புணர்வுகளைப் படையதி காரிகள் மத்தியில் ஏற்படுத்தியிருக் கின்றது. பயணச் சீட்டு வழங்கும் விவகாரத் தில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளை அடுத்து மீண்டும் இப்பொறுப்பு சிவில் நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் சில செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

விமானப் பயணம் என்பதும் இதைவிடப் பெரிய தலையிடியான விடயமாக இருக் கிறது. திடீரென பயணங்களை இரத்துச் செய்து, வேண்டியவர்களை அதில் அனுப்பும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. அண்மையில் சில பயணிகள் பயணச் சீட்டு பெற்ற பின்னரும் திருப்பி அனுப்பப்பட்டனர். அவ்வாறு திரும்பியோரில் மூவர் மஹரகம வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் இருந்த புற்று நோயாளி ஒருவரின் மனைவி, பிள்ளைகள் ஆவர்.

மறுநாள் காலநிலை சீர்கேடு காரணமாக பயணிகள் சேவை இரத்துச் செய்யப்பட்டது. அன்றைய தினமே நோயாளியும் இறந்து விட்டார். சில நாட்களின் பின்னரே அவரது குடும்பத்தினர் கொழும்பு செல்லமுடிந்தது. அதிகாரிகளின் முறைகேடுகளால் உயிருக்குப் போராடிக் கொண்டு இருந்த ஒருவரை கடைசிநேரத்திலாவது பார்க்கும் சந்தர்ப்பத்தை அக்குடும்பம் இழந்து போனது. இவ்வாறான சோகக் கதைகள் ஏராளம்.

இன்று வா. நாளை வா என்று கப்பல், விமான சேவைகளுக்கு அழைப்பு விடுவதும் பயணிகள் 500, 1000 ரூபாய்களை செலவழித்து வாடகை வாகனங்களில் வந்து திருப்பி அனுப்பப்படுவதும் யாழ். நகரில் ஒரு சர்வ சாதாரணமான நிகழ்வாகி விட்டது. இந்தத் தொல்லைகளில் இருந்து விடுபட்டு ஒரு சுதந்திரமான பயணத்தை மேற்கொள்ளலாம் என்றதொரு நம்பிக்கையில் எந்தவொரு தமிழனும் இருக்கவில்லை. தமது பழைய நினைவுகளை மீட்டுக் கொள்வதிலேயே இவர்களின் காலம் கரைந்து போய் விடுகின்றது.

இதே வேளை சமீப காலங்களில் யாழ்ப்பாணக்குடா நாட்டில் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் உரும்பிராய் பாடசாலைக்குச் சென்ற மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர். வடமராட்சியில் படையினரின் வாகனத்தினால் மோதுண்ட முன்னாள் வங்கி முகாமையாளர் ஒருவர் சிகிச்சை பெற்றும் பயனின்றி இறந்துள்ளார்.

இவ்வாறான விபத்துக்களில் கணிசமானவை படையினரின் வாகனங்களினால் தான் ஏற்படுகின்றன. போதிய பயிற்சியற்ற இளம் இராணுவச் சிப்பாய்கள் அதிவேகத்தில் வாகனங்களைப் பொறுப்பற்ற முறையில் செலுத்திகின்றனர். இதனால் தான் விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிகின்றது. கடந்த வாரமும் பலாலி வீதியில் படையினரின் அம்புலன்ஸ் வண்டி ஒன்று பல்கலைக்கழக மாணவி ஒருவர் மீது மோதிப் பலத்த காயங்களுக்குட்படுத்தியுள்ளது.

மாணவி தற்போது ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறுகிறார். ஆனால் இதைவிடக் கொடுமையான விடயம் என்னவெனில் மாணவி மீது மோதிய அம்புலன்ஸ் சாரதியான படைவீரர் நடந்து கொண்ட முறைதான். விபத்து நடந்து படுகாயமுற்றிருந்த மாணவியின் அடையாள அட்டையை பரிசோதித்து சுமார் 20 நிமிடங்கள் வரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல விடாமல் பொறுப்பற்ற வகையில் அந்தச் சாரதி நடந்து கொண்டுள்ளார் எனப் பல்கலைக்கழக மாணவர்கள் முறையிட்டுள்ளனர்.

ஏதோ மாணவிதான் வேண்டுமென்றே வந்து மோதியது போல அவர் நடந்து கொண்டதும், பின்னர் மாணவியை ஆஸ்பத்திரிக்குக் கூட ஏற்றிச் செல்லாமல் அம்புலன்ஸ் நழுவிவிட்டதும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது காட்டப்படும் வெறுப்புணர்வின் வெளிப்பாடோ என்று எண்ணப்பட வைக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் வெறுப்புணர்வுகளைத் தோற்றுவித்திருக்கிறது. இப்படியான சம்பவங்களில் தொடர்பு பட்டவர்களுக்கு உரிய தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்காமல், அரசு மூடி மறைத்து ஆதரவளிப்பதால் தான் இத்தகைய உக்கிர மனப்பாங்கு அவர்களிடம் உருவாவதாகச் சமூகவியல் விரிவுரையாளர் களுள் ஒருவர் குறிப்பிட்டார்.

அரவின்

இனப்பிரச்சினையின் இறுதித்தீர்வு மீண்டும் இந்தியாவிடமா?

இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக உக்கிர மடைந்துள்ள இனப் பிரச்சினையும், தொடர்மோதல்களும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இந்த வேளையில் உலகின் பல நாடுகளிலிருந்தும் இப்பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் என்ற குரல் அண்மைக்காலமாக அடிக்கடி கேட்கத் தொடங்கியுள்ளது.

உச்ச நிகழ்ச்சியாக நோர்வே சமாதான ஏற்பாட்டாளர் சொல்ஹெய்ம் வன்னிக்குச் சென்று காணக்கிடைக்காத புலிகளின் தலைவரின் கரம் பிடித்துக் கலந்துரையாடியது வரலாற்றத் திருப்பத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சி எனப் பலராலும் போற்றப்பட்டது. அதுவரை புலிகளின் தலைவர், இந்திய தலைவர்களுக்கும் டிக்ஸிற், பூரி போன்ற இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் மட்டுமே காட்சி தந்துள்ளார். இலங்கையின் அரசியல் வாதிகளில் ஹமீட் மட்டுமே அந்த வாய்ப்பை பெற்றார்.

ஆக எமது இன்ப்பிரச்சினை இந்திய உபகண்டத்திற்கு வெளியே உள்ள ஒருவருக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. நோர்வேயின் சமாதான முயற்சியில் அதன் பிரதிநிதி சொல்ஹெய்ம் நேரடியாக பிரபாகரனை சந்தித்து பேசியதன் மூலம் முதலாம் சுற்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்து விட்டார்.

நோர்வேயின் இந்த முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்குவதாக பிரித்தானியா தெரிவித்திருப்பது அதன் செயற்பாட்டிற்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. உலக பொலிஸ்காரனான அமெரிக்காவின் அனுசரணையும் நோர்வேக்குக் கிடைத்திருப்பது போனஸ் உந்துசக்தி. ஆக இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வேயின் செயல் பாட்டிற்கு ஊக்கமளிக்கப் பிரித்தானியா, அமெரிக்க நாடுகளின் ஆதரவு நிச்சயம். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வின் கதவு திறக்கப்படப் போகின்றது என எண்ண விளையும்போதுதான் அண்மையில் இந்திய விஜயம் மேற்கொண்ட ஜி.எல்.பீரிஸ் இனப்பிரச்சினையின் இறுதித் தீர்வில் இந்தியா காத்திரமான பங்களிப்புச் செய்ய வேண்டும் என விடுத்த கோரிக்கையும், மாவீரர் தின உரை பற்றி உலகம் அலசத் தொடங்கிய சமயம் இந்தியா வெளியிட்ட பிரபாகரனை நாடுகடத்தும் கோரிக்கையும் தான் இந்தக் கட்டுரைக்கு தலைப்பானது. ஆரம்பத்தில் இருந்தே இந்தியா, இலங்கைத் தமிழர் பிரச்சினையை எவ்வாறு பார்த்ததென்ற தெளிவு எமக்கு வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர் அனைவரும் இந்திய பிரஜைகள் என்ற ஒரே அளவுகோல் தான் ஆரம்பத்தில் இந்தியாவிடம் காணப்பட்டது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்ட, மலையகத்தில் பலதலைமுறைகள் வாழ்ந்த மக்களுக்கு இந்தியா அன்னிய நாடாகவே அப்போது காணப்பட்டது. எனது மக்கள் என்ற பாணியில் இந்தியா ஏற்றுக் கொண்ட மக்களுக்கு இது கசப்பான அணுகு முறையாகத்தான் இருந்தது.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களும் ஏதோ தனது மாநிலமான தமிழ் நாட்டு தமிழர் போன்று கையாளப்பட வேண்டும் என்ற ஆரம்ப செயற்பாடே இந்தியாவிடம் காணப்பட்டது.

ஆனால் பிராந்திய நலனில் கொண்ட அக்கறை இந்த எண்ணத்தில் மாற்றம் தந்தது தான் ஆரம்ப உண்மை.

ஜே.ஆர். ஜயவர்த்தனவின் திறந்த பொருளாதாரக் கொள்கை, அமெரிக்க உறவு, மொரார்ஜி தேசாயை போற்றி இந்திரா காந்தியையும், மகனையும் தாயும் கன்றும் என ஏளனமாகப் பேசியதால் ஏற்பட்ட தாக்கம் என்பன இந்திரா காந்திக்கு இலங்கையில் ஆளுமையைச் செலுத்த வேண்டிய வாய்ப்பை ஆரம்பத்தில் ஏற்படுத்தியது.

1983 யூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமிழ் நாட்டை நோக்கிய ஓட்டத்திற்கு மேலாக இந்திரா காந்தியை ஈழத் தமிழர் பிரச்சினையில் தலையிடச் செய்ய அமிர்தலிங்கம் தலைமீழ் பிரயத்தனம் செய்ததைக் கூட்டணியினர் அறிவர்.

ஆக இங்கு உள்ள உண்மையான இனப் பிரச்சினைக்கு அப்பால் பிராந்திய நலனும், ஜே.ஆர். இற்கு பாடம்புகட்டலுமே அடிப்படை நோக்கமாக இருந்தது. ஈழத்து தமிழர்களும் எம்மைக் காக்க இந்திய படைவரும் என ஏங்கிய காலம் அது. ஆயுதப் போராட்ட ஆரம்பகட்டம். அரசியல் ரீதியான நெருக்குதலுக்கப்பால் ஆயுத ரீதியான தாக்குதல் ஏற்பட இயக்கங்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தியப் போக்கை எதிர்த்து "வங்கம் தந்த பாடம்" எழுதிய புளொட் முதல் வர்க்கப் புரட்சியில் ஈடுபட்ட நக்சலைட்டுகளின் தொடர்புள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் வரை ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது தான். இதில் ரெலோ விசேடமாக வளர்க்கப்பட்டது. இவர்கள் இந்தியாவின் விருப்பை மறுப் பின்றி ஏற்பார்கள் என்ற உண்மை றோவால் உணரப்பட்டது. ஆக இந்தியா நண்பனாக அல்ல எஜமானாக தன் செயற்பாட்டை ஆரம்பித்தது.

உலகின் கவனத்தை ஈர்த்து தன் செயலை நியாயப்படுத்தி பின் ஜே.ஆர் ஐ காலடியில் கொண்டு வரும் ஆரம்பகட்ட செயற்பாடாக இலங்கையில் மனிதப்படு கொலை நடக்கின்றது என இந்திரா காந்தி இந்தியப் பாராளுமன்றத்திலும், ஈழப் பிரச்சினை பற்றி பண்ருட்டி இராமச்சந்திரன் ஐக்கிய நாடுகள் சபையிலும் பேச, இந்திரா வின் தூதர் பார்த்தசாரதி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைக்கு வந்தார்.

ஈழத் தமிழர் பிரச்சினை மட்டும் தான் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலில் இருந்திருந்தால் இத்தனை இயக்கங்களையும் இந்தியா தனித்தனியே பயிற்றுவித்திருக்க தேவையில்லை. இந்திய நலனே அவ்வாறு செய்யத் தூண்டியது. அந்த அத்தியாயம் இறுதிவரை எழுதப்பட முன்பே இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

இதுவரை அரசியல் பக்கமே வராது பறந்து கொண்டிருந்த ராஜீவ் காந்தி பொறுப்புகளைக் கையாளும் நிலைக்கு அதிகாரிகளின் ஆலோசனைப்படி நடக்க தள்ளப்பட்டார். இலங்கைப் பிரச்சினையை கையாண்ட ஜீ. பார்த்தசாரதி ஓரம்கட்டப் பட்டு பண்டாரி பொறுப்பேற்றார். பண்டாரியின் செயல்கள் இந்திரா காந்தி இருந்த போது இலங்கைக்கு இந்தயா மீது இருந்த பயத்தை அறவே நீக்கியது.

இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயம் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது போல் திம்புவில் போராளிகள் ஒரே குரலில் முன்வைத்த யோசனைகளை ஏற்க மறுத்த இலங்கை அரசை எதுவும் செய்யாத இந்தியா மீண்டும் தன் எஜமான் அதிகாரத்தை இயக்கங்களின் மீது பிரயோகித்தது. சந்திரஹாசனும், சத்தியேந்திராவும் நாடு கடத்தப்பட்டனர்.



போராளி குழு தலைவருடனும் மட்டுமல்ல மிதவாதிகள் அனுபவ சாலிகளான கூட்டணியுடன் கூட கலந்தாலோசிக்காமல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு அத்திவாரமிடப்பட்டது. ஏகப்பிரதிநிதி நீர்தான் என பூரி கூறிய வார்த்தையால் புறப்பட்ட புலிகளின் தலைவர் அசோகா ஹொட்டலில் அடைக்கப் பட்டார். தமிழர் அபிலாஷைகளை இந்த ஒப்பந்தம் தீர்க்காது என ஆதங்கப்பட்ட அமிர்தலிங்கத்தை சொந்த நாட்டுக்கு போங்கள், எங்கள் சுக போகங்களை அனுபவிக்கும் உங்களுக்கு ஆதங்கம் ஒரு கேடா என இறுக்கியது இந்தியா.

ஏனைய இயக்கங்கள் தம் இருப்பு நிலை பற்றிய இந்திய அமைதிப் படையுடன் இலங்கை விஜயம்.

நட்டாமுட்டியன்

இலங்கைத் தமிழர் பிரச்சினையை எஜமான் தோரணையில் கையாள இந்தியா விளைந்திராவிட்டால் இன்று இன்னலற்ற வாழ்வைத் தமிழ் பேசும் சமூகம் கண்டிருக்கும். ஆனால் தலையாட்டிகள் மட்டுமே இந்தியாவின் தேவையாக இருந்தது. எதிர்ப்பு நிலையில் புலிகள் மோதினார்கள். நிலைமை மோசமானது.

மற்றவர்கள் ஒத்துஓடி பெறக் கூடியதை பெறுவோம் என எஜமானனை நண்பனாக்க முனைந்தனர்.

சோவியத் யூனியனின் உடைவு எல்லாவற்றிற்கும் சோதனையாக அமைந்தது. உலகப் பொலிஸ்காரன் உத்தியோகம் அமெரிக்காவின் ஏகபோகமாகியது. இந்தியாவிற்கு திரிசங்கு நிலை. புதிய அரசும் புதிய பிரதமர் வி.பி. சிங்கும், பிராந்திய கட்சிகளின் கைப்பொம்மையான நிலை. கருணாநிதி தன் தமிழர் உணர்வை தூசி தட்டிக் கொண்டார். இந்தியா தன் பிராந்திய நலனை, இந்திய நலனை மீண்டும் கவனத்தில் கொண்டது. அமெரிக்காவிற்கு வியட்னாம் அனுபவம் போல் இந்தியா விற்கு இலங்கையில் ஏற்பட்டது. ஆக, நிலைமைக்கு ஏற்ப தமிழர் நலன்களுக்கப் பால் இந்திய நலனுக்காக வெளியேறியது.

அமைதிப்படை அமைதி குலைக்கும் படையாக வெளியேறியது புலிகளின் தவறு என கடந்தவாரம் குறிப்பிட்டேன்.

அதைவிட பெரும் தவறு, அமைதி குலைந்த தமிழ் மக்களுக்கு சமாதானத்தை ஏற்படுத்தாது இந்தியா வெளியேறியது தான்.

அமெரிக்காவின் சந்தையாக இந்தியா மாறிய பின் இனப் பிரச்சினை பற்றிய எந்த கரிசனையும் காட்டாது இந்தியா கண்ணை மூடிக்கொண்டது. இந்தியா இனிவராது என்பதோடு இந்தியா கொடுத்த மறைமுக ஒத்துழைப்பும் தான் இராணுவம் யாழ்ப் பாணத்தைக் கைப்பற்ற ஏதுவான காரணிகள்.

இன்று இந்திய செயற்பாட்டை முதலில் பிராந்திய நலன், பின் இந்திய நலன் அடுத்து பழிவாங்கும் நிலையாகவே பார்க்க வேண்டியுள்ளது. பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கை இதனை வலியுறுத்துகிறது.

இந்திய அதைப்படை காடு கரம்பை யெல்லாம் தேடித்திரிந்து பிடிக்க முடியாத பிரபாகரனை, ஏதோ ஈழவேந்தன் போல் விசா இல்லாமல் இருப்பவரை நாடுகடத்தும் என கேட்பது போல் கேட்பது கேலிக் குரியதாக படலாம். ஆனால் அதுவல்ல காரணம். இந்த விபரம் கூட இல்லாத சுத்துக்குட்டி அரசியலை இந்தியா செய்ய வில்லை. மிகவும் கனகச்சிதமாகத் திட்டமிட்டு தன் தனித்துவத்தை காட்ட விளையும் காரியம் தான் இந்தக் கோரிக்கை. தன் கைகளை விட்டு நழுவிப் போன தலைமைத்துவத்தை தன் காலடியில் விழவைக்கும் சுபட நாடகத்தைத் தான் இந்தியா ஆட விளைகிறது. உலக நாடுகள் இலங்கை பிரச்சினையில் நோர்வே ஊடாக பிரபாகரனுடன் பேசி ஒரு தீர்வை கொண்டு வந்தால், தான் ஓரங்கட்டப்பட்டு விடுவேன் என்ற எஜமான் திமிரைத்தான் இந்தியா வெளியிட்ட கோரிக்கை காட்டி நிற்கின்றது.

ஈழத் தமிழர்கள் இந்தியாவைத் தம் நண்பனாக, சகோதரனாக இன்றும் ஏற்றுக் கொள்வர். எஜமான் திமிருக்கு எந்த நாயும் கூட அடங்கிப் போகாது குரைக்கத்தான் செய்யும்.

சர்வதேச சமூகத்தின் நெருக்குதல் பிரபாகரனையே மறைவிடத்தில் இருந்து வெளியுலகை சந்திக்க வைத்து தமிழர் பிரச்சினை தீரும் வெண்ணை திரண்டு வரும் வேளையில் இந்தியா தன் மூக்கை நீட்டி சகுனப் பிழையாகும் ஈனச் செயலை செய்து ஈழத் தமிழர் அமைதியைக் குலைக்க கூடாது.

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன பிரித்தானியாவில்

தமிழ் மக்களின் தேசிய போராட்டத்தின் காரணமாக தென்னிலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் சுயனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியே இன்று உட்கட்சி போராட்டத்திற்கு முகம் கொடுத்துள்ளது. என சில விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனை உண்மையென என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது இருந்தாலும் இக்கட்சிக்குள் பல பிரச்சினைகள் இருக்கின்றது. என்பது உண்மைதான் தற்போது அரசு முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் பிரச்சினைகளைப் பயன்படுத்திக் கொண்டு பொதுத் தேர்தலொன்றை நடாத்த அரசை வலியுறுத்த வேண்டுமென ரணில் விக்ரமசிங்கா கூறுகின்றார். அதன்படி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதென்றால் தெளிவான உடன்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறான உடன்பாடு ஏற்படும் வரை அரசுக்குத் தொல்லை கொடுத்து அரசாங்கத்தைப் பிரச்சினைக்குட்படுத்த வேண்டும். இருந்தாலும் கரு ஜயசூரிய உட்பட இன்னொரு குழுவினர் அரசாங்கத்தை பிரச்சினைகளில் விழ சந்தர்ப்பம் ஏற்படுத்தாமல் பாதுகாத்துக் கொண்டு வட கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடவற்புறுத்த வேண்டும் என நினைக்கின்றேன். இந்த வேளையில் அரசு சரிந்து விழுமாயின் நாடு பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் அது முதலாளித்துவ பொருளாதாரத் திட்டங்களில் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடும்.

ஆனால் சந்திரிகாவுக்கு உதவி செய்ய வேண்டுமென கரு ஜயசூரிய கூறுவது அதிகாரப் பரவலை பலப்படுத்துவதற்காகவல்ல கரு முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது அன்பு கொண்டவரேயல்லாமல் தமிழ் மக்கள் மீது அன்பு கொண்டவரல்ல. அதனால் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் கிடைப்பது பற்றி அவருக்கு உண்மையான உடன்பாடில்லை. அவர் சந்திரிகாவுக்கு ஆதரவளிக்க முன்வந்து குறைந்த அளவு அதிகாரப் பகிர்வுக்குச் செல்ல சந்திரிகாவைத் தூண்டுவதோடு புலிகள் அமைப்பை இல்லாதொழிப்பதற்காக நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றார். இதன்படி அரசாங்கத்தின் ரத்னசிறி விக்ரமநாயக்கவின் அரசியல் சக்திகளைப் பலப்படுத்துவது கரு ஜயசூரியவின் கொள்கை என நினைப்பதால் எவ்வித தவருமில்லை.

இது எல்லாவகையிலும் ரணிலின் கருத்துகளுக்கு நேர் எதிரான கருத்துக்களாகும் தலைவர் ரணிலுக்குத் தேவைப்படுவது தனக்குத் தேவையான பலம் வாய்ந்த இடத்தைப் பெற்றுக் கொள்வதும், தமிழ்த் தாயகத்திற்கான அதிகாரங்கள் கிடைக்கும் நடவடிக்கைக்காக சந்திரிகாவைத் தூண்டுவதுமாகும். ஒரு புறத்தால் பார்க்கும் போது இது சர்வதேச நிறுவனங்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதே யுத்தத்திற்கு அவசரமான தீர்வு இது என ஐரோப்பிய நாடுகளும் கருதுகின்றன.

இது எவ்வாறுருப்பினும் பலஸ்தீன பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைத் தேடிக் கொடுக்க முடியாதுபோன ஐரோப்பிய சக்திகளினால் இந்தப் பிரச்சினைக்கும் தீர்வைத் தேடித்தர முடியாது. ஐரோப்பிய சக்திகளின் நோக்கமே புலிகள் போன்ற கடும் போக்குள்ள குழுக்களை அழிப்பதாகும் அவர்களை அரவணைத்து அதிகாரத்திற்குக் கொண்டு வரவதல்ல. அதிகாரத்திற்குக் கொண்டு வருவதாயின் அது ஒரு முன்னணி அரசாக இருக்க வேண்டும். இவ்வாறுதான் தென்னாபிரிக்கா ஏ.டப்ள்யு.சி சக்திகளை சாதுவாக மாற்றியது. பலஸ்தீனத்திலும் அதுபோன்றதொன்றை ஏற்படுத்தவே முயற்சி செய்தனர். இருந்தாலும் காரியம் பிழைத்தது. காரணம் பலஸ்தீன விடுதலை முன்னணி அது போன்ற கீழ் நிலைக்குச்செல்ல ஆயத்தமாகவில்லை. பொது மக்களை அந்த இடத்துக்க இட்டுச் செல்ல அவர்கள் விரும்பவில்லை.

அதுபோன்றே புலிகள் அமைப்பும் அமெரிக்க எசமானர்களின் தேவைகளுக்கு அமைய ஆடும் ஒரு அமைப்பாக என்ணுவார்களேயாயின் அது தவறானதாகும்.

அரசாங்க சார்பு இனவாதிகள் முயற்சி செய்வது பிரித்தானியாவில் புலிகள் அமைப்பை தடைசெய்விப்பதற்காகும். அதன் பின்பு மற்றைய தமிழர்களோடு சேர்ந்து உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டதாகக் காட்டிக் கொள்வதுமாகும். புலிகள் அமைப்பு பிரித்தானியர்களிடம் தமது இயக்கத்தை அந்த நாட்டில் தடைசெய்தால் தாம் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதில்லையெனக் கூறியுள்ளனர். அதற்குப் பதிலாக அவர்கள் கூறுவது பேச்சுவார்த்தைகளுக்கு வருவதற்கு உடனடியாக புலிகளுக்கான தடையை நீக்க வேண்டும் என்பதாகும். இக்கோரிக்கையின் காரணமாக பிரித்தானிய ஆட்சியாளர்கள் பிரச்சினைக்குள்ளான நிலையில் இருக்கின்றனர். புதிய சட்ட திட்டங்களுக்கமைய புலிகள் அமைப்பைத் தடைசெய்யாமலிருக்கவும் முடியாது. அதன்படி தடைசெய்தால் பேச்சுவார்த்தை மேசைக்கு அவர்களைக் கொண்டு வரவும் முடியாது. அதனால் பிரித்தானியர்கள் பெரும் இக்கட்டான நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர்-.

விடுதலை புலிகள் அமைப்பிற்கும் தீர்வொன்றிற்கு வருவதற்கான தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன. சந்திரிகாவினால் முன்னெடுக்கப்படும் ஆடம்பரமான மறுசீரமைப்பிற்கு தாராளவாத சக்திகள் அவரை நெருங்கி வந்துமுள்ளனர். சந்திரிகாவல்ல அவரது கையாட்களே மோசமானவர்கள். என்று இவர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாக சில மைல் தூரத்திற்கு வெள்ளை விரிக்கப்படுகின்றது. வீதி நெடுக அசைக்கின்றனர். இவைகளினால் தீர்வு கிடைக்குமா?

மலையகத் தலைமைகளும் மறைந்திருக்கும் உண்மைகளும்

மலையகத் தலைமைகள் அனைத்தும் தொழிற் சங்கங்களிலிருந்து தோன்றியதால் அவர்களிடையே "அரசியல்" ரீதியான தடுமாற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்துள்ளன. இதனை கடந்த கால அவர்களின் நடவடிக்கைகளை வரலாறு நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மலையக மக்களின் வாக்குரிமையை பறித்த பின்னர் இடதுசாரி தலைமைகள் அவர்களை பற்றி அதிக அக்கறை காட்டவில்லை. ஐம்பதாண்டு காலம் இலங்கை இந்தியக் காங்கிரஸ் "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயருடன் "தனிப்பெரும்" தலைவர் என்றழைக்கப்பட்ட சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் இயங்கியது.

சாணக்கியத்தனமும், சாதுர்யமும் கொண்ட தொண்டமான் தனது கருத்துக்கு மாறானவர்களை காலத்திற்கு காலம் "களை" எடுத்தார். இலங்கை இந்திய ஸ்தாபக சிற்பிகளில் ஒருவரும் இலங்கை இந்திய காங்கிரஸின் இணைச் செயலாளராகவிருந்த அப்துல் அஸீஸ் அவர்களை அகற்றினார். கல்வியறிவு மிக்கவர்கள் தனது தலைமைக்கு போட்டியாக வந்துவிடக் கூடாது என்பதற்காக கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையும், வி.கே. வெள்ளையனையும் வெளியேற்றினார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் அஸீஸின் தலைமையில் இயங்கியது. இந்திய விசுவாசம் கொண்ட தொண்டமான் தலைமையில் இருந்த தொழிலாளர்களை வென்றெடுக்க அஸீஸால் முடியவில்லை. இடதுசாரி மனப்பான்மையும், சிறந்த ஆங்கில அறிவும் கொண்ட அஸீஸை பாகிஸ்தானியர் என்ற ரீதியில் இந்திய வம்சாவழியினரான மலையக தோட்டத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அஸீஸ் உயிருடன் இருக்கும் பொழுதே ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் வி.பி. கணேசன் அஸீஸின் மறைவுக்கு பின்னர் அதனை முழுமையாக தனது அதிகாரத்தில் வைத்துக் கொண்டார்.



வெற்றிகரமான வியாபாரியாக இருந்த வி.பி.கணேசன் தனது தொழில் முயற்சிக்காக, வெளிநாடு செல்ல ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் லேபலை நன்கு பயன்படுத்திக் கொண்டார். அவரது மறைவுக்குப் பின்னர் அவரது மைந்தன் மனோ கணேசனுக்கு அவரது சகோதரர்களும் தொழிற்சங்கத்தை தங்கள் குடும்ப சங்கமாக ஆக்கிக் கொண்டார்கள்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் அஸீஸ் ஆதரவாளர்களும், அஸீஸின் பெறாமகனுமான அஷ்ரப் அஸீஸின் தலைமையில் "அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்" என்ற தொழிற்சங்கத்தை அமைத்தார். அதற்கு அவரே தலைவரானார். அஸீஸ் ஏற்பாடு செய்து வைத்திருந்த வெளிநாட்டு நிதி உதவிகள் அவர்களின் செயற்பாடுகளுக்குப் பெரிதும் உதவின.

இலங்கை தொழிலாளர் காங்கரஸிலிருந்து வெளியேறிய வி.கே. வெள்ளையனும், சி.வி. வேலுப்பிள்ளையும் தொழிலாளர் தேசிய சங்கம் என்ற தொழிற்சங்கத்தை உருவாக்கினார்கள். "ஒரு தொழிலாளியே தொழிற்சங்கத் தலைவராக வரவேண்டும்" என்ற விரும்பிய வி.கே. வெள்ளையன் தொழிலாளியாக இருந்த டி. அய்யாத்துரையை தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவராக்கினார். ஆரம்பத்தில் தொழிலாளர் தேசிய சங்கம் சிறப்பாக செயல்பட்டது. ஆனால் வி.கே. வெள்ளையன் மறைவுக்கு பின்னர் அறிக்கை விடும் தலைவராக அய்யாத்துறை மாறிவிட்டார். அங்கு பொதுச் செயலளார் பி.வி. கந்தையாவின் ஆதிக்கமே நிலவுகிறது.

ஒரு காலகட்டத்தில் செங்கொடிச் சங்கமே இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு எதிரான செயற்பாடு தொழிலாளர்களிடையே கம்யூனிஸ்ட் தலைவர்களின் ஒருவரான எஸ். சண்முகதாசனின் பெருமுயற்சியால் தொழிலாளர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று வந்தனர். படித்த தோட்டப்புற இளைஞர்கள் ஈர்க்கப்பட்டனர். பின்னர் ஏற்பட்ட சர்வதேச பிளவுகள் காரணமாக செங்கொடிச் சங்கத்தை ஒ.ஏ.ராமையாவும், ரொஸாரியோ பீரிஸும் செங்கொடிச் சங்கத்தின் வருமானத்தை பங்கு போட்டுக் கொண்டனர். ஆடி கலவரத்திற்கு பின்னர் ரொஸாரியோ நாட்டை விட்டுப் போனதும் இராமையர் செங்கொடிச் சங்கத்தை சொத்தாக்கிக் கொண்டார். அவர் வைத்ததே அங்கு சட்டமாகி விட்டது.

மலையகத்தில் எஸ். தொண்டமான் தலைமையில் இயங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் "சூப்பர் மார்கட்"டாக திகழ்ந்தது. ஏனைய தொழிற்சங்கங்கள் பெட்டிக்கடைகளாக காட்சியளித்தன. தொண்டமானே ஏனைய தொழிற் சங்கங்களை பெட்டிக்கடை சங்கங்கள் என பகிரங்கமாக சாடியுள்ளார். "ஆயிரம் தொழிலாளர் இருந்தால் போதும் பெட்டிக் கடையை சிறப்பாக நடத்தி விடலாம் என்ற ரீதியில் பல தொழிற்சங்கங்கள் இயங்கின.

இலங்கை அரசியலில் மாறி, மாறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சியின் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் பெரும் வளர்ச்சி பெற்றது. காங்கிரஸுடன் போட்டி போடும் அளவு அதில் அங்கத்தவர்கள் இணைந்தனர்.

பெரும் தலைவரான சௌமிய மூர்த்தி தொண்டமானின் நீண்ட கால தொழிற்சங்க அனுபவமும், சாணக்கியத்தனமும் தொழிலாளர்களிடையே காணப்பட்ட இந்திய விசுவாசமும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அரசியல் பிரிவை உருவாக்கி மலையகத்தின் "முடி சூடா" மன்னனாகத் தொண்டமான் தன்னை உருவாக்கிக் கொண்டார். மாறி மாறி ஆட்சிபீடமேறிய அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்தார். தனக்கு பாதுகாப்பாக ஒரு காலத்தில் இடதுசாரி அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த புத்தி ஜீவியான பி.பி. தேவராஜ் போன்றவர்களை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார். அவர்களுக்கு தொண்டமான் தயவால் பதவிகளும், பட்டங்களும் வெளிநாட்டு பயணங்களும் பரிசாகக் கிட்டியது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணியிலிருந்த பெரியசாமி சந்திரசேகரன், செயல்வீரராகவும் பேச்சாற்றல் மிக்கவராகவும் திகழ்ந்தார். தலவாக்கலையில் ஏற்பட்ட கலவரத்தில் காயப்பட்டு ஒரே இரவில் காங்கிரஸின் முன்னணி வரிசையில் ஒருவரானார். அவரின் வளர்ச்சியை தொண்டமான் விரும்பவில்லை என பல சம்பவங்கள் எடுத்துக்காட்டியது.

சிவம் சித்தார்த்தன்

தொடரும்.....

தமிழ்த் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை

அரசியல் தொடர் 27

- ஆதிசங்கரர் -

தமிழ் மக்களின் தலைவர்களாக வருபவர்கள் அம்மக்களின் பண்பாட்டு வழி நிற்பவர்களாக இருத்தல் வேண்டும்

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் அரசியலுக்கும், அக்காலகட்டத்தில் வெளிவந்த இலக்கியங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இலக்கியங்கள் எனப்படுபவை காலத்தின் பிரதிபலிப்புக்களே! அவ் இலக்கியங்கள் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் கருத்துக்களையே அதிகம் பிரதிபலித்திருக்கும். விளிம்பு நிலைக் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் மறைக்கப்படக் கூடிய சூழ்நிலைகளே அதிகளவில் இருக்கும்.

தமிழர் அரசியலின் முதலாவது கட்டத்திலும் இப்போக்கினைத் தெளிவாகக் காணலாம். கிறிஸ்தவ ஆதிக்கத்தை எதிர்த்து யாழ் சைவ வேளாளரின் நலன்களை உயர்த்திப்பிடித்தலே முதலாவது கட்டத்தின் பிரதான அரசியலாக இருந்தது. இதனால் இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களும் கிறிஸ்தவ மதப்பரப்புகைக்கான கருத்துக்களைக் கொண்டவையாகவும், அதை எதிர்த்து சைவ மேன்மையை வலியுறுத்துகின்ற கருத்துக்களைக் கொண்டனவையாகவும் விளங்கியிருந்தன. அச்சியந்திரத்தின் வருகையும், உரை நடை இலக்கியத்தின் எழுச்சியும் இவ் இலக்கியங்களை ஊக்குவித்திருந்தன. இலக்கிய முயற்சிகள் பத்திரிகை வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும், நடைபெற்றன. இதனைத் தொடக்கி வைத்தவர்கள் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களே! பத்திரிகைகள் மூலமாகவே அவர்கள் தமது இலக்கிய முயற்சிகளை ஆரம்பித்து வைத்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் 1816ம் ஆண்டு அமெரிக்கத் திருச்சபை தன்னுடைய பணிகளை ஆரம்பித்தது. 1834இல் இத் திருச்சபை தனக்கென அச்சியந்திரசாலை ஒன்றை உருவாக்கியது. இவ் அச்சியந்திரசாலை மூலமாக 1841 தொடக்கம் "உதய தாரகை" என்னும் பத்திரிகையை வெளியிடத் தொடங்கியது. மாதமிருமுறை இப்பத்திரிகை வெளிவந்தது.

கிறிஸ்தவ சமயப் பிரச்சாரமே பத்திரிகையின் பிரதான நோக்கமாக இருந்தது. 1841 டிசம்பரில் வெளிவந்த உதயதாரகையின் ஆசிரியர் தலையங்கம் இந்நோக்கத்தினைப் பின்வருமாறு - குறிப்பிட்டது.

"சன்மார்க்கம், நன்மார்க்கம் முதலான காரியங்களை முன்னிலும் அதிக உணர்வினூடே பராமரிப்போம். சன்மார்க்க நன்மார்க்கம் என்பவை மற்ற காரியங்களிலும் விசேடித்தவை என யாவரும் ஒத்துக் கொண்டாலும், அவை செய்கையினிடத்து மறுக்கப்படுவதனால் அந்த உண்மையை மென்மேலும் வலியுறுத்த வேண்டுமென நினைக்கின்றோம். இக்காரியத்தில் தாக்கம் கொள்ளும் சத்திய நிலை விவிலியம் என்பதை வாசிப்பவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. விவிலியம் போதிக்கின்ற தர்மக் கருத்தினூடே எங்கள் இயல்புக்கும், காலமிட முதலான சமயத்துக்கும் தக்கதாய் கூடியளவு அதில் வெளிப்பட்டிருக்கும் சத்தியம், நீதி முதலான நெறிகளையும் பரிபாலனம் பண்ணுவோம்"

உதயதாரகைக்குப் புறம்பாக யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் "கத்தோலிக்க பாதுகாவலன்" என்னும் பத்திரிகை 1876ம் ஆண்டு தொடக்கம் வெளியிடப்பட்டது. மாதம் இரு இதழாக வெளியிடப்பட்டது. புரட்டஸ்தாந்து சமயமும், அதன் கருத்து நிலைகளை வலியுறுத்திய உதய தாரகையும், கத்தோலிக்கர்களுக்கும் எதிராக இருந்தமையினாலேயே இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இதன் பெயர் 1910 முதல் சத்திய வேத பாதுகாவலன் என மாற்றம் செய்யப்பட்டது. தற்போது பாதுகாவலன் என்ற பெயரில் வெளிவருகின்றது.

கிறிஸ்தவ மதப் பத்திரிகைகளின் கருத்துக்களை எதிர்த்து சைவத்தின் மேன்மையை வலியுறுத்தும் பத்திரிகைகளும் இக்காலகட்டத்தில் வெளிவந்தன. சைவ சேர்ந்து வே. கனகசபைப் புலவரினால் 1866இல் "திருவாக்குப் புராணம்" என்ற நூலும் தொம் பிலிப்பு என்பவரினால் 1874இல் ஞானாந்த புராணம் என்ற நூலும் வெளியிடப்பட்டன. காவலப்பன் கதை (1856), உசோன் பாலத்தை அசன் பேயுடைய கதை (1885), மோகனாங்கி (1895) போன்ற மொழி பெயர்ப்பு நூல்களும் வெளியிடப்பட்டன. வசன இலக்கியம் என்ற வகையில் ஆ. சதாசிவப் பிள்ளையினால் நன்னெறி கதாசங்கிரகம், (1869), இராயர் அப்பாசிக் கதை (1875), நன்னெறிக் கதை (1893), நைதர் சரிதம் (1898) என்பன வெளியிடப்பட்டன.

இக் கிறிஸ்தவ மதம் சார்ந்த இலக்கியங்கள் எல்லாம் கிறிஸ்துவத்தை சுதேச நிலைப் படுத்தும் பணிகளையே மேற்கொண்டி ருந்தன. மிக எளிய நடையில் கிறிஸ்தவ மதப் பிரச் சாரங்களை மேற்கொண்டன. கிறிஸ்தவ மதத்தின் மேன்மையையும், சைவ மதத்தின் குறைபாடுகளையும் வலியுறுத்தின.

கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களின் இம்முயற்சிகளை முறியடிக்கும் முகமாகவே சைவ மதம் சார்ந்த இலக்கியங்கள் நூல்களாக வெளிவந்தன. நாவலர் இம்முயற்சிகளில் முன்னணியில் நின்றார். கிறிஸ்தவ மதப் பிரச்சாரத்திற்கு எதிராகச் சைவ மதத்தின் மேன்மையை உயர்த்திப் பிடித்தலே இதன் நோக்கமாக இருந்தது. சைவ மதம் தொடர்பாகக் கிறிஸ்தவ மதத்தவர் குறிப்பாக அதில் வரும் "சுப்பிரபோதம்" என்ற கட்டுரை கிறிஸ்தவ மதத்தினரின் குற்றச் சாட்டுகளுக்குப் பதில் அளிப்பதாகவும், "யாழ்ப்பாணத்து சமய நிலை எனும் கட்டுரை சைவத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அதனை வலியுறுத்துவதாகவும் அமைந்திருந்தன. இதைவிடப் பிறமதக் கண்டனங்களாகக் கிறிஸ்தவ கண்டனம், ஞானக்கும்மி, வச்சிரதண்டம், சைவ தூஷண பரிகாரம் என்பனவும், சைவ சமயத்தவருக்குரிய அகக்கண்டணங்களாக சிவாகம நிந்தையும் பிராமணர்களும், தீட்சிதர்களின் தகுப்பாடுகள், இராமலிங்கப் பிள்ளையின் அற்புதங்களும் திருவருட்பாவும், நல்லூர் கந்தசுவாமி கோவிலும் ஆகம விரோத நடவடிக்கைகளும் என்கின்ற கட்டுரைகளும் அமைந்திருந்தன.

நாவலர் பாலபாடங்கள், சைவ வினா விடை, தொல்காப்பியம் போன்ற பாட நூல்களையும் எழுதியிருந்தார்.

> நாவலரின் இலக்கு சமஸ்கிருதமயப்படுத்துதல், சைவமும், தமிழும் என்ற இரண்டு விடயங்களை மையம் கொண்டிருந்தது. சமஸ்கிருதமயப்படுத்துதல் மூலம் வேளாளரை முதன்மைப்படுத்துகின்ற குடா நாட்டின் சாதிக் கட்டமைப்பு பேணப்படுவதற்கு முன்னுரிமை கொடுத்தார். சைவமும், தமிழும் என்ற சிந்தனையின் மூலம் சைவர் அல்லாத தமிழர்களை மைய நிலையில் இருந்து ஒதுக்கி வைத்தார்.

உதயபானு (1880), சைவாபிமானி (1884), இலங்கை நேசன் (1875), இந்து சாதனம் (1889) என்பன இவற்றுள் முக்கியமானவையாகும் இவற்றைவிட திராவிடக் கோகிலா, பாலச் சந்திரன், மகாவிஜயலக்சுமி போன்ற பத்திரிகைகளும் வெளிவந்திருந்தன. இவை பற்றி முன்னைய இதழிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்திரிகைகளுக்கு அடுத்ததாக நூல்கள் இலக்கியச் செயற்பாடுகளில் பெரும் பங்கினை வகித்திருந்தன. இதனையும் கிறிஸ்தவ மிசனரிகளே ஆரம்பித்து வைத்தன. ஆ. சதாசிவம்பிள்ளை என்பவரினல் 1886இல் வட்டுக்கோட்டைச் செமினறியின் உதவியுடன் "பாவலர் சரித்திர தீபகம்" எனும் முதலாவது தமிழ் இலக்கிய வரலாற்று நூல் வெளியிடப் பட்டது. இதைவிடக் கிறிஸ்தவ மதத்தைச் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளித்தல், சைவ மதத்தின் குறைபாடுகளை நீக்கும் வகையில் அதனை ஆகமமயப்படுத் துதல், சைவத்தின் மேன்மையை வலியுறுத்தும் பண்டைய தமிழ் இலக்கியங்களை பதிப்பித்தல், பண்டைய தமிழ் நூல்களுக்கு உரை எழுதுதல், பாடப் புத்தகங்கள் எழுதுதல் போன்றன இவர்களது இலக்கியச் செயற்பாடுகளாக அமைந்தன.

நாவலரின் சகோதரரின் மகனான நல்லூர் த. கைலாசபிள்ளை திரட்டிய "ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு" என்னும் நூலில் பெரும்பாலான பகுதிகள் கிறிஸ்தவ மதத்தவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிப்பதாகவும், சைவ மதத்தினை ஆகம மயப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன.

நாவலரின் இலக்கு சமஸ்கிருதமயப்படுத் துதல், சைவமும், தமிழும் என்ற இரண்டு விடயங்களை மையம் கொண்டிருந்தது. சமஸ்கிருத மயப்படுத்துதல் மூலம் வேளாளரை முதன்மைப்படுத்துகின்ற குடா நாட்டின் சாதிக் கட்டமைப்பு பேணப்படுவதற்கு முன்னுரிமை கொடுத்தார். சைவமும், தமிழும் என்ற சிந்தனையின் மூலம் சைவர் அல்லாத தமிழர்களை மைய நிலையில் இருந்து ஒதுக்கிவைத்தார்.

நாவலரது செயற்பாட்டின் விளைவு பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"நாவலரது போராட்டம் காரணமாக சுதேசப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பேரூக்கம் கிட்டிற்று. தமிழ் மக்களிடையே தலைவர்களாகவும், முக்கியஸ்தர்களாகவுமிருப்பவர்கள் அம்மக்களது பண்பாட்டின் வழிநிற்பவர்களாக இருத்தல் வேண்டும் என்ற ஒரு நிலைமை உருவாகத் தொடங்கிற்று.

"இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டிலும் யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமான ஒரு பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டது."

"இந்துக்களாகவிருந்து கிறிஸ்தவர்களாக மாறி முதன்மைநிலை பெற்றவர்கள் பலர் மீண்டும் இந்துக்களாக மதம் மாறினர். வைமன் கதிரவேற்பிள்ளை, பாவலர் துரையப் பாபிள்ளை போன்றோரை இப்பண்பாட்டு நெறியின் உதாரணங்களாக எடுத்துக் கூறலாம்."

நாவலருக்கு பின்னர் நாவலரின் மரபுவழி வந்தவர்கள் அவரின் கருத்துக்களையும், பணிகளையும் இலக்கியத்துறையில் முன்னெடுத்துச் சென்றனர். இவர்களில் சதாசிவப்பிள்ளை, வித்துவ சிரோண்மணி ந. ச. பொன்னம் பலபிள்ளை, த. கைலாசபிள்ளை, அ. குமார சுவாமிப் புலவர், காசிவாசி. சி. செந்திநாதையர், வை.திருஞானசம்பந்தப்பிள்ளை, சபாபதி நாவலர், சபாரத்தின முதலியார், சு. நமச்சிவாயப் புலவர், வை. ஆறுமுகப் பிள்ளை போன்றவர்கள் முக்கிய மானவர்களாவர்

இவர்களில் மிகவும் முக்கியமானவர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் (1854-1922) ஆவார். இவர் நாவலரின் நன்மாணாக்கர்களில் ஒருவர். நாவலரினால் உருவாக்கப் பட்ட வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமைப் பண்டிதராக விளங்கியவர். நாவலர் மரபினால் உருவாக்கப் பெற்ற காலியப் பாடசாலை, தமிழ்ச் சங்கம், சைவ சித்தாந்த சமாஜம், சைவ சித்தாந்த சபை என்பவற்றின் பணிகளோடு புலவர் தன்னையும் இணைத்தார். நன் மாணாக்கர்களை உருவாக்குதல், நூல்களை எழுதுதல், வெளியிடல் போன்ற பணிகளோடு கிறிஸ்துவ மதக்கண்டனம், பிரசங்கம் முதலானவற் றையும் செய்து வந்தார்.

கிறிஸ்து தேவனா? நற் புத்தி (1880) அஞ்ஞானி என்னுஞ் சொலன் மறுப்பு (1881) கிறிஸ்து சிருட்டிகர் (1880) வட இலங்கை கிருஸ்தவ வித்தகருக்கு (1881), கரக்கால் சத்திய வேத ஆசாரப்பிரியருக்கு (1881) முதலான கண்டனக் கட்டுரைகள் சைவ உதயபானு பத்திரிகையில் வெளிவந்தன.

பதுளைக் கதிரேசனுஞ்சற் பதிகம் (1884), நகுலேஸ்வரரூஞ்சல் (1898), சாணக்கிய நீதி வெண்பா (1914) போன்ற செய்யுள் நூல்களையும், சூடாமணிநிகண்டுரை (1885), திருவாதவூரர் புராணப்புத்துரை (1904), நீதிநெறி விளக்கப்புத்துரை (1901) போன்ற உரை நூல்களையும், யாப்பெருங்கலப் பொழிப்புரை (1909), வெண்பாப்பாட்டியல் பொழிப்புரை (1900), தண்டியலங்காரப் புத்துரை (1912), போன்ற இலக்கண உரை நூல்களையும் தமிழ் புலவர் சரித்திரம், (1916), இதோபதேசம் (1920), இரகுவமிச சரிதாமிர்தம் (1922), கண்ணகி கதை (1900), சிசுபால சரிதம் (1921) போன்ற வசனநூல்களையும், இலக்கண சந்திரிகை (1897) வினைப்பகுபத விளக்கம் போன்ற இலக்கண ஆய்வு நூல்களையும் எழுதியிருந்தார்.

உண்மையில் நாவலருக்கும், நாவலர் மரபினருக்கும் இருந்த பிரச்சினைகளில் இரண்டு முக்கியமானவையாகும். ஒன்று சைவம் மேன்மையானது என நிறுவுதல், இரண்டாவது சைவத்தின் குறைபாடுகளைக் களைதல்.

தொடரும்...

இந்த இதழுக்கு உசாத்துணை நூல்கள்

1. சிவத்தம்பி. கா. "ஈழத்தில் தமிழ் இலக்கியம்"
2. கனகரத்தினம். வை "ஆறுமுக நாவலர் சரித்திரம்"
3. கைலாசபிள்ளை. த. "ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு
4. கனகரத்தினம். வை. இரா. "நாவலர் மரபு"
5. ஆனந்தன். எஸ். எஸ். "தமிழ்"
6. சாமி. அ. மா. "நூற்றாண்டு கண்ட தமிழ் இதழ்கள்"



போர் ஓய்ந்தால் தமது அரசியல் வாழ்வும் ஓய்ந்து விடும் என நம்பும் பேரினவாதம்

கடந்த 27.08.2000 அன்று வெளியான ஆதவன் பத்திரிகையில் 17ஆம் பக்கத்தில் வெளியான "தாயொருவரின் கண்ணீர்" என்ற தலைப்பிலான ஒரு கடிதச் செய்தி தொடர்பாக, இக்கடிதத்தை எழுதவேண்டும் என எழுந்த மன உந்துதல் காரணமாக இது இப்போது (சற்று தாமதமாக) உங்களிடம் வந்து சேர்ந்துள்ளது.

அத்தாயின் கண்ணீர் கடிதம் சுமந்து கொண்டிருக்கும் துயரம், ஏக்கம், ஆதங்கம், எதிர்பார்ப்பு, நம்பிக்கை அனைத்தும் படிப்போரின், மனதில் ஓர் ஆழமான பாதிப்பினை ஏற்படுத்தவே செய்யும். அந்தத்தாயின் மனத் துடிப்பினை மற்றெல்லோரையும் விடவும் உணர்வு பூர்வமாக செய்யும் உய்த்துணரும் மனம், இதே போன்ற துடிப்புடன், வாழ்வின் சகல நம்பிக்கைகளையும் இழந்தவர்களாக, ஏக்கம் கவிந்த முகங்களின் இடுங்கிப் போய் இருக்கும் கண்களில் இருந்து சொரியும் கண்ணீர்த் துளிகளினூடாக, இதே போன்ற துயரங்களை, சிந்தியபடி நடைப்பிணங்களாக வாழ்ந்து வரும் ஆயிரக்கணக்கான தாய்மார்களுக்கிடையில் கடந்த இரு தசாப்த காலமாக அவர்களின் துன்பங்களை, இழப்புகளை உள்வாங்கி, உள்வாங்கி வெந்தழிந்து கொண்டு வாழும் என் போன்றவர்களுக்கு இயல்பாகவே அமைந்து விட்டது.

பாச உணர்வென்பது தேச எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பொதுவான அம்சமாகும். அதற்கு இன- மொழி- மத வேறுபாடுகள் கிடையாது. அது மனிதம் என்ற மகத்தான ஆத்மார்த்த உணர்வின் பாற்பட்டது.

இழப்புகள், துன்ப துயரங்கள் போன்றவைகளும் அப்படிப்பட்டவையேயாகும். எல்லா இனத்தவரினதும் கண்ணீர் கூறும் செய்தி ஒன்றாகத் தான் இருக்கும். எனவே, அந்தத் தென்பகுதித் தாயின் கண்ணீர், அந்தத் தாயின் உணர்வுகளுடன் ஒன்றி உணரப்படும் போது வடக்கில் வாழும் என்னையும் பாதித்துள்ளது.

கப்ரன் சாலிய நிஷேந்திர பர்னாந்து என்ற அத்தாயின் மகன் ஒரு இராணுவ அதிகாரி. ஆயுதங்களைக் கையில் ஏந்தி தன் இடம் அல்லாத மற்றோர் இடத்திற்குத் தன்னினம் அல்லாத இன்னோர் இனத்தவரை கொன்றழிக்கும் பணிப்பொறுப்பினை சத்தியப்பிரமாணத்துடன் கூடிய விசுவாசத்துடன் மேற்கொள்ளச் சென்றவர். அதற்கான ஊதியத்தையும், ஏனைய சலுகைகளையும் பெற்றுக் கொண்டுவந்தவர், அந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்கென- அதன் மூலம் கிடைக்கப்போகும் கௌரவ விருதுகளையும், பதவியுயர்வுகளையும் எதிர்பார்த்தவராக உழைத்து வந்தவர். ஒரு கப்ரன் என்ற வகையில் தன்னைச் சார்ந்த ஏனையோரையும் அதே பணியில் அதிகாரபூர்வமாக ஈடுபடுத்தி வந்தவர். போர்முனையில் பணியாற்றும் அவரது நோக்கம் பற்றிய விவரணம் தேவையற்றதொன்றாகும்.

ஆனாலும் அந்தப் பரிதாபகரமான தாய்க்கு அந்த இராணுவ அதிகாரி, தனது மகனாகத்தான் தென்படுவாரேயன்றி அதிகாரியாக அல்ல என்பதும் என்னால் நன்றாக உணரமுடியும். பாசம் நியாய, அநியாயங்களைப் பற்றியோ, மனித தர்மங்களைப் பற்றியோ சிந்திக்க விடாது. அது சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட மனித இயல்பு. அதனால் தான் இந்தத் தென்பகுதித் தாயால் தன் மகனுக்கு என்ன நடந்தது? எப்படி இருக்கின்றான்? எப்படி அவனைப் பற்றி அறிந்து கொள்வது? எப்படி அவனைக் காண்பது? என்பது பற்றித்தான் சிந்திக்கக் கூடியதாக இருக்கின்றதேயன்றி, எதற்காகப் போனான்? அவன் எங்கு நின்றான்? என்ன செய்தான்? என்பது பற்றியெல்லாம் சிந்திக்க முடியவில்லை.

பாவம் அந்த அம்மா ஒரு வெறும் தாயாகவும், தன் மகனை ஒரு வெறும் மகனாகவும் தான் இன்னமும் உணர்ந்து கொண்டிருக்கின்றாள்.

இது மாதிரிக்கு ஒரு தாயின் குரலாக எடுத்துக் கொண்டாலும், தென்னிலங்கையில் இப்படி எத்தனையோ தாய்மார்களின் குரல்கள் எங்கெங்கோவெல்லாம் விம்மி வெடித்து நெடுமூச்சாகி காற்றோடு காற்றாக ஒவ்வொரு கணமும் கலந்து கொண்டு இருக்கிறது என்பதையும் நான் அறிவேன்.

ஆனால் எந்தத் தாயுமே தங்கள் தங்கள் பிரச்சினைகளின் மறுபக்கத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பதாக இல்லை என்ற விடயமே இத்தகைய துயரங்கள் மேலும் மேலும் தொடர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணமாகும்.

இதனை அவர்கள் புரிந்து கொள்வதாகவும் இல்லை. எவரும் இதனை அவர்களுக்குப் புரிய வைப்பவர்களாகவும் இல்லை.

எல்லாவற்றிற்கும் காரணமே, இன்று ஸ்ரீ லங்காவின் ஆட்சி பீடத்தை அடுத்தடுத்து மாறிமாறி அலங்கரித்து வரும் அரசியல் தலைமைத்துவ வாதிகள் தங்களின் சுயநல அரசியல் இலாபங்களுக்காக மனிதாபிமானத்திற்கும், மனித உரிமைகளுக்கும் முரணான வகையில் எவ்வித நியாயமோ, நீதியோ இன்றி வடக்கிலும், கிழக்கிலும் வாழும் சிறுபான்மை தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொண்டு வரும் "போர்" தான் என்பதை அப்பாவித் தென் பகுதி மக்கள் இன்னமும் உணர்ந்தவர்களாக இல்லை என்பது தான் வேதனைக்குரிய விடயமாகும்.

கடந்த இரு தசாப்த காலமாக நடைபெறும் இப்போரின் விளைவுகளில் ஒன்றுதான் தாயின் கண்ணீரும்.

இந்த இனவாத - மதவாத அரசியல் தலைமைகள் ஒரு அநியாயமான போருக்கு "தேசபக்தி" என்ற உணர்ச்சிபூர்வ முலாம் பூசி வறுமையில் வாடி, வாழ்க்கையுடன் போராடும் சிங்களக் கிராம இளைஞர்களுக்கு, பணத்தையும் சலுகைகளையும் வழங்குவதாகக் கவர்ச்சி காட்டி படையில் இணைத்துக் கொண்டு போரிட அனுப்பிவிடுகிறார்கள்.

வறுமையும், வேலையின்மையும் அந்த இளைஞர்களை மரணக் கயிற்றில் கொலைக் கருவிகளை ஏந்திக் கொண்டு நடக்கச் செய்து விடுகின்றது. குடும்பப் பொறுப்பு, மனித உரிமைகளை மீறி அவர்களைச் செயற்பட நிர்ப்பந்தித்து விடுகின்றது. அரசியல்வாதிகளின் அபிலாஷைகளுக்கு இவர்கள் பலிக்கடாவாக்கப்படுகின்றார்கள். சம்பளத்தை மட்டுமல்ல, சாவையும் கொண்டு வரும் பணி இது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றார்கள்.

போர் முனையிலும், அப்பாவித் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலும், ஸ்ரீ லங்கா அரசால் யுத்த சன்னதர்களாக்கப்பட்ட இந்த இளைஞர்கள் புரியும் வன்செயல்கள், மனித உரிமை மீறல் நடவடிக்கைகள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அனைத்தையும் "தேசப் பற்றுடன் கூடிய சமாதானத்திற்கான போர்" என்ற போலிக் கோஷத்தினால் அரசால் முடிமறைக்கப்படுகின்றன. ஜனாதிபதிக்குரிய அளவற்ற அதிகாரங்கள் மூலம் இது சாத்தியமாக்கப்படுகின்றது.

இவ்வேளையில் ஒன்றை நான் கூறவேண்டியது அவசியமாகின்றது. இந்த அரசு (சந்திரிகா அரசு) ஆட்சிக்கு வந்ததில் இருந்து நடைபெற்ற சண்டைகளின் போது கொல்லப்பட நேர்ந்த எத்தனையோ தென் பகுதி இளைஞர்களை அரசாங்கம், அரசியல் நலன் கருதி கணக்கில் எடுத்துக் கொண்டதில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பால் கையளிக்கப்பட்ட எத்தனையோ சடலங்களை வரட்டு கௌரவம் கருதி அரசு ஏற்றுக் கொள்ள மறுத்து நிராகரித்தது.

இவர்களெல்லாம் இந்த அரசியல்வாதிகளின் நலம் காக்கவென மரணித்தவர்கள் அல்லவா? இவர்களுக்கு அரசு அளிக்கும் கௌரவம் இது தானா?

போரில் காணாமல் போய்விட்டவர்களெனவும், இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்களென்றும் இவர்களை அரசாங்கமே அவமதிப்பதை என்னவென்று கொள்வது?

நானறியக் கூடியதாக, அரசால் ஏற்றுக் கொள்ளப்படாத எத்தனையோ ஆயிரக்கணக்கான தென்பகுதி இளைஞர்களின் சடலங்களை கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளே உரிய இராணு மரியாதைகளுடன் எரியூட்டியுள்ளனர்.

இவர்களெல்லாம் போரில் காணாமல் போனவர்களோ, தப்பியோடியவர்களோ அல்ல... போரில் கொல்லப்பட்டவர்கள்.

இந்தத் தாயினைப் போன்று இன்னும் எத்தனையோ ஆயிரக் கணக்கான தாய்மார்களும், பெண்களும் தென்பகுதிகளில் எங்கெங்கோ இருந்த வண்ணம் அவர்களின் பிள்ளைகளுக்காக, கணவன்மார்களுக்காக, சகோதரர்களுக்காக கண்ணீர் வடிக்கும் காட்சி இக் கடிதத்தைப் படித்த போது என் மனதில் தென்படவே செய்தது.

எவ்வித அங்கீகாரமும் அற்றவர்களாகி, அநாதைகளாக இவர்கள் நிராகரிக்கப்பட யார் காரணம்?

ஸ்ரீலங்கா அரசு தன்னைச் சார்ந்தவர்களுக்கே, தனக்காக உயிரைக் கொடுத்தவர்களுக்கே இத்தகைய மரியாதையைத்தான் வழங்குகின்ற தென்றால், இந்தத் தாயின் கண்ணீருக்கும் ஏனையோரின் கண்ணீருக்கும் யார் காரணம் என்பது தெரிகிறதல்லவா.

சரி இனி இக்கண்ணீர் கதையின் மறுபுறம் பார்ப்போம்.

வடக்கிலும் கிழக்கிலும் இதேபோன்று பல்லாயிரக்கணக்கான தாய்மாரின் கண்ணீர்க் கதைகள் நிறைந்தே இருக்கும் விடயம் உங்களுக்குத் தெரியுமா?

எத்தனையோ இராணுவ அதிகாரிகளாலும், படையினராலும் ஈவிரக்கமின்றி வீதிகளிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோவில்கள், தேவாலயங்களிலும் வைத்து ஈவிரக்கமின்றி, கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டவர்களின், கைது செய்யப்பட்டுக் காணாமல் போய்விட்டவர்களின், மிருகத்தனமான சித்திரவதைகளால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களின், பாலியல் வல்லுறவுக் கொலைகளுக்குள்ளான பெண்களில், முதியோர்கள், சிறார்களின், ஏன் பச்சைக் குழந்தைகளினதும் எண்ணிக்கையினை நீங்கள் அறிவீர்களா?

இவர்களின் பாச- நேச உறவுகள் எத்தகைய துயர்களுடன் கண்ணீர் விட்டபடியே வாழ்ந்து வருகின்றனர். வீடு வாசல்களை இழந்து, ஊரிழந்து, நிரந்தர சோகத்தைச் சுமந்தவர்களாக காடு மேடுகளென நாடோடிகளாக அரசின் ஈவிரக்க மற்ற பொருளாதாரத் தடை, மருத்துவத் தடைகளால் வாழ்வியக்கம் சீரற்றவர்களாக இலட்சக்கணக்கிலான தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும், துயருறுவதை வார்த்தைகளால் எழுதிவிட முடியாது.

இந்தக் கொடுமைகளை இன்றும் தீவிரப்படுத்த அரசாங்கம் ஸ்ரீ லங்காவின் சகல வளங்களையும் பயன்படுத்தி வருகின்றது.

சந்திரிகாவின் இந்த திட்டங்களை- சட்டங்களை- கட்டளைகளை அமுல் செய்யப்போகின்றவர்கள் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் துருப்பினர்களும், அதிகாரிகளும் தான்.



சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்த படையினரால் கைது செய்யப்பட்ட சுமார் 700 இளைஞர், யுவதிகளை தேடி

அவர்களின் பெற்றோர்களும் உறவுகளும் கையில் காணாமல் போன உறவுகளின் புகைப்படங்களுடன் இன்னமும் ஏதோ ஓர் நம்பிக்கையில் (இந்தக் கடிதத்தை எழுதிய தென்னிலங்கைத் தாய் போன்று) மனித உரிமை அமைப்புகளின் முன்னே விழி சிவக்க அழுதபடி அலைந்து வரும், கண்டெடுக்கப்படும் எலும்புக் கூடுகளில் தங்களுக்குரியவர்களின் அடையாளம் ஏதும் உள்ளதா என அச்சத்துடன் தேடிவரும் வடபகுதித் தாய்மார்களின்- பெண்களின் முகங்களை என்றேனும் நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா?

கிருஷாந்தி, ரஜனி, கோணேஸ்வரி, சாரதாம்பாள் என நீளும் பாலியல் வல்லுறவுக் கொடுமைகளின் பின்கொலை செய்யப்பட்ட பெண்கள் பட்டியல் மிக நீளமானது.

தொடர்ச்சி 17ம் பக்கம்.....

ஹரன்

சூடுபிடிக்கும் தமிழகத் தேர்தல் களம்

ஆரம்பமாகியுள்ள புதிய பேரங்கள்

மீண்டும் தி.மு.கவுக்கே வாய்ப்பு

புத்தாண்டு தமிழகத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் ஆண்டாகப் போகின்றது. சட்டமன்றத்துக்கான தேர்தல்களுக்குச் சில மாதங்களே உள்ள நிலையில் தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. கூட்டணிகளை அமைப்பது தொடர்பான பேச்சுக்களும், இருக்கும் கூட்டணிகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கான பேரங்களும் இரண்டு பிரதான அணிகளுக்கும் போட்டியாக மூன்றாவது அணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளும் தமிழக அரசியல் களத்தில் சுறுசுறுப்பாக ஆரம்பமாகியுள்ளன.

தமிழக அரசியலில் சிறிய கட்சிகளாக இருந்தாலும் செல்வாக்கு மிக்க கட்சிகளாகவுள்ள தமிழக மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி என்பன எந்த அணியில் இணைந்து கொள்ளும் என்ற கேள்விதான் தமிழக அரசியலில் இன்று பூதாகரமாக எழுப்பப்பட்டிருக்கின்றது. இரண்டு அணிகளுடனும் மறைமுகப் பேரங்களில் இந்த இரண்டு கட்சிகளும், இறங்கியிருப்பதும் தெரிகின்றது.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டு அணிகள்தான் மாறி மாறி ஆண்டு வந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகமா? அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமா? என்பதுதான் தமிழக மக்களிடம் எழும் கேள்வியாக இருந்து வந்துள்ளது. ஏனைய சிறிய கட்சிகள் அனைத்தும் இந்த இரு அணிகளின் பின்னால் அணிவகுத்துச் செல்வதைத்தான் காணக் கூடியதாக இருந்தது.

அதேவேளையில் கடந்த சுமார் முப்பது ஆண்டு காலமாக தமிழகத்தைத் திராவிட கட்சிகள்தான் ஆட்சி செய்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. திராவிட கட்சிகளின் வருகை தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தை நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிலைமையை காங்கிரஸ் கட்சிக்கு ஏற்படுத்திவிட்டது. ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சியினர்தான் தமிழகத்தில் முன்றாவது அணி

ஒன்றை உருவாக்க வேண்டும் எனக் குரல் கொடுத்து வந்தவர்கள். மூன்றாவது அணி தொடர்பாகப் பேசும் காங்கிரஸ் இறுதியில் இரண்டு திராவிட கட்சிகளில் ஒன்றுடன் தேர்தல் கூட்டை அமைத்துக் கொள்வதுதான் தமது அரசியலுக்குப் பாதுகாப்பானது என்ற முடிவுக்கு வந்துவிடுவதுதான் வழமை!

ஆனால் காங்கிரஸ் உடைந்து கருப்பையா மூப்பனார் தலைமையில் தமிழ் மாநில காங்கிரஸ் அமைக்கப்பட்ட போது மூன்றாவது அணி தொடர்பான யோசனைகள் மீண்டும் முன்வைக்கப்பட்டன. கட்சியின் உறுப்பினர்கள் பலரும் தேர்தலைத் தனியாகச் சந்திக்க வேண்டும் என்றே வலியுறுத்தினார்கள். மூப்பனாரோ, தேர்தலைத் தனியாகச் சந்திப்பது ஆபத்தானது என்பதைப் புரிந்துகொண்டு தி.மு.கவுடன் கூட்டணி அமைத்தே கடந்த சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தார். நடிகர் ரஜினிகாந்தின் முழுமையான ஆதரவு அவருக்கு அப்போது கிடைத்தது. த.மா.கா.வானது தி.மு.க.வுடன் இணைந்து ஜெயலலிதாவுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என ரஜினிகாந்த் அப்போது மூப்பனாரைக் கேட்டுக் கொள்ள அந்த அணி அபார வெற்றியைப் பெற்றது.

இரு கட்சியினருக்கும் இடையேயான முரண்பாடுகள் த.மா.கா.வை இப்போது வெளியே தள்ளியுள்ளது. தி.மு.க.வுடன் இணைந்திருந்தால் காமராஜர் ஆட்சியை அமைத்தல் என்ற தமது கனவு நனவாகப் போவதில்லை என்பதாலேயே தாம் வெளியே வந்ததாக இவர்கள் கூறிக் கொள்கின்ற போதிலும். ஜெயலலிதாவுடன் தேர்தல் இணக்கத்தை நோக்கி இவர்கள் இப்போது செல்வது - காமராஜர் ஆட்சியை அமைப்பதற்கல்ல என்பது மட்டும் உண்மை.

இத்தேர்தலில் தனித்துப் போட்டியிட முடியாது என்பதைத் தெளிவான முறையில் உணர்ந்து கொண்டுள்ளதால்தான் தாம் ஜெயலலிதாவின் அ.தி.மு.கவுடன் தேர்தல் கூட்டணி அமைப்பதற்கு முன்வந்துள்ளதை மூப்பனாரின் நெருங்கிய சகா ஒருவர் ஒப்புக்கொண்டிருக்கின்றார். அதே வேளையில், தி.மு.க.வோ அல்லது அ.தி.மு.க.வோ ஆட்சியை அமைத்துக்கொள்ள வேண்டுமானால் அதற்குத் தமது ஆதரவு அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்துகின்றார். ஆனால் ஜெயலலிதாவுடன் மூப்பனார் அமைத்துக் கொள்ளும் கூட்டணிக்கு ரஜினிகாந்தின் ஆதரவு கிடைக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

அ.தி.மு.க. வுடன் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை த.மா.கா தொடர்ந்தும் நடத்திக் கொண்டிருக்கின்றது. இக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஆட்சியில் பங்கேற்பது என்பதுதான் த.மா.கா.வின் நிலைப்பாடாக இருக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அ.தி.மு.க. இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆட்சியில் பங்கை உறுதி செய்து கொண்ட பின்னர்தான் கூட்டணி அமைப்பது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் த.மா.க. வட்டாரங்கள் உறுதியுடன் இருக்கின்றன. த.மா.காவைப் பொறுத்தவரையில் ஆட்சியில் முக்கிய பதவிகளை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். கட்சியைக் கட்டிக் காப்பதற்கு பதவிகள் அவசியம் என்பது தமிழக அரசியலைப் பொறுத்தவரையில் உண்மையாகத்தான் உள்ளது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி, ஜெயலலிதாவுடன் தேர்தல் கூட்டணி அமைத்துக் கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத்தான் மூப்பனார்-சிதம்பரம் குழுவினர் அதிலிருந்து வெளியேறி தனியாக தமிழக மாநில காங்கிரஸை அமைத்துக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது பாரதிய ஜனதா, தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதைவிட வேறு வழியிருக்கவில்லை. அப்போது காணப்பட்ட ஜெயலலிதா எதிர்ப்பு அலையும். ஜெயலலிதாவுக்கு எதிராக ரஜினிகாந்த் எடுத்திருந்த நிலைப்பாடும் காங்கிரஸின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போக முடியாத நிலையை மூப்பனாருக்கு ஏற்படுத்தியிருந்தது. இப்போது அதே மூப்பனார் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதற்குத் துடியாகத் துடிக்கின்றார். அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை என்பதற்கமையவே மூப்பனாரின் தற்போதைய காய் நகர்த்தல்கள் அமைந்துள்ளன.

ஜெயலலிதாவிடம் ஒரேயடியாகத்தான் சரணடைந்துவிடவில்லை எனக் காட்டிக் கொள்வதற்கும் மூப்பனார் விரும்பவில்லை. அண்மையில் நடைபெற்ற கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், தமிழகத்தின் அடுத்த ஆட்சியில் த.மா.கா. பங்கேற்கும் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் எந்தக் கட்சியின் ஆட்சியில் என்பதை அவர் குறிப்பிடவில்லை. எந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைப்பதற்குத்தான் தயாராகவுள்ளதை வெளிப்படுத்துவதுதான் அவரது நோக்கமாக இருந்திருக்க வேண்டும் என்றே அவதானிகள் கருதுகின்றார்கள். இது ஜெயலலிதா அணியினருக்கான ஒரு எச்சரிக்கையாகக் கூட அமைந்திருக்கலாம்.

உண்மையில் தி.மு.க.வுடன் கூட மூப்பனார் அணியினர் சில மறைமுகப் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கின்றார்கள். எந்தப் பக்கத்தில் தமக்கு அதிக பங்கு கிடைக்கின்றதோ அந்தப் பக்கத்துக்குப் போவதற்கு த.மா.கா. தயாராகத்தான் இருக்கின்றது.

கிட்டத்தட்ட டாக்டர் எஸ். இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலையும் இதேபோலத்தான் இருக்கின்றது. கடந்த தேர்தலில் தி.மு.க. அணியில் இணைந்து தேர்தலைச் சந்தித்த ராமதாஸ் தனது ஆதரவுத் தளம் எத்தனை பலமானது என்பதை வெளிப்படுத்தியிருந்தார். தமிழகத்தின் மக்கள் தொகையில் கணிசமானளவு தொண்கயினரான வன்னியர்களின் வாக்குகள்தான் ராதாஸின் பேரம் பேசும் பலமாக உள்ளது. உடைக்க முடியாத நிரந்தர ஆதரவைக் கொண்டுள்ள அவர். இத்தேர்தலில் யாரை ஆதரிக்கப்போகின்றார் என்பதை இன்னமும் தீர்மானிக்கவில்லை. தி.மு.க. தலைமையுடன் தற்போது இராமதாஸுக்கு ஏற்படுத்தியுள்ள அதேவேளையில், புதிய கூட்டணி அமைப்பது தொடர்பாக இராமதாஸ் தொடர்ந்தும் மௌனம் சாதிக்கின்றார்.

இராமதாஸின் பலத்தைக் குறைக்கும் முயற்சிகளில் முதலமைச்சர் மு. கருணாநிதி மறுபக்கத்தில் ஈடுபட்டு வருகின்றார். காங்கிரஸிலிருந்து பிரிந்து, ராஜிவ் காங்கிரஸ் என்ற கட்சியை அமைத்துள்ள வாழப்பாடி ராமமூர்த்தி இப்போது கலைஞர் கருணாநிதியுடன் நெருக்கமாகியுள்ளார். வாழப்பாடி ஒரு வன்னியர். வாழப்பாடியைப் பயன்படுத்தி இராமதாஸின் வாக்கு வங்கியை உடைப்பதற்கான முயற்சிகளை கலைஞர் இப்போது மேற்கொண்டிருக்கின்றார். கலைஞருடன் இராமதாஸின் முரண்பாடுகளுக்கு இதுவும் ஒரு காரணம். ஆனால், இராமதாஸின் பலத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் அவர் தன்னுடைய கூட்டணியிலிருந்து வெளியேறிச் செல்வதற்குத் தயங்குவார் என கலைஞர் கணக்குப் போடுகின்றார். ஆனால், ராமதாஸின் வாக்கு வங்கியை வாழப்பாடியால் எந்தளவுக்கு உடைக்க முடியும் என்பதுதான் கேள்விக்குறியாகவுள்ளது.



கலைஞர் ஒரு புறத்தில் தனது வியூகங்களை அமைக்க இராமதாஸின் நிலைப்பாடோ வேறுவிதமாக இருக்கின்றது. தமிழகத்தில் மூன்றாவது அணி ஒன்றுக்கான சாத்தியமே இல்லை எனக் கூறும் இராமதாஸ், வாழப்பாடி எந்த அணியில் இணைகின்றாரோ அந்த அணியில் தான் இருக்கப் போவதில்லை என்பதைப் பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றார். அதேவேளையில் கருணாநிதியின் ஆட்சியைக் குறைகூறாத இராதாஸ், அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதையிட்டும் எதுவும் தெரிவிக்கவில்லை. இராமதாஸின் ஆதரவாளர்களோ அவ்வாறான கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக ஏற்கனவே பேச்சுக்கள் ஆரம்பமாகிவிட்டன எனக் கூறுகின்றார்கள். இராமதாஸின் அரசியல் வாரிசான அன்புமணி இது தொடர்பான பேச்சுக்களை அ.தி.மு.க.வின் இரண்டாம் மட்டத் தலைவர்களுடன் ஏற்கெனவே நடத்தியிருக்கிறார்.

இரண்டாம் மட்டக் கட்சிகளின் நிலை இவ்வாறு பேரம் பேசும் கட்டத்தில் உள்ள அதேவேளையில் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வருவதை எந்தச் சக்தியாலும் தடைசெய்ய முடியாது என்பதில் கலைஞர் உறுதியாகவுள்ளார். அதற்கும் காரணங்கள் உள்ளன. முதலாவதாக மத்தியில் ஆட்சி அமைத்துள்ள பாரதீய ஜனதா கூட்டணியுடனான அவரது உறவுகள் சுமுகமானதாகவே உள்ளது. அவர்களது ஆதரவையும் வைகோவின் மறுமலர்ச்சி தி.மு.க.வின் ஆதரவும் அவருக்கு உறுதியாகக் கிடைக்கும்.

இரண்டாவதாக ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகள் தொடர்ந்து கொண்டுள்ளன. தேர்தலில் போட்டியிடுவதற்கான தடை ஒன்றும் ஜெயலலிதா மீது விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ள போதிலும். ஜெயலலிதாவின் பெயர் இவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால் கட்சியின் தலைவராக யாரை நியமிப்பது என்பதில் அ.தி.மு.க.வில் குழப்ப நிலை ஏற்படும். இது - தனது வெற்றிக்கான மற்றொரு அத்திவாரமாக அமையும் எனக் கலைஞர் கணக்குப் போடுகின்றார்.

தேர்தலுக்கு இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. வரும் வாரங்களில் கூட்டணி அமைப்பதற்கான பேரங்களே தீவிரமடையும்.

ரதன்

நிகரில்லை

தென்றுமணி

அன்ரன் செல்வகுமார்

சியாமளாவை நான் முதன் முதலாகப் பார்த்த போது அவளுக்குள் இப்படி ஒரு மென்மையும் இளகிய மனமும், அன்பின் தேடலும் இருக்குமென்று என்னால் உணர முடியவில்லை. நான் அந்த வங்கியின் கிளைக்கு மாற்றலாகி வந்த அன்றே அவள் எதற்காகவோ பக்கத்து மேசைக்காரனிடம் சண்டையிட்டுக் கொண்டிருந்தாள். அவனும் எங்கள் ஸ்டாஃப் என்று தான் நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் ஒரு வங்கிக் கிளையில் கெஷியராக இருந்தாலும் நாங்கள் எல்லோரும் ஒரு குடும்பம் போல பழகிவந்த எனக்கு இந்த புதிய இடமும் அவர்கள் இந்த மாதிரியாக சண்டையிட்டுக் கொண்டதும் புதிதாகவும் கொஞ்சம் வியப்பாகவும் கூட இருந்தது.

சியாமளாவின் கோபமும், வார்த்தைகளும் எனக்குப் பெரிய அச்சத்தைக் கொடுத்தது. இத்தனை துணிச்சலையும், ஆக்ரோஷத்தையும் வங்கியில் வேலைசெய்யும் ஒரு பெண்ணிடம் நான் எதிர்பார்க்கவே இல்லை.

நான் அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதை சியாமளாவும் பார்த்துவிட்டாள். அவளின் பார்வையைத் தவிர்த்து நான் மனேஜர் அறைக்குள் விரைந்தேன். எனது பிரத்தியேகக் குறிப்புகளுடன் சில பைல்களை தந்து அவர் என்னை கேஷியர் டிபார்ட்மன்டுக்கு அனுப்பினார். சியாமளா தான் எனக்கு இன்சார்ஜ் எனத் தெரிந்துகொண்டு வெளிவந்தேன்.

சியாமளா கேஷியரில் கெபினில் உட்கார்ந்திருந்தாள். "ஐ ஏம் பரமேஸ்வரன். இன்றுதான் ட்ரான்ஸ்பரில் வந்திருக்கிறேன்" இதற்கு முன் "கேஷ்" செய்திருக் கிறீர்கள் தானே. இது பெரிய வங்கி, எல்லாம் கம்யூட்டர் மயம். எனவே எல்லாம் வேகமாக செய்ய வேண்டும்" என்றாள். நல்ல இயல்பாக, பண்பாக, மரியாதை கலந்து ஆங்கிலத்தில் பேசினாள்.

சற்று முன்பு சண்டை போட்டவள் இவளா என்று எனக்கு சந்தேகமாக இருந்தது.

அன்று முழுவதும் எனக்கு அவள் மிகவும் உதவினாள். தனது வேலையை சீக்கிரம் முடித்துவிட்டு எனது கவுண்டருக்கு வந்தாள். பெலன்ஸ் பண்ணத் திணறிக் கொண்டிருந்த போது தானாகவே பணத்தை எண்ணிப் பார்த்து டோட்டல் பண்ணிவிட்டு "மை கோட்" என்றாள். எனக்கு தலை சுற்றியது. "என்ன நடந்தது? பணம் ஏதாவது குறைகின்றதா" என கலக்கத்துடன் கேட்டேன். "இல்லை. பெலன்ஸ் ஆகிவிட்டது" என்றாள். காலையில் நீங்கள் "கேஷியர் கெபினுக்கு" வரும்போது ஒரு ஐம்பது ரூபாய் என்றாலும் குறையும் என எதிர்பார்த்தேன் என்றாள். நான் வாய்விட்டுச் சிரித்தேன்.

அதன் பின் வரும் நாட்களில் அவள் எனக்கு உதவுவாள். எனது சொந்த வாழ்க்கையைப்பற்றி, எனது தாய், தகப்பன், சகோதரர் கள் பற்றி நான் தங்கி இருக்கும் இடத்தைப்பற்றிச் சாப்பாடுபற்றி, பொழுதுபோக்குப் பற்றி, நான் இதுவரை காலமும் திருமணம் செய்யாதிருப்பது பற்றி எல்லாம் அக்கறையோடு விசாரித்தாள்.

பொய் பாதியும், மெய் பாதியும் கலந்து பதில் சொன்னேன். அவளைப் பற்றிக் கேட்டேன்.

என்னைப் பற்றி நான் சொல்வதைக் காட்டிலும் இந்தக் கிளையில் வேலை செய்பவர்களிடம் என்னைப்பற்றிக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் நிறையச் சொல்வார்கள். நான் நேற்று எங்கே, எவனோடு சுற்றிக் கொண்டிருந்தேன். என்ன படம் பார்த்தேன், எந்த ஓட்டல்களில் சாப்பிட்டேன் என்பதெல்லாம் அவர்களுக்கு அத்துப்படி.

.....

ஒரு பெண் பத்தினியா இல்லையா என்பதை இந்த பிராஞ்சில் வேலை செய்யும் மக்கள் தீர்மானிக்கும் விதமே தனி ரகம். கொஞ்சம் முதலில் உரசிப் பார்ப்பார்கள். அதற்கு அந்தப் பெண் பின்வரும் விளைவுகளைப் பற்றிப் பயந்து கொஞ்சம் பேசாமலிருந்தால் இது ஒரு மாதிரி கேஸ் என்று லேபல் குத்தி விடுவார்கள். பொங்கி எழுந்துவிட்டால் பெரிய பத்தினி என்று ஒதுங்கிப் போய் விடுவார்கள்.

"எதற்காக அந்த ஸ்டாபுடன் அன்று சண்டை போட்டீர்கள்?" என்று நாசூக்காகக் கேட்டேன். "எனக்கு வரும் கடிதங்களை யாரோ பிரித்துப் பார்க்கிறார்கள். எனக்கு நெடுநாளாக ஒரு சந்தேகம். போன வாரத்தில் எனக்கு நானே ஒரு கடிதம் எழுதி, நன்றாக ஒட்டித் தபாலில் போட்டேன். நான் சந்தேகித்தபடி அந்தக் கடிதமும் பிரிக்கப்பட்டு, மறுபடியும் ஒட்டப்பட்டிருந்தது. விசாரித்துப் பார்த்ததில் அந்த நபர்தான் எனத் தெரிந்தது. அது தான் என்னால் தாங்க முடியவில்லை. அன்று அப்படி வெடித்துவிட்டேன்" என்றாள்.

"வேலை செய்வதற்காக வீட்டை விட்டு வெளியே வந்துவிட்ட பெண்களிடம் சில ஒழுங்கு முறைகளையும் இந்தச் சமூகம் எதிர்பார்ப்பது குற்ற மில்லையே..." என்று எனது அடுத்த கேள்வி!

"ஒழுங்கு முறை பெண்களுக்கு மட்டும்தானா? பெண்கள் பின்னால் உரசிக் கொண்டோ, முட்டிக் கொண்டோ பஸ்சில் நின்றபடி ஏதேதோ சங்கேத பாஷையில் கொச்சையாய்ப் பேசும் இந்த ஆண் வர்க்கத்துக்குக் கிடையாதா? அப்படித்தான் இருந்தாலும் எனது ஒழுக்கத்தை இவர்களிடம் நிரூபிக்க, இவர்களுக்கு என்ன தகுதி

சிறு கதை

இருக்கிறது?

உங்களில் விபச்சாரம் செய்யாதவன் யாரோ, அவன் இந்த விபச்சாரியின் மீது முதலில் கலலை எறியட்டும்" என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை அவள் சொன்னாள். இப்போது நான் சியாமளாவின் பேச்சில் கவரப்பட்டு அவளையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். "குப்பை மேட்டில் அமர்ந்து, தூய்மையைப் பற்றிப் பேசும் இந்த சமூகத்தின் சார்பாகப் பேசவேண்டாம்" என்றாள் அவள். "இந்தக் குப்பைச் சமூகத்துக்காகப் பேசவில்லை" என்றேன் நான். "உங்களுக்குப் புரிகிறேதோ இல்லையோ, வேலைக்காக வெளியில் வருகின்ற பெண்கள் இந்த ஆண் ஆதிக்க நாட்டில் எத்தனை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா...?" என்றாள்.

"எனக்குப் புதிது... அதனால்..." என்றேன்.

அவள் டென்ஷன் குறைந்து கொஞ்சம் சிரித்தாள். சிரிப்பு வெகுநேரம் நீடித்தது. அவள் நெஞ்சில் தேக்கி வைத்திருந்த வேதனையையும், கண்ணீரையும் அந்த சிரிப்பின் அலைகள் எனக்குத் தெரிவித்தன. இவ்வளவு இயல்பான, மென்மையான பெண்ணின் கண்ணீர் எனக்கு அவள் மீது ஒரு நல்ல மதிப்பை ஏற்படுத்தியது. அவளுக்கு இன்னும் திருமணமாகவில்லை என்றும், இரு சகோதரிகளும், ஒரு தம்பியும், வயதான அப்பாவும் அவளின் வருமானத்தை நம்பியுள்ளதாகச் சொன்னாள்.

சியாமளா என்னிடம் பேசுவதிலும், பழகுவதிலும் ஒரு உண்மையிருந்தது. எதையும் இயல்பாக எடுத்துக் கொள்ளும் தன்மையும், ஆத்மார்த்தமாகப் பேசி தனது மனதில் உள்ள கோபத்தைக் கூட வேஷம் இன்றி வெளிப்படுத்தினாள். அன்பையும் அதே பரிமாணத்தில் யதார்த்தமாக காட்டினாள். என்னை இது வரை மரியாதையாக அழைத்து வந்தவள் நான் அவளை விட இரண்டு வயது இளையவன் என்பதைத் தெரிந்து கொண்டு ஒருமையில் பேசத் துவங்கினாள். நாங்கள் இருவரும் ஒரு முறை வேலை முடிந்த பின்பு ஒன்றாக நடைபோட்டுக் கடற்கரைக் குப் போனோம். கடற்கரையில் நாங்கள் நிறையப் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு இலக்கியம், கவிதை, காதல், இளமை, வாழ்க்கை பற்றித் திரும்பியது.

ஏற்கெனவே அங்கு பல இளம் காதல் சோடிகளைப் பார்த்து என் மனம் உடைந்தது போலிருந்தது. அதனால் என் கவனம் அவள் பேச்சில் இருக்கவில்லை. சியாமளா அதை உணர்ந்து கொண்டாள்.

"என்ன பரமேஸ் என்ன ஆயிற்று உனக்கு?"

"இல்லை. ஒன்றுமில்லை."

"நான் சொல்லட்டுமா? நீ இப்பொழுது உனது பழைய காதல் நினைவுகளில் மூழ்கி இருக்கிறாய். ஒரு இருபத்தியெட்டு வயது இளைஞனுக்கு இந்த வயதில் இதை விட ஒரு பெரிய சோகம் இருக்க முடியாது."

"காதல் தோல்வி பெரிய சோகமில்லையா?"

"அது உன்னைப் போன்ற வர்களுக்குத்தான். காதல் ஒரு மாயை. அந்த மாயையைத்தான் சோகம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்."

"இல்லை சியாமளா. காதல் புனிதமானது."

"சரி அப்படியென்றால் நமது நட்பு ஆத்மார்த்தமானதில்லையா? புனிதமில்லையா? என்றாள். அதுவும் அப்படித்தான். ஆனால் இருந்தாலும் இதைவிடக் "காதல் உணர்வுகள் வேறுமாதிரியானவை. உணர்வுபூர்வமானது" என்றேன். "புரிகின்றது. உனது காதல் நிறை வேறியிருந்தால் உன் மனதிற்குள் நீ விடும் கண்ணீரும், சோகமும் போயிருக்கும் இல்லையா? " என்றாள்.

"நிச்சயமாக" என்றேன்.

"அதன் பின்பு உனக்கு வேறு கவலைகளே இருக்க முடியாதா? உன் காதலி அருகாமையும், அது சுற்பிக்கும் பலவீனங்களும், அது ஏற்படுத்தும் சலிப்பும் உன்னைச் சோகப்படுத்தாதா?" என்றாள்.

"கடல் உள்ளவரை அலை ஓயாது. அந்தக் கடற்கரையை வந்து மோதும் அலைகூட ஓய்ந்தாலும் காதல் நெஞ்சம் ஓய்ந்திடாது. கதிரவன் வளர்வதோ, தேய்வதோ கிடையாது. அந்தக் கதிரவன் கூடத் தேயலாம். காதல் நினைவு தேயாது. வானுக்கு என்றும் சொந்தமான நீலவண்ணம் கூட மாறினாலும் காதல் தடம் மாறாது" என்றேன்.

"காதல் பைத்தியக்காரத் தனமானது. உணர்ச்சிமயமானது. அறிவின் தெளிவு பிறக்கும் போது தான் காதலின் மடமை தெரியவரும்" என்றாள்.

"காதல் அது என்றுமே சலிப்பதில்லை. தினமும் அது ஒரு உற்சாகத்தில் இரு மனங்களையும் வைத்திருக்கும். நான் கனவுகளோடு யதார்த்தத்தையும் சேர்த்தே சுற்ற வன் என்பதால் வாழ்க்கையோடு அனுசரித்துப் போக என்னால் முடியும்" என்றேன்.

உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய். தினமும் உன் காதலியைப் பூங்காவில் கடற்கரை யில் சந்தித்து நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருக் கலாம். ஆனால் அவளை நீ திருமணம் செய்துகொண்ட பிற்பாடு அவள் நாள் முழுவதும் உன்னோடு இருப்பாள். காதலிக்கும்போது, மணிக்கணக் காகப் பேசும்போது இருந்த காதல் உணர்வை விட நாள் முழுக்க அவள் உன்னோடு இருக்கும் போது தோன்றும் உணர்வுகள் குறைவாகத்தான் இருக்கும்" என்றாள்.

"இருக்கலாம். அப்படிக் காதல் உணர்வுகள் குறையும் போது கூடவே சலிப்பும் ஏற்படத்தானே செய்யும்" என்றான்.

"சரி அதற்காக...?"

"எல்லாத் திருமண வாழ்க்கையும் இப்படி இருக்கும் போது குறிப்பிட்ட ஒரு பெண்ணுக்காக நீ ஏங்குவதும் அவள் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றது என்றும், வாழ்க்கையே இனி இல்லாதது போல் நீ நினைப்பதும் அர்த்தமாகப்படவில்லை. சுத்த முட்டாள் தனம்" என்றாள்.

"சியாமளா... உனக்கு காதலைப் பற்றித் தெரியாது. அது மனதில் ஏற்படுத்திய தாக்கமும் புரியாது. அது தான் இந்த மாதிரியான உணர்வுகளைப் பற்றி புரியாமல் பேசுகிறாய்".

"வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அதன் தாற்பரியம் தெரியாமல்தானிருக்கும். நீ சொல்வது போல் நான் வெளியில் நின்று பார்க்கவில்லை. நானும் அந்த காதல் உணர்ச்சிகளை அனுபவித்திருக் கிறேன். என் 18வது வயதில் எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு இளைஞன் குடியிருந்து வந்தான். விவசாய இலாகாவில் உத்தியோகம், மிக அழகான நல்லவன், அமைதியானவன். சத்தமாகக் கூட பேசமாட்டான். கோபப்படத் தெரியாது. அவனது நடத்தை எனக்கு அவன்பால் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியது. அவனது அழகும் அமைதியும் எனக்குள்ளே சில உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டன. அவனையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். காலமெல்லாம் அவனுடனே வாழ வேண்டும் என்று நினைத்தேன். விளைவு காதல் உருவாகியது. அவனை நானும், என்னை அவனும் காதலித்தோம். ஆனால், அக் காதல் வந்த மாதிரியே ஓடி மறைந்தது. அவன் ஊருக்குப் போய் வரும் போது புது மனைவியுடன் வந்து சேர்ந்தான். பிறகு அவனை மறக்க முயன்றேன்."

"அவ்வளவு சுலபத்தில் மறக்க முடியாதே" என்றேன். "இல்லை. மறந்தேன். இயல்பாக எனக்குள்ள இசை ஆசையால், இசை வகுப்பில் சேர்ந்து கவனத்தைத் திருப்பி இசையை ஆர்வமாகக் கற்றுக் கொண்டபின் இசை என்னை முழுதாக ஆக்கிரமித்தது.

தொடர்ச்சி 18ம் பக்கம்

கல்வியியற் கல்லூரி மாணவர்களின் மாவீரர் தினமும் காட்டிக் கொடுப்பும்.

மாவீரர் தினம் முடிந்தவுடன் வவுனியா பூந்தோட்டப் பகுதியில் ஆங்காங்கே மாவீரர் தின பதாதைகள் கட்டப்பட்டதற்கும், சுவரோட்டிகள் ஒட்டப்பட்டதற்கும், வவுனியா கல்வியியற் கல்லூரியில் 27ம் திகதியன்று புலிக் கொடி ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டிருந்ததற்கும் இவரே காரணமென ஒருவரைப் படையினர் கைது செய்ததை பத்திரிகை வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

உண்மையில் நிகழ்ந்தது என்ன, புலிகள் புலிக்கொடி ஏற்றினார்களா? கைது செய்யப்பட்ட இளைஞன் யாரால் பொலிஸாரிடம் அடையாளம் காட்டப்பட்டார் என்பது போன்ற பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் பின்னணியில் இருப்பதை பலரும் அறியாதது மட்டுமல்ல இன்னமும் இந்த தகவல்கள் வெளிவராமல் கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கிடையே மட்டும் குசுகுசுக்கப்படுகின்றது. ஆம் கல்வியியற் கல்லூரி மாணவர்களைச் சுற்றியே இதன் பின்னணி அமைந்திருப்பது அதிர்ச்சியானது தான்.

கடந்த மாதம் 26ம் திகதி கல்லூரி வளாகம் எங்கும் மாவீரர்கள் பற்றிய சுவரொட்டிகள் திடீரென முளைத்திருந்தன. இச்செயல் இங்குள்ள சிங்கள மாணர்வர்களைக் கலவரப்படுத்த அவர்கள் பீடாதிபதியிடம் சென்று நமது பாதுகாப்பு தொடர்பாக முறையிட்டதோடு கல்லூரியை விட்டு வெளியேறி வீதிக்குச் சென்றும் விட்டார்கள். எனினும் பின்னர் ஒரு சுமுகமான நிலமையினால் சிங்கள மாணவர்கள் கல்லூரிக்குள் வந்து விட்டனர்.

இவை முடிய 27ம் திகதி மாவீரர் களைக் கௌரவிக்கும் நேரத்தில் கல்லூரிக்குள் புலிக் கொடி ஒன்று பறப் பதையும் அதன் கீழே மலரஞ்சலி செலுத்தப்பட்டிருந்ததையும் கண்ட சிங்கள மாணவர்கள் நமது பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார்கள்.

கல்லூரிக்கு விரைந்த பொலிஸாரும் புலிக் கொடியை அறுத்து தூவப்பட்டிருந்த மலர்களையும் ஒன்றாக்கி எரித்து விட்டு அனைத்து மாணவர்களையும் அழைத்து, கல்லூரிக்குள் அரசியல் வேண்டாம். நீங்கள் அனைவரும் இங்கிருந்து வெளியேறும் போது ஆசிரியர்களாகவே செல்ல வேண்டும் எனவே அரசியல் வேறுபாடுகளை கல்லூரிக்குள் அனுமதிக்காதீர்கள் என்று அறிவுறுத்தி விட்டுச் சென்று விட்டார்கள்.

பொலிஸார் அகன்றதும் சிங்கள மாணவர்கள் சிங்கள, தமிழ், ஆங்கிலத்தில் கல்லூரிக்குள் அரசியல் வேண்டாம், சிங்கக் கொடியே எமக்கு ஒரே கொடி என்று சுவரொட்டிகளை ஒட்டினார்கள். இதனை ஆட்சேபம் செய்த பிற மாணவர்கள் இந்தச் சுவரொட்டிகள் மீது சாணியையும் வேறு கழிவு நீரையும் தெளித்ததோடு பல சுவரொட்டிகளை கிழித்தெறிந்தும் போட்டார்கள்.

மாணர்வளுக்கிடையேயான இத்தகையதோர் முறுகல் நிலை தொடர்ந்து கொண்டிருக்க 27ம் திகதி இரவு 9.30 மணியைத் தாண்டி மூன்று பேர் தங்களைப் புலிகள் என்று அறிமுகம் செய்து கொண்டு மாணவர்கள் தங்கியிருந்த விடுதிகளுக்குச் சென்று மாணவர்களுடன் உரையாடினார்கள்.

வந்தவர்கள் புலிகள் தானா என்ற ஐயத்தில் கல்லூரி மாணவர்கள் குழம்பிப் போய் இருந்த நிலைமையில் வந்தவர்களில் ஒருவர் மாணவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்க மற்றைய இருவரும் தம்மை இனங்காட்டாமல் மறை வான பகுதிக்குள்ளேயே இருந்து கொண்டனர். எனினும் சில மாணவர்கள் தமது ஐயத்தை அவர்களிடமே வினவ, வந்தவர்கள் அந்த மாணவர்களை பீடாதிபதியிடம் அழைத்து சென்று தங்களை மாணவர்களுக்கு யார் என்பதைத் தெரிவிக்கும் படி கேட்டுக் கொண்டார்கள் பீடாதிபதியும் இவர்கள் தன்னிடம் ஆயுதத்துடன் வந்தவர்கள் என்பதை மாணவர்களுக்குத் தெளிவாக்கினாரேயொழிய அவர்கள் புலிகள் தான் என்று கூறிவிடவில்லை.

ஆனால் வந்தவர்கள் புலிகள் அல்ல என்பதை உணர்த்தும் விதமாக அவர்களின் பேச்சும் நடத்தையும் காணப்பட்டதை மாணவர்கள் கவனிக்கத் தவறவில்லை. குறிப்பாக 27ம் திகதி இரவு நேரம் 12.01 க்கு நீங்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்றும் இதுவரை போரில் 16221 மாவீரர்கள் வீரச் சாவடைந்துள்ளனர் என்று விட்டு பின்னர் 16821 பேர் தான் மாவீர ரானார்கள் என் மாற்றிக் கொண்டும் கதைத்தது தமிழ் மாணவர்களுக்கு வந்தவர்கள் மீதான சந்தேகத்தை வலுப்படுத்த போதுமான காரணியாக இருந்தது.

இரு வருடங்களிற்கு முன்னரேயே மாவீரர்களுக்கு தீபமேற்றும் நேரத்தினை புலிகள் மாற்றிக் கொண்டார்கள். அனால் இங்கே வந்த புலிகள் என்போரோ 28ம் திகதி உதயமாகியவுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும்படி கேட்டதோடு வீரச்சாவடைந்த மாவீர்கள் பற்றிய சரியான எண்ணிக்கையும் தெரியாதவர்களாக இருந்தார்கள்.

தமிழ் மாணவர்கள் இவ்விதம் ஐயமுற சிங்கள மாணவர்களோ வந்தவர்கள் குடித்து விட்டு வந்திருக்கிறார்கள் நாங்கள் புலிகள் கடடுப்பாடுடையவர்கள் என்றுதான் அறிந்திருக்கின்றோம் இவர்கள் புலிகளல்ல என்று திடமாக நம்பத் தொடங்கி விட்டார்கள். மாணவர்களின் இந்த வலுவான சந்தேகத்தினால் வந்த புலிகள் என்போர் திரும்பிச் செல்லும் போது அவர்களுக்குத் தெரியாமல் சில தமிழ் மாணவர்கள் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற சமயம் ஒருவர் கல்லூரி அமைத்துள்ள சுற்றுப்புறக் கிரா மத்து வீடொன்றில் புகுந்து உணவு உட்கொள்ள ஆயத்தமாகி இருக்கிறார்.

மாணவர்களோ உடனேயே அவ் வீட்டுக்குள் புகுந்து குறிப்பிட்ட நபரை வெளியே இழுத்து வந்து தாறுமாறாக அடிக்கத் தொடங்கி விட்டார்கள். அத்துடன் நிற்கவில்லை அதிகாலையில் நாங்கள் வருவோம் அச்சமயம் இவர் இருக்க வேண்டும் இல்லையேல் நடப்பதே வேறு என்று அந்த வீட்டுக்காரர்களை எச்சரித்து விட்டுச் சென்று உடனேயே பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்து விட்டார்கள்.

சாதாரண பொதுமகனையே புலியாக்கும் பொலிஸாருக்கு புலி என்று கூறிய நபரே இருக்கின்றார் என்றால் தான் எத்தனை சந்தோசம்? பொலிஸார் விரைந்து வந்து அந்நபரை பிடித்துச் சென்று விட்டதோடு அன்றைய தினம் அப்பகுதிகள் யாவும் திடீர் சோதனைக்கும் உள்ளாக்கப்பட்டது.

இந்நிலையில் கல்லூரியின் சிங்கள மாணவர்கள் தங்களுக்கு பாதுகாப்பில்லை என்று கடிதம் எழுதி பீடாதிபதியிடம் ஒப்படைத்து விட்டு அறுபது பேர் வெளியேறிச் சென்றுவிட, பீடாதிபதியும் தமக்கு பாதுகாப்பு தரவேண்டும் என பொலிஸாரிடம் கேட்டுள்ளார். எனினும் பொலிஸாரோ வவுனியாவில் சகல இடத்திலும் தான் புலிகள் இருப்பார்கள். கல்லூரிக்கு எம்மால் பொலிஸாரை அனுப்ப இயலாது என்று கூறிவிட்டுச் சென்று விட்டனர்.

எனவே பீடாதிபதி சில மாணவர்களை தனது பாதுகாப்பிற்கென அழைத்து தான் தங்கும் அறையைச் சுற்றி காவலுக்கு விட்டிருக்கின்றார். ஆனால் அன்றைய தினமும் அதாவது 29ம் திகதியும் புலிகள் என்று கூறிக் கொண்டு ஆயுதங்களுடன் வந்தவர்கள் பீடாதிபதியை குறிப் பிட்டதோர் பகுதிக்கு வந்து தம்மைச் சந்திக்குமாறு அழைத்திருக்கின்றனர். எப்படி இருந்த போதும் இன்றையவரைக் கும் பீடாதிபதி அவர்களைச் சந்தித்தாரா என்பது தெரியவில்லை இதன்பின் இந்த நிலமையும் முடிவுக்கு வந்திருக்கின்றது.

உண்மையில் கல்வியியற் கல்லூரிக்குள் புலிக்கொடி கட்டப்பட்டதும், மலரஞ்சலி செலுத்தியும், சுவரொட்டிகள் ஒட்டியதும் கல்லூரி மாணவர்கள் என்பதை பல மாணவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். இதில் கூட சில மாணவர்கள் தேசியக் கொடி என்று தமிழ் மக்கள் மதிக்கும் புலிக்கொடியை ஒரு துணியில் புலியை அலங்கோலமாய் கீறி கட்டி தேசியக் கொடியையும் மாவீரர்களையும் இதைச் செய்தவர்கள் அவமதித்திருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

அத்துடன் கல்லூரிக்குள் மாணர்வகள் தாங்களே சகலதையும் செய்து விட்டு புலிகள் என்று கூறி வந்த நபரைப் பிடித்து அடித்ததோடு அவரைப் பொலிஸாரிடம் பிடித்து கொடுத்ததையும் பல மாணவர்கள் கேவலமான நடத்தை என்கிறார்கள். அந்நபர் புலியா? அல்லது அவர்களின் ஆதரவாளரா என்பது தெரியாமல் மாணவர் நடந்து கொண்ட விதம் நிட்சயமாக காட்டிக் கொடுப்புத்தனமே என்கின்றனர் இந்த மாணவர்கள்.

இதைவிட பீடாதிபதி பல நாட்களுக்கு முன்னரேயே சில மாணவர்களை தனக்கு பாதுகாப்பிற்கென்று அழைத்திருக்கின்றார். எனவே அவருக்கு ஏற்கனவே ஏதோ ஒரு விதத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக் கின்றது என்பதையும் மாணவர்களில் சிலர் சுட்டிக் காட்டுகின்றார்கள். புலிகள் பெயரில் பீடாதிபதியிடம் பணம் பெற்றுக் கொள்ள சிலர் முனைந்ததாகவும் அவர்கள் ஐயம் கொள்கின்றனர்.

அரசு படைகளோடு இணைந்து செயற்படும் சில அயுதக் குழுக்களும் வவுனியாவில் நடமாடுவதால் வருபவர்கள் யார் என்பது அறிய முடியாதோர் சூழ்நிலை இருக்கின்றது. எனினும் பூந்தோட்டம் பகுதியில் புலிகள் என்று கூறியோர் பொதுமக்களிடம் பணம் அறவிட்டுக் கொள்வதாக என இங்கே ஒரு சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வந்தாலும் பணத்தை இழந்தவர்கள் உண்மையை வெளியே கூற முடியாததோர் துர்ப்பாக்கியம் இருக்கின றது. எப்படியோ ஒன்று மட்டும் தெளிவாகுகின்றது. அதாவது புலிகள் பெயரில் வவுனியாவில் எந்தக் கும்பலும் எதுவும் செய்து முடிக்கலாம். புலிகளும் இதனை உணர்ந்து கொண்டு தங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள் என இனிமேல் எதிர்ப்பார்க்கலாமா?

சங்கீதா.

பாராளுமன்ற உறுப்பினர்.....

5ம் பக்கத் தொடர்ச்சி

அவ்வாறான முறைகளை எம்மாலும் ஏற்படுத்திக் கொள்ள முடியாமைக்கான காரணமென்ன?

பொதுமக்களின் வெறுப்புக்குக் காரணமாக அமைந்துள்ள பொதுமக்கள் பிரதிநிதிகளின் அரசியல் ஒழுங்குகளின் மாற்றமொன் றிற்காகவேண் டி இலங்கையிலும் அவ்வாறான முறைகளை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். அப்போது தவறான முறை யில் பணத்தைச் சேகரித்துக் கொள்ளும், தவறான முறையில் மக்களை வற்புறுத்தும், தவறான முறை யில் பாராளுமன்றத் திற்குத் தெரிவாகும் உறுப்பினர்களுக்கு எதிராக பொதுமக்களுக்கு முறை ப்பாடு செய்ய முடியும். இம் முறைப்பாடுகளை விசார ணை செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் நிர்வாக முறையொன்று ஏற்படுத்துதல் வேண்டும். பொதுமக்களுக்கும், பாராளுமன்ற அங்கத்தவர் களுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் சீரழிவை இவ்வகையான மறுசீரமைப்பின் மூலமே சீர்செய்ய முடியும்.

வெளியே கேட்ட சத்தம், மத்தியான உணவிற்காக வெளிமண்டபத்திற்குச் சென்ற பெண்களைத் திடுக்கிட வைத்தது. பெரிய ஊர்வலம் ஒன்று போய்க் கொண்டிருந்தது. சிவப்பு நிறப் பதாகைகள் அளவற்றதாகத் தெரிந்தன. "தொழிலாளருக்கு உரிமைகொடு" "தொழிலாளர்களும் மனிதர்களே..." "வேலைக்கேற்ற ஊதியம் கொடு" என்று குரல்கள் உச்சதொனியிலே கேட்டன. சிலபெண்கள் மண்டபத்துக்கு எதிரேயுள்ள மதிற் சுவரின் பின்னாலே நின்று அந்த ஊர்வலத்தினை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் மனதுள்ளும் ஊர்வலத்தில் ஒலித்த குரல்கள் தமது சொந்தக் குரலாய் எதிரொலித்தன.

தற்செயலாக, குளிரூட்டப்பட்ட அறையினுள்ளே இருந்து வெளியே வந்த ரஞ்சன் மதிற் பக்கமாக வெளியே பார்த்துக் கொண்டு நிற்கிற பெண்களைக் கண்டான். அடுத்த, கணமே அவனது முகம் பொருமிச் சிவந்தது. உரத்துக் கத்தினான்.

"ஏ கமலா, காஞ்சனா..."

சொல்லியவன் அவர்களைக் கெட்டவார்த்தைகளால் அடிக்குரலிலே திட்டியபோது இந்திராணி பரபரப்புடன் அங்கே ஓட்டமும் நடையுமாக வந்தாள்.

"என்ன சேர்?"

அவளைக் கோபத்தோடு கேட்டான்;" கமலாவும் காஞ்சனாவும் எங்கே?"

"சாப்பாட்டு அறையிலை, கூப்பிடட்டுமா சேர்?"

"அவளைவையை விடு; அதோபார். அந்தப் பெண்களை இங்கே கூட்டி வா..."

மதிற்பக்கமாக ரஞ்சனின் கை நீண்டது.

அந்த இடத்திற்கு அப்போது கமலா வந்தாள். சாப்பாடு சாப்பிடப் போனவளை ரஞ்சன் கூப்பிட்டான் என்ற செய்தியே சாப்பிடாமல் அங்கே கூட்டி வந்து விட்டது.

அவளை எரிச்சலோடு பார்த்தான் ரஞ்சன்.

"நீங்களெல்லாமென்ன வெள்ளைக்காரக் கோடீஸ்வரர்களா? அந்தந்த நேரமே சாப்பிட வேண்டுமா? அதோபார், அந்தப் பெண்கள் தொழிற்சங்க ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். இன்றைக்குப் பார்க்கிறார்கள். நாளைக்கு இங்கேயே தங்களுக்குத் தொழிற்சங்கம் அமைப்பார்கள். இதையெல்லாம் கவனிக்காமல் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

ரஞ்சனுக்குத் தான் கதைத்தால் மற்றவர்கள் பதில் கூறுவது பிடிக்காது. மேலும் கோபம் வந்துவிடும். வார்த்தைகளால் கேவலமாகவும், குரூரமாகவும் அடிப்பான். எதையுமே பேசவிரும்பாது மௌனமாய் மதிலோரப் பக்கமாக இருந்து வரும் பெண்களையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

அப்போது ஒடிசலான தோற்றமுள்ள காஞ்சனாவும் அங்கே வந்தாள். அவளுக்கு அடர்ந்த சுருள் சுருளான முடி. முழங்கால் வரை நீண்ட ஒற்றைப் பின்னல்,

"சேர்..."

தயங்கியவாறே முன்னே வந்தவளை அதட்டினான்.

"தலையை பின்னிக் கொண்டிருந்தாய்?"

"இல்லை சேர்..."

"வேறெதைப் பின்னினாய்..."

ஆபாசமாகக் கையை ஆட்டினான்.

கமலாவின் மனதினுள் சினம் அரும்பியது.

அப்போது இந்திராணியும் அந்தப் பெண்களும் அங்கே வந்தனர். அவர்களது முகம் வாடிச் சுருங்கியிருந்தது. தலையைக் குனிந்த படி நின்றனர்.

இந்திராணியின் முகத்தில் எரிச்சல்.

ரஞ்சன் கத்தினான்.

"இதென்ன வேலை செய்கிற இடமா? அல்லது பொதுச் சந்தையா? உங்களை யார் வீதிப் பக்கமாகப் பார்த்துக் கொண்டு நிற்கச் சொன்னது?"

மௌனம்.

"வாய்க்குள்ளை என்ன? இந்திராணி நீ சொல்லு?"

"இரண்டு பிரிவாகத்தான் சாப்பாட்டு அறைக்குள்ளே போய்ச் சாப்பிடலாம். இவர்கள் இரண்டாம் பிரிவு. முதற் பிரிவினர் உள்ளே சாப்பிடப் போனதால் இவர்கள் வெளியே நிற்பதை விட வேறு வழியில்லை. அதனால் தான் நின்றதாகச் சொல்கிறார்கள்..."

"இப்படிச் சொன்னவள் இதிலே யார்?"

அதட்டினாள்.

இந்திராணி உறுதியோடு அவனைப் பார்த்தாள்.

"எல்லோரும் அதைத்தான் சொன்னார்கள்..."

"என்ன?" கத்தினான்.

சப்பாத்துக் காலால் நிலத்தை அடித்தான்.

"எல்லோரும்.. எல்லோரும்.. இவர்களோடு நீயும் சேர்ந்தா இதைச் சொல்கிறாய்?"

இந்திராணி தீர்மானமாக அவனைப் பார்த்தாள்.

"சொல்லு, நீயுமா?"

கமலா கேள்வி தொனித்த முகத்தோடு இந்திராணியைப் பார்த்தாள். மனதினுள்ளே குழப்பம்

"ஒவ்வொரு நாளும் சாப்பாட்டு நேரத்திலை இவர்களெல்லாம் இப்படித்தான் நிற்கிறது வழக்கம். இன்றைக்குத் தான் முதல் தரமாக வந்து நிற்க இல்லை."

"அவர்களுக்காகவா நீ பேசுகிறாய்?"

இந்திராணி, கமலாவைப் பார்த்த பார்வையிலே இரக்கம் மேலிட்டுத் தெரிந்தது. சில வேளைகளில் பேச்சு வலுத்தால் அவள் தன்னை மறந்து பேசத் தொடங்கி விடுவாள். இந்திராணியின் முகத்திலே தொனிந்த சினம் அப்படித்தான் தெரிந்தது.

"சொல்லு.."

உறுக்கினான்.

நிதானமாக அவனைப் பார்த்தாள் இந்திராணி.

"நான் யாருக்காகவும் பேசவில்லை. உண்மையைப் பேசுகிறேன். இது சரியென்று நினைக்கிறேன்..."

அந்த வார்த்தைகளை ரஞ்சன் எதிர்பார்க்கவில்லை. முகம் சுருங்கியிருக்கப் பெண்களிடம் லேசான சிரிப்புத் தெரிந்ததைக் கண்டான்.

"உங்களின் பெயரெல்லாம் எனக்கு யாராவது ஒரு ஆள் எழுதித் தந்துவிட்டு இங்கிருந்து சாப்பிடப் போகலாம். போனஸ் விஷயத்தை நான்தான் தீர்மானிப்பேன். அப்போது பார்க்கலாம். இந்திராணி மட்டும் என் அறைக்கு வா..."

அவனை எரிப்பது போலப் பார்த்தாள் அவள்.

"எதுக்காக வரவேணும்?"

"நான் சொல்வதன்படி நீ நடக்க வேண்டும்..."

கமலா, இந்திராணியைப் பார்த்தாள்.

அலட்சிட்சியமாகச் சிரித்தாள் இந்திராணி.

"எதற்காக அழைக்கிறாய். என் கையைப் பிடித்து இழுத்து முத்தம் கொடுக்கவா?"

அவள் வார்த்தைகளில் எல்லாருமே அதிர்ந்து, திகைத்துப் போய் நின்றனர்.

ரஞ்சனின் உடலெங்கும் வேர்த்தது. உடல் பரபரத்தது.

பதறிய குரலை இயல்புக்குக் கொண்டு வந்தவாறே அதட்டுகிற குரலிலே,

"தேவையற்ற விஷயங்களை, பொய்யை இங்கே கதைக்க வேண்டியதில்லை. நீங்கள் எல்லாரும் சாப்பிடப் போகலாம்..." என்றான்.

காஞ்சனாவைப் பார்த்தவாறே, "எனக்கு என்ன நடந்ததென்பதை நீங்கள் அறிய வேணும்... நில்லுங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் போங்கள்..." என்றாள் இந்திராணி.

காஞ்சனாவின் மனதினுள்ளே புன்னகையோடு கோபமும் பெருகிற்று. ஒரு வெள்ளிக்கிழமையன்று அரை நாள் லீவு கேட்டு ரஞ்சனின் அறைக்குள்ளே அவள் சென்ற போது, "உனக்கு அரை நாள் லீவல்ல ஒரு நாள் லீவே தருகிறேன். ஆனால் அதற்காக நான் கேட்பதை நீ தருவாயா?" என்று கேட்டான். இவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சமாளித்தவாறே, "சேர் நான் ஒரு ஏழை. உங்களுக்குத் தர என்னிடம் என்ன இருக்கிறது?" என்று கேட்டாள். அவன் சட்டென்று எழுந்து அவளின் அருகே வந்தான். அவளின் அடர்ந்த கூந்தலை வருடியவாறே சட்டென்று அணைத்து முத்தங் கொடுக்க முயன்றான். அவள், அவனை உதறிவிட்டு வெளியே வந்தாள். மறுநாளிலிருந்து வேலைக்குப் போகாமல் நிற்க அவள் நினைத்தாள், நோயாளியான தாயிடம் எதைச் சொல்லிவிட்டு நிற்பது? மறுநாளே வேலைக்கு வந்து விட்டாள்.

கமலா திகைப்பும் எரிச்சலும் செறிய ரஞ்சனைப் பார்த்தாள். இந்திராணியைப் பரிவோடு ஏறிட்டாள்.

நடந்த யாவற்றையும் கூறிமுடிந்தாள் இந்திராணி. சொல்லி முடித்த போது கண்கள் கலங்கின, பெருமூச்செறிந்தாள்.

"ஏழைகளாகப் பிறந்திட்டம், என்ன செய்யிறது? படாதபாடெல்லாம் படவேண்டியிருக்குது... சரி வாருங்கள் சாப்பிடப் போகலாம்" என்றவாறு எல்லாரையும் பார்த்தாள்.

அப்போது உள்ளே படகுக் கார் ஒன்று வந்தது.

"எம்.டியினுடைய கார்..." என்று தன்னையறியாமலே கூறிய ரஞ்சனின் உடல் நடுங்கிற்று.

"நாங்கள் எம்.டியோடு கதைத்தால் என்ன?" என்றாள் காஞ்சனா, மற்றவர்களின் முகத்திலும் அதே முடிவு.

ரஞ்சன் சட்டென்று அவர்களைப் பார்த்தும் விட்டான்.

"தயவு செய்து இங்கிருந்து போய் விடுங்கள்... நான் இனிப் பிழைவிட மாட்டன். உங்களுக்கு நன்மை செய்வன்"

தொடரும்...

போர் ஓய்ந்தால்....
12ம் பக்கத் தொடர்ச்சி.....

சந்திரிகாவின் ஆறாண்டு காலச் சாதனைகளில் வரலாற்றுப் பிரசித்தம் மிக்கதான செம்மணிப் புதைகுழிகளின் ஆக்க கர்த்தாக்கள். சிறிலங்காவின் படையினரும் அதிகாரிகளும் தான் என்பது உலகறிந்த உண்மையாகும்.

இவையெல்லாம் மாதிரிக்கான சில சம்பவங்களே. முழுமையான விபரங்களைக் கேட்டால் நீங்கள் மலைத்துப் போவீர்கள்.

இவையனைத்துமே தேசப்பற்றுடன் கூடிய தீரச் செயல்களின் வெளிப்பாடுகள் தான் என்பதை சிறிலங்கா இராணுவத்தில் இணைய தங்கள் பிள்ளைகளை அனுப்பிய எந்தத் தென்பகுதித் தாயும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

அது வேறு யாரோ செய்த வேலை என்று தான் கூறுவார்கள். அப்படியானால் அந்த "வேறு யாரோ" எனக் கூறுப்படுபவர்கள் யார்?

கப்டன் சாலிய நிஷேந்திர பர்ணாந்து அவர்கள் கடைசியாகப் பணியாற்றியதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரந்தன் கிளிநொச்சி இராணுவ முகாம் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட, காணாமல் போய்விட்டதாகக் கருதப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை இவ்வாரத்தில் 55ஐ எட்டிவிட்டுள்ளது. அப்பகுதியில் படையினர் பிடியில் சிக்கிக் காணாமல் போனோர் தொகை நூற்றுக் கணக்கில் வரும்.

கப்டன் சாலிய நிஷேந்திர பர்ணாந்து காணாமல் போயுள்ளமை குறித்து கண்ணீர் விடும் அவரது தாயாரைப் போன்று ஏனைய காணாமல் போனோரை நினைத்து கண்ணீர் வடித்தபடி இருக்கும் அவர்களின் தாய்மார்களினதும் உறவுகளினதும் முகங்களையும் ஒருமுறை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கிளிநொச்சிப் பகுதியில் இராணுவம் நிலைகொண்ட பின்னர், தமக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என நம்பி வேறுவழியின்றி தங்கள் வாழ்விடங்களில் உள்ள அற்ப சொற்ப சேமிப்புக்களை, அத்தியாவசியப் பொருட்களை, உணவுவகைகளை எடுக்கச் சென்ற அப்பாவிகளின் எலும்புக்கூடுகள் தான் இவைகள், இவர்களில் எத்தனைபேரின் புதைகுழிகளுக்குள் இந்தக் கப்டன் சாலிய நிஷேந்திர பர்ணாந்து காரணமாக இருந்திருப்பாரோ தெரியாது. ஆனால் அவருடன் அங்கு பணியாற்றியவர்கள் தான் இதற்குக் காரணமானவர்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் கிடையாது.

இது அந்த தாயை மனம்நோக வைக்கும் கூற்றாக எழுதவில்லை. யதார்த்த நிலையைத் தான் குறிப்பிடுகின்றேன்.

அதேசமயம் இவர்களால் அழித்தொழிக்கப்பட்ட மக்கள் இத்தகைய நடவடிக்கைகளுடன் எவ்வகையிலும் சம்பந்தப்படாத அப்பாவிகள், மிகச் சாமானிய மனிதர்கள் தான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்திற்காக துப்பாக்கி ஏந்தி யுத்தகளத்திற்குச் சென்று அங்கு எதிரிகளைக் கொல்லும் போது, எதிரிகளின் துப்பாக்கிகளும் தம்மை நோக்கித் திரும்பும் என்பதையும் தெரியாமலா இவர்கள் யுத்தகளத்திற்குச் சென்றிருப்பார்கள். இவர் இப்போதும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்... ஆனால் கொல்லப்பட்டு அரசால் ஏற்கப்படாமல் விடப்பட்ட ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின் சடலங்களில் உங்களுடைய மகனின் சடலமும் ஒன்றாக இருக்கலாம் என்பதே எனது கருத்தும் முடிவுமாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் கூட மக்கள் தங்களுக்குரியவர்களின் விபரம் கோரி அவர்களுக்கு என்ன நடந்தது எனக் கூறுமாறு தெரிவித்து எத்தனையோ ஆர்ப்பாட்டங்களை, ஊர்வலங்களை, பேரணிகளை நடத்தி களைத்துப் போய்விட்டார்கள.

அரசோ... படையதிகாரிகளோ... அதனை அக்கறை கொள்வதாக இல்லை, ஆனால் இத்தகைய அனர்த்தங்கள் இன்னமும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. அரசுக்கு இவையெல்லாம் ஒரு பாரதூரமான பிரச்சினையாகவே படுவதில்லை. இது ஒரு விடயத்தை மட்டும் தெளிவாக உணர்த்துவதாக உள்ளது.

வடபகுதி மக்களின்- தாய்மாரின் கண்ணீருக்கு ஒரு முடிவும் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான விடிவும் கிட்டும் வரை கப்டன் சாலிய நிஷேந்திர பர்ணாந்து போன்றவர்களின் தாய்மாரின் கண்ணீரும் மேலும் மேலும் ஊற்றெடுக்கவே போகின்றது என்பது தான் அந்த விடயம்.

போர் ஓய்ந்தால் தமது அரசியல் வாழ்வும் ஓய்ந்து விடும் என நம்பும் பேரினவாத அரசுகள் மாறிமாறிப் பதவியில் இருக்கும் வரைக்கும் சிங்கள- தமிழ் தாய்மார்கள் சிந்தும் கண்ணீர் ஓயப்போவது கிடையாது.

அர்த்தமற்ற அவமானகரமான இழப்புகளுக்காக தென்பகுதித் தாய்மாரும் அர்த்தமுள்ள-பெறுமதி மிக்க இழப்புகளுக்காக வடக்கு கிழக்கு பகுதி தாய்மாரும் தொடர்ந்தும் கண்ணீர் வடிக்கப் போகின்றமைக்கு ஸ்ரீலங்கா அரசே காரணமாகும்.

வடக்கு கிழக்கில் இந்தத் துயரத் தொடர் கதையை முடிவுக்குக் கொண்டு வர விடிவுக்கான ஒரு போராட்டம் நடக்கின்ற வேளையில் தெற்கில் சிங்கள இளைஞர்களைப் பலிக்கடாக்களாக்கி தங்கள அரசியல் இலாபங்களை எட்ட சிங்களத் தலைமைகள் போரைத் தொடர்கின்றன.

கப்டன் சாலிய நிஷேந்திர பர்ணாந்துவின் தாய் போன்றோர் இது போன்ற துயரங்கள் மேலும் ஏற்படா வண்ணம் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் குறித்து சிந்திக்க வேண்டிய தருணம் இது தான்.

இல்லையேல் அலரிமாளிகைக்குள் மட்டும் மகிழ்ச்சியும் சிரிப்பும் கொஞ்சும், அதேநேரம் அயலெங்கும் துயரமும் கண்ணீரும் தான் எஞ்சும். அத்துடன் இது தவிர்க்க முடியாததோர் வரலாற்று அவலம் ஆகிவிடும்.

தொடர்ந்து இவ்வாறு இதேபோன்று தாய்மார்களின் கடிதங்களைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கப் போகின்றோமா? அல்லது இவ்வாறு தாய்மார்கள் கடிதங்கள் எழுதப்படுவதைத் தடுக்க ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யப் போகின்றோமா? என்பதே இன்று எம் எல்லோர் முன்னிலையிலும் இருக்கும் விடயமாகும்.

இதில் நாம் எடுக்கப் போகும் சிறந்த முடிவே மரணமடைந்து விட்ட கப்டன் சாலிய நிஷேந்திர பர்ணாந்துவிற்கு நாம் செலுத்தும் சிறப்பான அஞ்சலியாகவும் இருக்கும்.

மாயவனுக்குப் பதில்

அமைச்சர் பதவி காவல் வேலியுமல்ல தமிழர் பிரச்சினைக்கான தீர்வும் அல்ல

அமைச்சர் பதவி என்ற எலும்புத்துண்டுகளை வீசி எறிந்து தமிழ் பேசும் மக்களை ஏமாற்றும் முயற்சி 1948ம் ஆண்டிலிருந்தே இலங்கையில் நடைபெற்று வந்திருக்கிறது. சு. நடேசபிள்ளை ஜீ.ஜீ. பொன்னம்பலம் வே.குமாரசாமி, மு. திருச்செல்வம், தொண்டமான் என்ற ஆளுமையும் திறமையும் கொண்ட அமைச்சர்களே சிங்கள அரசு கைக்குள் வைத்துக்கொண்டு தமிழ் சுமகளின் உரிமைகளை பறிக்கப்பட்டன. இந்த மந்திரிகளையே செல்லாக்காசாக மாற்றியிருக்கின்றனர் ஆனால் அப்போது தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன அதற்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது ஈழமக்கள் உலகின் பல பகுதிகளின் அகதிகளாய் மோசமான நிலையில் வாழ்கின்றனர். பிறந்த மண்ணில் சொந்தவீட்டில் வாழமுடியாது காட்டிலும் கட்டாந்தரையிலும் தவிக்கின்றனர் உணவு, வீடு, இருப்பிடம், கல்வி என்ற எந்த அடிப்படை வசதிகளுமற்று நடைபினங்களாக அவர்கள் வாழ்கின்றனர் தாயகமீட்பும் ஈழமக்களின் நல்வாழ்வுமே எங்களின் இலட்சியம் என்று போராடிய ஆயிரக்கணக்கான இளந்தலைமுறை உயிரை பலி கொடுத்துள்ளது பேரினவாத அரசு தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் மிருகத்தனமாக குண்டுகளை வீசி வீடுகள் காடுகள் வளங்கள் என்பவற்றை திட்டமிட்டே அழித்து வருகின்றனர். இப்படியான ஒரு நடவடிக்கையை இலங்கை அரசு மட்டுமே உலகில் மேற்கொள்ளுகின்றது.

இந்த பேரினவாதக் கொடுமைகளிலிருந்து தமிழ் மக்களை மீட்க முயற்சி எடுக்க வேண்டியதே மனச்சாட்சியுள்ள அரசியல் வாதியின் கடமை ஆனால் நான் அரசிடம் நிதியுதவி பெறுகின்றேன் என வாக்கு மூலம் அளித்து மந்திரிப்பதவியை ஏற்ற ஒருவரால் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க என்னதான் செய்ய முடியும்? மாதமொருமறை அரசினால் கொண்டு வரப்படும் தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவளித்து அரசுக்கு துணைபோவது தமிழ் மக்களுக்கு செய்யும் பெரிய துரோகம் என்பது மாயவனுக்குத் தெரியாதோ நக்கினார் நாவிலந்தார் என்ற பழமொழியை ஈழதமிழர் அறிவார்கள்.

ஈபி.டி.பி அமைச்சர் பொறுப்பேற்றபின்னர்தான் வன்னியில் மோசமான மிருகங்கள் கூட உண்ண முடியாத உணவு அகதிகளுக்கு கொடுக்கப்பட்டது. பௌத்தகோயில் திருத்த ஒரு கோடிரூபாவுக்கு மேலும் சைவ கோயில்களுக்கு குறைவான நிதியம் வழங்கப்பட்டன. குடியிருப்புகளில் குண்டுவீச்சு நடந்தது வல்லுறவுகள் தொடர்கின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் தடைகளை மீறி பத்திரிகையாளர் நிலைராஜன் கொலைக்கு மேற்படி அமைச்சரே காரணம் என கூறி இவரின் படங்களை எரித்தனர் அத்தோடு நிமலராஜனின் படுகொலைதான் வடபகுதி புனரமைப்பா என்ற கோசங்களும் எழுப்பப்பட்டன இவையெல்லாம் சொல்கிற சொய்திகள் என்ன? ஈழ மக்களின் தொடர்ச்சியான போராட்டம் என்பது சலுகைகளை கேட்டு நடைபெறுவதல்ல இழந்து போன உரிமை பாரம்பரிய மண் என்பனவே அவர்களுக்கு வேண்டியது இதற்காக அவர்கள் எந்த விலையையும் கொடுக்கத்தயாராக இருக்கிறார்கள் இலங்கையிலுள்ள எந்த பேரினவாதகட்சிகளும் தமிழர் உரிமைகளை ஒப்புக் கொள்ளத்தயாராக இல்லை அரசு இவரை தமது கைக்குள் வைத்து கொண்டு தமிழருக்கு உரிமையளித்த தாய் உலகிற்கு காட்டவே வேஷம் போடுகின்றது. ஆடம்பரமாக இருக்க முடியும் அற்ப சலுகைகளை பெறுவதல்ல இன்றைய தேவை தமிழ் மக்கள் குறை தீர்க்க தமிழ் அமைச்சர் ஒருவரை நியமிப்பதால் மட்டுமே அவர்களின் குறை தீர்ந்து விடுமா? சிங்கள பேரினவாதம் தமிழருக்கு சின்ன சின்ன சலுகையை மட்டும் கொடுக்க தமிழப் பேசும் அமைச்சர்களை நியமிக்கின்றது. ஒழுவில் துறைமுகத்தைப் பெறுவதே என் லட்சியம் என்ற றவூப் ஹக்கீமுக்கு என்ன பதில் வழங்கப்பட்டது.

மாயவனின் கட்டுரை, தமிழ் மக்களின் உணர்வை விளங்காமல் அமைச்சரை நியாயப்படுத்தும் நோக்கத்தோடு எழுத்தப்பட்டு இது பற்றி விக்டரின் கருத்து தெளிவாக உள்ளது ஆதவன் பக்கம் இப்படி வீணடிக்கப்படுவதை அவரும் விரும்பமாட்டார் இதன் சிங்கள மொழிபெயர்ப்பை ராவயவுக்கு அனுப்புகிறேன்.

என் சுரேந்திரன்.

மக்கள் களம்

தமிழ் கோயில்கள் சமூக நல அபிவிருத்திகளுக்கு உதவ முன்வருதல் வேண்டும்!

நம் நாட்டில் பரவலாக அமைந்துள்ள தமிழ் ஆலயங்கள் யாவும் தனியாரது உரிமைக்கு உட்பட்டவையாகவுள்ளது. ஆலயங்கள் எவ்வளவு தான் பொலிவும், ஆடம்பரமும் கவர்ச்சியும் பெற்று விளங்கிய போதும், கோடிக்கணக்கில் பணத்தை செலவு செய்து அழகுபடுத்தினாலும் கூட எவ்வித பிரயோசனமும் இல்லை! ஏனெனில், பொலிவும், தூய்மையும் பெற வேண்டியது மனித மனங்களேயென்பது உண்மையான கூற்று! மனித மனங்களில் இன்று நிறைந்துள்ள இருளான எண்ணங்களும், குறுகிய சிந்தனைகளும், பல்வேறான வேற்றுமைகளும் உள்ளவரை மனித நேயம் வளருவதில்லை. மனிதரிடையே ஒற்றுமையும் ஏற்படப் போவதில்லையென்பது உண்மையானதாகும்.

கோயில்களின் பரிபாலன சபைகள் சமூக நல விடயங்களில் ஏன் அக்கறை செலுத்துவதில்லை? இன்றைய சமூக சூழலில் அபிவிருத்தி செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்ற பெரும்பாலான பணிகளுக்கு ஆலயமும் தன்னால் முடிந்த உதவிகளை வழங்குதல் மிகவும் அவசியம். சமூக சேவைப் பணிகளில் கோயிலின் பரிபாலன சபைகளும் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் பல நன்மையான காரியங்களை செய்வதற்கு முன் வருதல் வேண்டும். இல்லாவிடின் கோயில்கள் வெறும் வழிபாட்டு தலமாக இருப்பதில் எந்த பயனுமில்லை! இந்த நிலையில் இதற்கு விதிவிலக்காக விளங்குவது தமிழ் ஆலயங்கள் என்பவையே! ஏனைய மதத்தவர்கள் மிகவும் விருப்புடன் மக்களுக்கு தன்னால் முடிந்த பல உதவிகளையும், பொருள் உதவிகளையும் வழங்கி மக்களின் இன்ப, துன்பங்களிலும் அக்கறை கொண்டவர்களாக செயல்பட்டு வருவதையும் காணமுடிகின்றது. இச்சமூக சேவைப் பணிகளில், கிருஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், பௌத்த ஆலயங்கள் என்பவற்றை குறிப்பிட்டு கூறலாம் ஆனால், தமிழ் ஆலயம் ஒன்றே எந்த முயற்சிகளிலும் அக்கறை காட்டுவதில்லை. இத்தவறை திருத்தியமைத்து பிறமதத்தவருடைய சேவையாற்றும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வது நன்மையளிக்கும்.

ஆலயங்களின் வருமானங்களில் ஒரு பகுதி (25வீதம்) சமூக நல அபிவிருத்தி பணிகளுக்காக நன்கொடையாக வழங்கப்படுதல் வேண்டும். இப்பணியை சகல ஆலயங்களும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல ஆவண செய்வது மிக தேவையானதாகும். இவ்வாறான நன்கொடைகளின் மூலம் பல ஆக்கப்பூர்வமான திட்டப்பணிகளை செயல்படுத்தி மக்களை வளமுடன் வாழச் செய்வது ஆண்டவனுக்கு செய்கின்ற தொண்டினை காட்டிலும் பெரிதானதாகும். எனவே, பரிபாலன சபைகள் இப்பணிகளைப் பற்றி சிந்தித்து சுயநலப்போக்கினை கருத்தில் கொள்வதை தவிர்த்து கருணை, மனித நேயம் இவற்றை கடைப்பிடித்து முடிந்தளவில் ஒத்துழைப்பும், உதவிகளையும் வழங்கி சமூகத்தையும், நாட்டையும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வழிசமைத்து பணியாற்ற முன்வருமாறு அழைப்பு விடுகின்றேன்.

தமிழ்மகன்.

(இக்கருத்துத் தொடர்பாக வாசகர்களின் விமர்சனம் எதிர்பார்க்கப்படுகிறது)

பாரதியின் வரலாறு

மகாத்மாவுக்கு ஆசி!

1919 மார்ச் மாதம் பாரதி திடீரென்று சென்னை நகருக்கு விஜயம் செய்தார். மறுபடி அங்கே ஏதாவது வேலை கிடைக்குமாவென்று போனார் போலும்.

அந்தச் சமயத்தில், மகாத்மா காந்தி சென்னை வந்திருந்தார். ஒத்துழையாமை இயக்கம் என்ற பேரியக்கத்தை அவர் துவக்கவிருந்தார்.

சென்னை வந்த பாரதி, மகாத்மா காந்தியைக் கண்டார். "நீங்கள் துவங்கவிருக்கும் இயக்கத்துக்கு என் ஆசிகள்" என்று வாழ்த்துக் கூறினார்.

அன்று மாலை, திருவல்லிக்கேணி கடற்கரையில் தாம் ஏற்பாடு செய்திருந்த ஒரு பொதுக் கூட்டத்தில், "மகாத்மா காந்தி பஞ்சகம்" என்ற புதிய பாடலையும் பாடினார். "வாழ்க நீ எம்மான்!" என்று தொடங்கும் இப்பாடலில், "பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்" என்றும், "அதனிலும் திறன் பெரிதுடைத்தாம் அற வழி" என்றும் காந்திஜியின் அஹிம்சா மார்க்கத்தை கவி பாராட்டினார். மேலும், காந்தியடிகளது "ஒத்துழையாமை நெறியினால் இந்தியாவிற்கு வருங்கதி கண்டு, பகைத் தொழில் மறந்து, வையகம் வாழ்க நல்லறத்தே!" என்றும் தீர்க்கதரிசனத்துடன் கூறுகிறார்.

மகாத்மா காந்தியை, பாரதி ஏற்கெனவே இன்னொரு பாடலிலும் போற்றியிருக்கிறார். "பாரத மாதா நவரத்னமாலை" என்ற பாடலில், "கெடுதலின்றி நந்தாய்த் திருநாட்டின் கிளர்ச்சி தன்னை வளர்ச்சி" செய்யும் காந்தியடிகள் என்றும்,

சுடுதலும் குளுரும் உயிர்க் கில்லை;
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை;
எடுமினோ அறப் போரினை! என்றான்

எங்கோ மேதக மேந்திய காந்தி
என்றும் வாழ்த்துகிறார்.

திலகரின் சீடராக விளங்கிய பாரதி, திலகருக்குப் பின் தேசத் தலைமை காந்திஜிக்கு சேர்ந்ததும், அதை இவ்வாறு மனமுவந்து வரவேற்றார்.

மீண்டும் சென்னையில்

1920ஆம் ஆண்டு இறுதியில் பாரதி "சுதேசமித்திரன்" பத்திரிகையில் மீண்டும் சேர்ந்தார். அவருக்கு அங்கே தனி மரியாதை காட்டினார்கள். வழக்கமான வேலைகளுடன் அவர் நிறைய மீண்டும் குறிப்புகளும், கதை, கட்டுரைகளும் எழுதினார்.

பாரதியார் திருவல்லிக்கேணியில் தெள்ளிய சிங்கப் பெருமாள் கோயில் வீதியில் ஒரு வீட்டில் இருந்தார். அதுவே அவர் கடைசியாக வாழ்ந்த வீடு.

பாரதி இங்கே வாழ்ந்த சமயம், நீலகண்ட பிரம்மச்சாரி என்ற பழைய நண்பர் அவரைத் தேடி வந்தார். நீலகண்டன் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டு நீண்ட காலம் சிறை அனுபவித்தார். விடுதலையாகி வந்த பின்னரும் அவர் தீவிர வாதியாக விளங்கினார். அவரைக் கண்டு எல்லோரும் ஒதுங்கினார்கள். வருவாய் இன்றிப் பட்டினி கிடந்தார் அவர்.

பாரதி வீட்டில் இல்லை. நீலகண்டனின் துயரக் கதையைக் கேட்ட பாரதியின் பெண் சகுந்தலா தன்னிடமிருந்த இரண்டணா காசை அவரிடம் தந்தார். நீலகண்டன் அதைக் கொண்டு சற்று பசியாறி, பாரதி இருக்கும் சமயம் மீண்டும் வந்தார். "சுவாமி! நான் சாப்பிட்டு மூன்று நாளாயிற்று! நான் சாப்பிட்டு மூன்று நாளாயிற்று!" என்று பாரதியிடம் வருத்தத்துடன் சொன்னார்.

பாரதி மனம் குமுறினார். "அட, என்ன உலகம்! தேச பக்தர்கள் இப்படியா

உணவுக்குப் பரிதவிக்க வேண்டும்!" என்று வருந்தினார். பக்கத்திலிருந்தவர்களிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கி நீலகண்டனிடம் கொடுத்தனுப்பினார்.

பாரத சமுதாயம் வாழ்கவே!

நாட்டில் மக்கள் இப்படிப் பட்டினியால் வாடுவதா? அதுவும், நாட்டுக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்த தேசபக்தர்கள் இப்படிப் பட்டினிக்கு இரையாவதா? பாரதி இதை நினைத்து நினைத்து மனம் புழுங்கினார். இதன் பயனாகப் பிறந்தது ஓர் அற்புதமான பாடல்.

"பாரத சமுதாயம் வாழ்கவே!" என்ற அப்பாடலில், பாரத மக்கள் உலகமே வியக்கும் ஓர் ஒப்பில்லாத சமுதாயத்தை உண்டாக்குவார்கள் என்று பாரதி பாடியுள்ளார். சென்னையில் கடற்கரையில் பொதுமேடையில் அவர் பாடிய கடைசிப் பாட்டு இதுதான். இப்பாடல் பின்வருமாறு-

பல்லவி
பாரதி சமுதாயம் வாழ்கவே - வாழ்க வாழ்க
பாரதசமுதாயம் வாழ்கவே! - ஜய ஜய ஜய

அனுபல்லவி
முப்பது கோடி ஜனங்களில் சங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை- வாழ்க

1. மனிதர் உணவை மனிதர்
பறிக்கும்
வழக்கம் இனி உண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி உண்டோ?- நம்மிலந்த
வாழ்க்கை இனி உண்டோ?

2. இனி ஒரு விதி செய்வோம்- அதை
எந்த நாளும் காப்போம்
தனி யொரு வனுக்குணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்...

3. எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்- நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்- ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்- வாழ்க

மகாகவி பாரதியின் முதிர்ந்த சிந்தனை முழுதும் வீராவேசத்துடன் வெடித்து வரும் இக்கவிதை தமிழ் மொழியின் மங்காத கவிதாமணிகளில் ஒன்றாகும்.

பாரதிக்கு இக்காலத்தல் "அமரத்துவம்" என்ற கருத்து மிகவும் பிடித்திருந்தது. "மனிதனுக்கு மரணமில்லை" என்றும், அவன் "நித்திய வாழ்வு" பெறலாம் என்றும் அவர் அடிக்கடி பேசினார், எழுதினார். இந்தச் சமயம் அவர் பாடியதொரு பாடலில் காலனையே அலட்சியமாக விவரித்தார். காலன் மனிதரது உயிரைக் கவர்ந்து போகிற வன். அவனிடம் பாரதி சொன்னார்-

காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்- என்றான்

சென்னை திருவல்லிக்கேணியில் பாரதியார் தமது கடைசி நாட்களில் குடியிருந்த வீடு

காலருகே வாடா, சற்றே உனை மிதிக்கிறேன்!

என்று அவர் காலனை அலட்சியமாக அழைத்தார். முன்னர் "ஆதிமூலா" வென்று அலறிய யானை கஜேந்திரனுடைய உயிரைக் கவர நீ முதலை உருவில் போய் கஜேந்திரன் உயிரைக் கவர முடியாமல் முதலையே மாண்டதையும், மார்க்கண்டேயன் உயிரைக் கவரப் போய் அதுவும் முடியாமல் நீ பட்ட பாட்டையும் மறந்தாயா! என்னிடம் வா, எட்டி உதைக்கிறேன்!" என்று இப்பாடலில் பாரதி கூறுகிறார். தமது அந்திம காலம் நெருங்கிவிட்டதென்பதைக் கவி உணர்ந்திருந்தார் போலும்!

யானை காலடியில் பாரதி

பாரதி தினமும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்று தெய்வத்தை வழிபட்டு வந்தார். வெறுங்கையுடன் போகமாட்டார். தேங்காய், பழம் எடுத்துச் செல்வார். ஆனால், அவற்றை சுவாமி சந்நதியில் தாமே நிவேதனம் செய்துவிட்டு, கோயிலில் இருந்த யானைக்குத் தேங்காய் பழம் கொடுப்பார்.



யானையைப் பயமின்றி நெருங்கி, "மித்திரா, பாரதி வந்திருக்கிறேன்" என்று அதனுடன் பேசிக் கொண்டே கொடுப்பார். யானை அவரை நன்கு அறிந்து, தேங்காய் பழத்தைப் பெற்றுக் கொள்ளும்.

1921 ஜூன் மாதம் யானைக்கு மதம் பிடித்திருந்தது. அதை, கோயிலின் மதில் ஓரம் ஒரு தனி இடத்தில் சங்கிலி போட்டுக் கட்டியிருந்தார்கள்.

வழக்கமாக வருவது போல, தேங்காய் பழத்துடன் பாரதி வந்தார். "யானைக்கு மதம் பிடித்திருக்கிறது. பக்கத்தில் போகாதே" என்று சுத்தினார்கள். ஆனால் பாரதி அதை கவனிக்கவில்லை. தேங்காய் பழத்துடன் யானையை நெருங்கினார். எங்கோ பார்த்துக் கொண்டிருந்த யானை தலையைத் திருப்பியது. தலையைத் திருப்பிய யானையின் துதிக்கை பாரதி மேல் பட்டு விட்டது. மெலிந்த சரீரமுள்ள பாரதி கீழே விழுந்தார். தலையில் ஒரு காயம்; உடலில் சிறு சிராய்ப்புகள். பாரதி மூர்ச்சையானர்.

யானை காலடியில் பாரதி கிடப்பதைக் கண்ட ஜனங்கள் குய்யோ முறையோ என்று சத்தினார்கள். யாருக்கும் அவரை வெளியே இழுத்துவரத் தைரியமில்லை. யானையோ, கீழே விழுந்த பாரதியை ஒன்றும் செய்யவில்லை. அவர் தமது நண்பர் என்று தெரிந்து கொண்டுவிட்டது போலும். அது மட்டும் விரும்பியிருந்தால் பாரதியைத் துதிக்கையால் தூக்கிக் கீழே அறைந்து, காலால் மிதித்துத் துவைத்திருக்கலாம். அப்படி ஒன்றும் செய்யவில்லை.

பார்த்தவர்களெல்லாம் மத யானையிடம் நெருங்கப் பயந்து, செய்வது அறியாமல் தவித்திருந்த சமயம், பாரதியின் நண்பர் குவளைக் கண்ணன் சமாசாரத்தைக் கேள்விப் பட்டார். தமது பளுவான சரீரத்தைத் தூக்கி கொண்டு, ஓட்டோட்டமாக ஓடி வந்தார். கணமும் யோசனை செய்யாமல், யானை காலடியில் பாய்ந்தார். பாரதியைத் தூக்கிக் கொண்டு தோளில் சார்த்திக் கொண்டு வெளியே வந்தார். யானை அப்போதும் சும்மா நின்றது. அவரையோ பாரதியையோ ஏதும் செய்யவில்லை.

தொடரும்...

சிறுகதை 14ம் பக்கத் தொடர்ச்சி

என்னால் எல்லாவற்றையும் மறக்க முடிந்தது. மறப்பதற்கு மனதுக்குப் பயிற்சி கொடுத்தால் தேவையில்லாதவற்றை மறந்துவிட முடியும். எல்லாம் மனத்தினால் முடியும். மறந்து விட்டேன்" என்றாள்.

"உன்னால் உன் காதலை மறந்து இருக்கலாம். ஆனால் அது ஏற்படுத்திய பாதிப்புகளும், உணர்வுகளும் பொய் என்று சொல்ல முடியாதே" என்றேன்.

"நிச்சயம் இது மாயைதான் பர மேஸ்வரன். இந்த மாயை நிஜமானது எனின் அவன் புது மனைவியுடன் வந்து எங்கள் எதிர் வீட்டில் குடியிருந்த போது நான் தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும். காதல் யதார்த்தத்தை விட வலிமையானது எனின் நான் அங்கேயே தொடர்ந்தும் இருக்காமல் அவனைக் கண்ணால் காண முடியாத ஓரிடத்துக்கு ஓடிப் போயிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் இல்லாமல் என் காதலை என்னால் மறக்க முடிந்ததே..." என்றாள்.

"அப்படி எனில் உன் காதலில் ஆழமில்லை" என்றேன். "காதலில் ஆழமானது, ஆழமில்லாதது என்று வேறுபாடுகள் இருக்கின்றதா? காதலில் தோற்ற எத்தனையோ காதலர்கள் வாழ்க்கையில் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். உன்னால் உன் காதல் தோற்ற பின்பும் வாழ முடிந்திருக்கின்றதே... அப்படியாயின் உன் காதல் ஆழமில்லாதது தானா?..." என்றாள்.

"காதல் கல்யாணங்களிலும், பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களிலும் ஒரே மாதிரியான உணர்வுகள் கிடைக்கத்தான் செய்கின்றன. அப்படியிருக்கையில் காதல் மட்டும் ஏன் தேவலோக உணர்வாகச் சித்தரிக்கப்படுகின்றது" என என்னையே கேட்டாள்.

சியாமளா சொல்வதை ஏற்றுக்கொள்வதா மறுப்பதா என என்னுள்ளே ஒரே குழப்பமாக இருந்தது. அவள் கூறியவற்றில் உண்மை இருந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயக்கமாகக் கூட இருந்தது.

அன்று ஊரிலுள்ள பெற்றோருக்கு கடிதம் வரைந்தேன். "நீங்கள் பார்த்துவைத்திருக்கும் பெண்ணைத் திருமணம் செய்ய சம்மதம். திருமணத்துக்கு ஏற்பாடு செய்யவும்" என்று எழுதினேன். காலையில் எழுந்தவுடன் அதை தபால் அலுவலகத்தில் முத்திரை ஒட்டிப் போஸ்ட் செய்துவிட்டுத் தெளிந்த மனதுடன் வங்கிக்கு சென்றேன். என் முகத்தின் பிரதிபலிப்பிலிருந்தே சியாமளா என் முடிவைத் தெரிந்து கொண்டாள்.

நூல் அறிமுகமும் விமர்சனமும்

வருகை

பொன்விழாக் கண்ட சிங்களச் சினிமா
தம்பிஐயா தேவதாஸ்
வித்தியா தீபம் பதிப்பகம்
90/9, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு 13.
விலைரூபா: 200.00

நிர்வாணம்
சிறுகதைகள்
உடுவை தில்லைநடராசா
இலங்கையில்: எம்.டி.குணசேன
217, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 11.
விலை ரூபா. 55.00

மரணங்கள் மலிந்த பூமி
நாவல்
செங்கை ஆழியான்
யாழ் இலக்கிய வட்டம்,
யாழ்ப்பாணம்.
விலை.ரூபா 200.00

ஈழத்துத்தமிழ்ப் பேரறிஞர்
பொ.சங்கரப்பிள்ளை
அவர்களின் சிந்தனைகள்
பதிப்பாசிரியர்: தமிழ்வேள்
இ.க.கந்தசுவாமி
7, 57ம் ஒழுங்கை,
கொழும்பு 06.
விலை ரூபா- 50.00

திறனாய்வு. நூல்கள் என்ற பெயரில் தடித்த புத்தகங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எதையும் படித்துத் தெளிந்து முடிவுக்கு வராமல் முதற் பக்கத்தையும் கடைசிப்பக்கத்தையும் தட்டிப்பார்த்துவிட்டு ஒரு புத்தகத்தைப் பற்றி முழுமையாகத் திறனாய்வு செய்கிறேன் என்று பாசாங்கு செய்யும் திறனாய்வாளர் தொகை தமிழில் அதிகமாகி வருகின்றது. இந்தச் சூழ்நிலையிலே கடந்த நாற்பதாண்டு காலமாக ஆழ்ந்த படிப்பின் பிறகு ஒரு நூலைப்பற்றி பொறுப்புணர்வோடு நூலறிமுகமும் திறனாய்வும் செய்து வரும் கே.எஸ். சிவகுமாரன் தமிழ்த் திறனாய்வுத்துறைக்கு கனத்த பங்களிப்புச் செய்து வருகின்றார்.

மேனாட்டு இலக்கிய அறிவு, ஆங்கில மொழிப் பயிற்சி என்பன வற்றோடு தமிழிலக்கியத்தின் பன்முகத் துறைகளிலும் பரிச்சயமுடைவர் கே.எஸ். சிவகுமாரன் கடந்த நாற்ப தாண்டு காலப் படிப்பினைப் பயன்படுத்தி அக்கறையோடு 'நூலறிமுகமும் திறனாய்வும் செய்து வரும் இவர் ஆங்கில, தமிழ்மொழியிலே தன் எழுத்தை வெளிப்படுத்துகின்றார்' புதிய ஆக்கங்கள் பற்றிய அர்த்தம் செறிந்த குறிப்புகளை வாசகர்களின் கவனத்துக்கு கொண்டு செல்கின்றார்' அவர்களைப் புதுத்தடத்திலே சிந்திக்க கைபற்றிச் செல்கின்றார்' இதுதான் ஒரு தரமான பத்தி இலக்கியத்தின் அடையாளமும் ஆகும்.

கே.எஸ். சிவகுமாரனின் இலக்கிய நோக்கு முதிர்ச்சி பற்றி வாதப்பிரதி வாதங்கள் இருக்கலாம். ஆனால் அவருடைய பார்வையின் நேர்மைத் தரத்தை கேள்விகளுக்கு உட்படுத்துவதென்பது முடியாத காரியம். ஏனெனில் அவரது திறனாய்வு நோக்குப் பற்றிய கற்றல் நீண்ட வயதுடையது. அனுபவசாரம் செறிந்தது' விவாதங்களால் கூர்மை பெற்றது.

பத்தி எழுத்துக்களும் பல

மரபு வழித்திறனாய்வும்
ஈழத்துத் தமிழ் இலக்கியமும்
கே.எஸ். சிவகுமாரன்
மீராபதிப்பகம்
191/23 ஹைலெவல் வீதி.
கிருலப்பனை,
கொழும்பு 06
விலை ரூபா- 125.00

திரட்டுக்களும் என்ற தொடரில் இது சிவகுமாரனின் ஏழாவது தொகுப்பு பதினான்கு திறனாய்வுப் போக்குப் பற்றிய கட்டுரைகள் இதோடு தொடர்பான பேட்டி என்பனவற்றை இந்தத் தொகுதி உள்ளடக்கியுள்ளது.

திறனாய்வு சில பொதுப் பண்புகள் என்ற கட்டுரையில் திறனாய்வு இயல்பு, வளர்ச்சி முறைகள் என்பனவற்றை வரலாற்று முறை மைகளோடு ஆசிரியர் மிக எளிமையாக விளக்குகிறார். இதன் தொடர்ச்சியாக திறனாய்வு பற்றிய அணுகுமுறைகள், தெளிவான வரைவிலக்கணங்களோடு அறிமுகப்படுத்தப்படுகின்றது' மதிப்புரை. திறனாய்வு என்பன பற்றிய சிறந்த விளக்கம் தரப்படுகின்றது.

ஈழத்துத் திறனாய்வுப் போக்குப் பற்றிய வரலாற்றை மேலோட்ட மாகக்கூறி, பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பியினுடைய திற னாய்வு முறைகளை பகுத்தாராய் கின்றார். அதோடு கல்வித்துறை சார்ந்த விமர்சனப் பார்வையையும் நிரற்படுத்துகிறார்.

ஈழத்தில் வெளியான இலக்கிய விமர்சன நூல்களைப் பற்றிய தொகுப்பு ஒன்றையும் கட்டுரையாகத் தருகின்றார். இத்துறையில் எழுதியவர்களின் போக்கையும் மாற்றங்களையும் சொல்கிறார். கவிதை, நாடகம், ஆகிய துறைகளின் வளர்சசியிலும் போக்கிலும் திற னாய்வுத்துறை பெற்றுள்ள இடத்தினையும், உரியவிதத்தில் திற னாய்வுமுறை வளராமைக்கான கார ணங்களையும் வரலாற்றுப் போக்கின் அடிப்படையில் சரியான ஆதாரப் போக்குகளுடன் சிவகுமாரன் நிறுவியுள்ளார்.

திறனாய்வு சமூகவியல் போக்கு என்ற தலைப்பில் பேராசிரியர் சிவத்தம்பி தமிழ்த்திரைப்படம் பற்றி எழுதிய ஆங்கில தமிழ் நூல்கள் பற்றியும் "தமிழ்ச் சமூகமும் அதன் சினிமாவும்" என்ற நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகளும், இத்துறை பற்றிய அசிரியர் கணிப்புப்பற்றியும் விரிவான தகவல்களைத் தருகின்றார் சிவகுமாரன். பேராசிரியரின் நூலைப் பற்றிய சாராம்சத்தை மிகுந்த நுட்பத்துடன் சொல்கிறார் விமர்சகர்.

பேராசிரியர் கைலாசபதி பற்றிய மூன்று கட்டுரைகள் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. மிகவும் பயனான எழுத்து. கைலாசபதியின் ஆளுமையை, பிம்பத்தை சிவகுமாரன் மெய்ம்மை துலங்கப் பின்வருமாறு கூறுகின்றார்.

ஓர் எழுத்தாளனாக ஒரு பத்திரிகை ஆசிரியனாக, ஒரு கல்விமானாக, ஒரு திறனாய்வாளனாக, ஒரு ஆய்வறிவாளனாக, அவர் ஆற்றிய பணிகள் நமது நாட்டிற்கும், தமிழியலுக்கும், மனுக்குலத்திற்கும் பயனளித்துள்ளன. வெகுஜனத் தொடர்பு சாதனங்களை அவர் பயன்படுத்திய முறையும் பாராட் டத்தக்கது. நல்ல பேச்சாளனாக, ஒலிபரப்பாளனாக, எழுத்தாளனாக, மொழிபெயர்ப்பாளனாக, நூலாசிரியனாக, போதனாசிரியனாக விளங்கிய அவரிடத்து ஒரு காந்தசக்தி காணப்பட்டது. "செய்வன திருந்தச் செய்" என்பதில் அசையாத நம்பிக்கையுடையவர் கைலாஸ் அவரை அணுகியவர் எவரையும் இதய சுத்தியுடன் ஆதரித்து குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி அன்பு செலுத்தி, ஆதர வான முறையில் வழி நடத்தி வந்துள்ளார். இதில் நமது காலத்தின் தலைசிறந்த மார்ச்சிய சிந்தனையாளன் என்ற கைலாசபதியின் முக்கியமான பக்கம் குறிப்பிடப்படாதிருப்பினும், கட்டுரைப்பகுதிகளில் சிவகுமாரன் அதையும் விரிவாகச் கூறுகிறார். கைலாசபதியோடு தனது தொடர்பு பற்றி விபரமாக ஆசிரியர் கூறுகிறார். நிறையத் தகவல்களை அறியமுடி கின்றது. "பேராசிரியர் கைலாசபதியைப் போன்று சமகால ஆங்கில விமர்சன நூல்களைப் படித்தவர் எவரும் இருந்திரார் என்று உறுதியோடு ஆசிரியர் கூறுகிறார், கைலாசபதி பற்றி கட்டுரைகள், அவரது தமிழிலக்கிய சமூகவியல் இருப்புகளை அவரது கருத்துக்களூடாக அடையாளங்காட்ட முயல்கின்றன.

கைலாசபதி பலரை உருவாக்கினார். கல்விக்குறைபாடு, தராதரமற்றிருந்தோர் மேனிலை பெறுவதற்காக தனது சொந்த முன்னிறுத்தலால் அவர்களை ஆளாக்கி, பல்கலைக்கழக ஆசனங்கள் கிட்டவைத்தார். அதற்கு இவர்கள் செய்த நன்றி கைலாசபதியை விட தங்களை அறிவாளர்களாக காட்டிக் கொள்ள முயன்று மண்கவ்வியதே . வெறும் ஆய்வாளர்களாக இருக்கக்கூடத் தகுதியற்ற இந்த உதிரிகளுக்கு எதிர்ப்புறம் நின்று, கைலாசபதியை அடையாளம் காணும் சிவகுமாரனின் புலமை பாராட் டத்தக்கது.

கைலாசபதி, க.நா.சு. பற்றிய ஆசிரியரின் ஒப்பீட்டில் பல கேள்விகளுக்கு இடமுண்டு. விவாதத்துக்குரிய கருத்துகளை வெளிப்படுத்துகிறார். சி.க.செந்திவேலின் கைலாசபதிபற்றிய மிக ஆய்வு பூர்வமான நூல், இந்தக் கேள்விகளுக்கு தகுந்த விடை தரக் கூடியது.

இன்றைய ஆய்வாளருக்கு அருமையான துணைநூல் இது. "பத்தி எழுத்துடன் நின்றுவிடாது", பரந்து விரிந்த ஆழமான முயற்சிகளை செய்யவேண்டுமென கைலாசபதி எதிர்பார்த்தது போலவே, சிவகுமார னிடமிருந்து தமிழும் எதிர்பார்க்கிறது.

செ.யோ

மண்ணும் மல்லிகையும்
விமல் குழந்தைவேல்
நாவல்
குமரன் பதிப்பகம்
வடபழனி,
விலை ரூபா.40.00 (இந்திய விலை)

கிழக்கு மாகாணப்படைப்பாளியான விமல் குமாரவேல் ஏற்கனவே தெருவில் அலையும் தெய்வங்கள் அவளுக்குள் ஒருத்தி என்ற சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டவர். இப்போது முன்னே கூறிய நாவலினை எழுதியுள்ளார்.

தாயகத்திலிருந்து வெளிநாட்டிற்கு இனித்திரும்பியே வருவதில்லை என்று செல்கிறான். தேம்ஸ் நதிக்கரையைப் பார்க்கையிலே மட்டக்களப்பு கடலோரி நினைவுக்கு வருகிறது. கிராமத்தின் மல்லிகைப் பந்தலின் கீழே கலகலப்பாக ஆனந்தமாயிருந்த காலம் நினைவுக்கு வந்து உறுத்துகிறது. ஊருக்குத் திரும்புகிறான். தான் பிறந்த மண்ணின் சேதாரங்கள். அவலங்கள். ஏக்கங்கள். பேருமூச்சுகள் என்பனவை அவனை வறுத்தெடுக்கின்றன. நாவலின் கதை எல்லாருக்கும் தெரிந்ததே. கதையைச் செதுக்கிச் செதுக்கிச் சொல்லுகின்ற கலாநேர்த்தியும் நாவலை நகர்த்திச் செல்லும் சம்பவக்கோப்புத்திறனுமே சிறந்த நாவல் ஒன்று உருவாகக் கார ணமாக அமையும். விமல் குழந்தைவேல் நல்ல கதைக்களைத் தேர்ந்தெடுத்துள்ள போதிலும்? நாவல் உருவாக்கும் கலாநேர்த்தியில் கூடிய கவனம் செலுத்தவில்லையென்பதை உணர முடிகிறது. நாவலில் இடறும் எழுத்துப்பிழைகளுக்கு அவர் பொறுப்பாகாவிடினும். பதிப்பகத்தாரின் நூல் வடிவமைப்புக் குறைபாடு காரணமாக வாசகன் எரிச்சலோடுதான் கவனிப்புக்குரிய இந்த நாவலைப் படிக்க வேண்டியுள்ளது. எனினும் ஆசிரியர் நல்ல நாவல் ஒன்றை இனி உருவாக்குவாரென்பதை இந்த நாவல் எடுத்துக் கூறுகிறது.

20ம் பக்கத் தொடர்ச்சி

தலித் உணர்வு கொண்ட யாரும் தலித் இலக்கியம் படைக்கலாம் என்ற வாதம். முதலாவது வாதம் தலித் தீவிரவாத சிந்தனையை முன்வைக்கின்றது. நல்லெண்ணம் கொண்ட சாதிய விடுதலைக்காக குரல் கொடுக்கின்ற உயர் சாதியினரை நிராகரிக்கின்றது. உயர்சாதி உழைக்கும் மக்களை எந்த வர்க்கத்தினுள் சேர்ப்பது? தலித் முதலாளியை அல்லது தலித் ஒருவர் முதலாளியானால் எந்த வர்க்கத்தினுள் சேர்ப்பது? போன்ற தெளிவீனங்கள் இவர்களின் பார்வையில் தென்படுகின்றன. சாதியப் போராட்டத்தில் வர்க்கச் சிந்தனை கரைவதால் சாதியம் முக்கியத்துவம் இழக்கின்றது என்பார் இராஜ் கௌதமன். மேலோட்டமான இவர்களின் கூப்பாடுகளை பார்க்கும் போது அர்த்தமுள்ளதாக தோன்றும். சற்று ஆழமாக நோக்கினால் தான் இதன் பின்னணியில் ஏகாதிபத்திய நிறுவனங்களும் அதற்கு இலகுவாக விலை போகக்கூடிய அ.மார்க்ஸ் போன்ற புத்திஜிவிகளும் காணப்படுவர். இந்தப் பின்புலத்திலிருந்து இவர்கள் பாவிக்கின்ற பிராமாஸ்த்திரமே பின் நவீனத்துவமாகும். நவீனத்துவம் என்று மக்களை ஒட்டியதாய் கிளைப்பரப்ப பின் நவீனத்துவம் என்பது மக்களை பிரித்து உள நோயிற்கு ஆட்படுகின்ற தத்துவமாக விளங்குகின்றது. சாதியம் என்பது சமுதாயம் சார்ந்ததாக உள்ளதுடன் பொருளாதாரம் சார்ந்ததாகவும் உள்ளது. சோஷலிச சமூக அமைப்பில் தான் ஏற்றத்தாழ்வுகளும், முரண்பாடுகளும் மறையும். எனவே தலித் போராட்டம் என்பது வர்க்கப் போராட்டத்தின் அங்கமாக திகழ வேண்டும். இதனையே இரண்டாவது பிரிவினர் வலியுறுத்தியுள்ளனர்.

உங்களின் தற்போதைய இலக்கிய முயற்சிகள் குறித்து.....

கடந்த எட்டு வருடங்களாக நான் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நூலாக் வெளியிட முயற்சியினை மேற்கொண்டு வருகின்றேன். தவிரவும் "ஜெயமோகனின் மௌனமாகும் யதார்த்தங்கள்" என்ற எனது கட்டுரையை விரிவுப்படுத்தி நூலாக வெளிக்கொணரும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றேன். கூடிய விரைவில் இவற்றின் அறுவடை வெளிவரும்.

கைலாசபதியைத் திறனாய்வுத் துறையில் முக்கிய திருப்பு முனையாகவே கருதுகின்றேன்

—லெனின் மதிவானம்

நேர்காணல்
செ.யோகநாதன், த.நடராசா

இலக்கிய திறனாய்வுக்கு உங்களை நகர்த்திய காரணங்களைக் கூறுங்கள்.....

எனது தந்தை ஆரம்பத்தில் தி.மு.க கருத்துக்களிலும், பின்னர் மார்க்ஸிய தத்துவஞானத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு அத்தகைய இயக்கங்களில் பங்கேற்று செயற்பட்டவர். அவ்வாறே எனது தாயும் தொழிலாளர் தேசிய சங்கத்தில் மாதர் அணித் தலைவியாகக் கடமையாற்றியவர். நான் சிறுவனாக இருக்கும் போதே எங்களை மையமாகக் கொண்டு உருவாக்கிய சிறுவர் சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றின் மூலமே எனது தேடல் உருவானது. இருப்பினும் ஓர் உயர் மத்தியதர வாழ்க்கை, அதற்கு அடிமையான எனது மனோநிலை என்பன காரணமாக இந்நூல்கள் அந்நியப்பட்டே தென்பட்டது. பெரும்பாலும் திரைப்படங்களைப் பார்ப்பதிலும், துப்பறியும் நாவல்களை வாசிப்பதிலுமே எனது மாணவப் பருவத்தின் பெரும் பகுதி கழிந்து விட்டது.

எதிர்பாராத விதமாக 83ல் இடம்பெற்ற இனக்கலவரம் என்னையும், என் குடும்பத்தையும் நடுத்தெருவுக்கு கொண்டு வந்தது. இவ்வாறானதோர் சூழலில் தான் எனது தாயின் பிறந்தகமான ஹட்டன் காசல்றி தோட்டத் திற்கு வந்தோம். இங்கு நான் சந்தித்த உழைப்பின் மேன்மை, உழைப்பாளரின் உயர்ந்த குணாதிசயங்கள் என்பன என்னை படிப்படியாக இம் மக்களை நேசிக்க வைத்தது. நானும் இம் மக்களில் ஒருவன் என்ற உணர்வு எழுந்தது. இங்கு நான் சந்தித்த அடக்கு முறைகளும், கபடங்களும் என்னையறியாமலேயே என்னை ஒரு கலகக் காரனாக மாற்றியது. அவ்வகையில் அக் கலகக் காரன் தூக்கிய ஆயுதமே என் எழுத்துக்கள். அவ்வாயுதத்தை கூர்மையாக்கி செழுமைப்படுத்தியவர் மதிப்பிற்குரிய நண்பர் ந. இரவீந்திரன். என்னைக் காலத்திலே இறக்கி போராடச் செய்தவர்களில் திருவாளர்கள் அந்தனி ஜீவா, டொமினிக் ஜீவா முதலானோர் குறிப்பிடத்தவர்கள். இவை தவிர

> லெனின் மதிவானம் கொடகலை ஆசிரியர் பயிற்சி கலாசலையில் விரிவுரையாளராக பணியாற்றுகின்ற கல்வியாளர். இன்றைய இளந்தலைமுறை திரனாய்வாளர்களில் குறிப்பிட்டு சொல்லத்தக்கவர் மார்க்ஸிய நெறிப்பாட்டை தன்னுடைய திரனாய்வினுடைய ஆதாரமாகக் கொள்வதால் பேராசிரியர் கைலாசபதியின் வழித்தடத்தை பின்பற்றி நிற்பவர். மலையகத்தில் இளந்தலைமுறை படிப்பாளிகள் இடத்தில் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தி வருபவர். இன்றைய சிறந்த பேச்சாளர்களில் ஒருவர் இவருடைய திரனாய்வு நூல் விரைவில் வெளிவரவுள்ளது.

என் எழுத்துக்களை பிரசுரித்து ஊக்கம் தருவதில் தாயகம், மல்லிகை தாமரை மூன்றாவது மனிதன், ஞானம், ஆதவன், சரிநிகர், வீரகேசரி முதலிய சஞ்சிகைகளுக்கும் முக்கிய பங்குண்டு.

மலையக இலக்கியம் தொடர்பில் உங்கள் கருத்தென்ன?

மலையகச் சமூக அமைப்பானது ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை பெரும்பான்மையாகக் கொண்டு விளங்குகின்றது. மலையகத்தின் அடிநிலை மக்கள் இழப்பதற்கென சொத்துடமை ஏதுமற்றவர்கள். உழைப்பை சுரண்டுபவர்களான மூலதனகாரர்களுக்கும், உழைப்பை விற்பவர்களான தொழிலாளர்களுக்கும் இடையில் நிலவுகின்ற உற்பத்தி உறவே மலையகச் சமுதாயத்தின் மனிதவூட்டாட்டமாகும். வர்க்கப் போராட்டம் என்பது இதனடியாகவே எழுகின்றது. அவ்வகையில் மலையகச் சமூக அமைப்பில் நிலவும் ஓர் கூட்டு வாழ்க்கை முறையானது உழைப்புடன் அல்லது உற்பத்தியுடன் தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளுகின்ற போது அதன் விளைப்பொருளாய் பீறிடும் கலை இலக்கிய உணர்வுகளும், கூட்டுவாழ்க்கை முறையினையே பிரதிபலித்து நிற்கும். இங்கு கூட்டு வாழ்க்கை முறையானது சோசுத்தையே இசைத்தாலும் அவை கூட சமூக அசைவியக்கத்தை நோக்கியதாகவே அமைந்துக் காணப்படும். எனவே தான் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிராகத் தோன்றிய அமைப்பியல் வாதம், பின் நவீனத்துவம், இருத்தலியம் முதலிய கோட்பாட்டு சாம்பார் குவியல்கள் இங்கு வேரூன்ற முடியாமல் உள்ளது.

மலையகத்தின் இந்த வாழ்க்கை முறையினை ஏதோவொரு வகையிலும், அளவிலும் படைப்பாக்கப்பட்டுள்ளது. அவை விஞ்ஞானப்பூர்வமான சிந்தனையுடன் இடம்பெற வேண்டும் என்பது என் கருத்தாகும். அவ்வாறே அதனையொட்டிய ஆய்வுகளும் தோன்ற வேண்டும். அதற்கான சில நம்பிக்கைக் கீற்றுகள் தொன்நூறுகளுக்குப் பின் தென்படத் தொடங்கி உள்ளன.

பேராசிரியர் கைலாசபதிக்குப் பின் இலக்கியத் திறனாய்வு வெற்றிடம் பெற்றுள்ளது என்று கூறப்படுவது குறித்து.....

கைலாசபதியைத் திறனாய்வுத் துறையில் முக்கிய திருப்பு முனையாகவே கருதுகின்றேன். மார்க்லிய தத்துவஞானத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்ததுடன், அதனை மாறி வருகின்ற தமிழ் சமுதாயச் சூழலுக் கேற்ப பிரயோகித்து அதில் வெற்றியும் கண்டவர். இலக்கியத்தில் மக்கள் விரோதசக்திகளுக்கு எதிராக வீறு கொண்டதோர் தத்துவப் போராட்டத்தை நடாத்தியதுடன், தம்முடனான ஓர் குழுவையும் அமைத்துச் செயற்பட்டவர்.

இன்று இலங்கையில் மாத்திரமன்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மக்கள் இயக்கங்களின் தளர்ச்சி, அதனை விஞ்சி நிற்க முடியாது. சோரம் போகின்ற எமது அறிஞர்களின் சிந்தனைகள் என்பன இன்று மக்கள் இலக்கியத்தை பல பின்னடைவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது எனலாம். எடுத்துக்காட்டாக மதிப்பிற்குரிய பேராசிரியர் சிவத்தம்பி போன்றோர் தூய அழகியல் தளத்தில் நின்று சிறுகதை எழுதுகின்ற ஜெயமோகனை தமிழ் சிறுகதைக்கு புதிய ஒளிப்பாய்ச்சுகின்றார் எனவும், தமிழில் சிறந்த நாவல்களே இல்லை என்ற அந்தக் கலைத்துவப் பிராமணனின் கூற்றினை ஆதர்சனமாக கொண்டு சில சமயங்கள் அவரை விட ஒருபடி மேலே சென்று தமிழிலே சிறந்த நாவல்கள் இல்லை எனவும், அதற்கு கைலாசபதியின் விமர்சனக் கொடுங்கோன்மையே காரணம் எனவும் கூறி வருகின்றனர்.

இக் கூற்றுகள் எதனை வெளிப்படுத்துகின்றது. இலக்கியத்தில் சமூகவியல் போக்கு என்பது வேண்டாத அளவு மிகைப்படுத்தப்பட்டு விட்டது எனவும், மீண்டும் அழகியலுக்கு திரும்ப வேண்டும் என்ற குரல் ஒங்கி ஒலிப்பதனைக் காணலாம். இப்போது எதிரிகள் ஒய்வெடுக்கலாம். காரணம் அந்த அதியுன்னத பணியினை நண்பர்கள் முன்னெடுத்துள்ளனர்.

கைலாசபதியுடன் இணைந்து செயற்பட்ட பல அறிஞர்கள் எதிரியின் பக்கம் போய்விட்ட உண்மையை வெளியிடவும் முடியாமல் மார்க்ஸியத்தின் மெய்மையை மறுதலிக்கவும் முடியாமல் அவர்கள் அறிவுத் தடுமாறுவது புலனாகிறது. இது அடிப்படையில் திரிபுவாத நிலைப்பாட்டிற்கே இட்டுச் செல்கின்றது. இவ்விடத்தில் கைலாசபதியின் மறைவு பெரும் வெற்றிடத் தையே ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் ந.இரவீந்திரனின் இன்றைய ஆய்வுகள் சில நம்பிக்கைகளை எமக்குத் தருகின்றது.

தமிழ் படைப்புத் துறையில் புதிய வடிவமும், சிந்தனையும் என்ற போர்வையுடன் நாவல் எழுதும் ஜெயமோகன் தொடர்பில் உங்களின் கருத்தென்ன?

ஜெயமோகனை மக்கள் இலக்கியத்தின் முக்கியமான, முனைப்பான எதிரி என்ற வகையில், அவரை நான் குறைத்து மதிப்பிட மாட்டேன். அது எம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதாக அமையும். சில சமயங்களில் புகழ் மோகங்கொண்ட அவர் சில சித்துவிளையாட்டுக்களையும் நடாத்தி வருகின்றார். உதாரணமாக இலங்கைப் படைப்புகள் யாவும் வெறும் வெம்பல்கள் எனக் கூறும் போது இலங்கையின் எத்தனைப் படைப்புகளைப் படித்துள்ளார் என்ற விடயம் ஒருபுறமிருக்க, அவற்றினை அவர் தேடிப்படித்து இருப்பினும் அவரது கருத்து மாறியிருக்காது. காரணம் அவை யதார்த்தத்தை பிரதிபலித்து நிற்கின்றன.

இந்திய அரசியலில் மதம் என்பது இன்று முக்கிய கூறாகக் காணப்படுவதுடன், முன்னணிக்கு வந்துள்ளது. இந்தப் பின்னணியில் தான் இந்து தீவிரவாத இயக்கங்களான ஆர்.எஸ்.எஸ் முதலியன முனைப்படைந்து வந்துள்ளன. இவ்வியக்கங்களுக்கு பணிபுரிகின்றதையும், நிலையிழந்துப் போகின்ற கருத்து முதல் வாத நோக்கிற்கு நிலை தேடும்

கைங்காரியத்தையும், அவரது விஷ்ணுபுரம் என்ற நாவலில் ஊடாகச் செய்திருக்கின்றார்.

அவரது அண்மைக்கால நாவலான பின்தொடரும் நிழலின் குரல் என்ற நாவல் ஆழமான இடதுசாரி இயக்க எதிர்ப்பினைக் கொண்ட நாவலாகும். சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி, அவற்றுக்கான இலட்சிய வாதம், தியாகம் போன்றன எவ்வாறு பொருள் கொள்ளப்படுகின்றன என்பதனை ஓர் இடதுசாரி புத்திஜீவியூடாக முன்வைக்கிறார். விடுதலைக்கான நடைமுறைச் சாத்தியத்தை செயலாக்க விழைபவர்கள் மார்க்ஸியத்தில் நிலையூன்றுதல் தவிர்க்கவியலாததே. யதார்த்தப் பூர்வமான ஸ்தூலமான நிலைமைகளை புறநிலையாக ஆராய்ந்து, நடைமுறைப் போராட்டங்களினூடாக அவை முன்னெடுக்கபட வேண்டும் என்ற உண்மைக்குப் புறம்பாக சமூக மாற்றப் பணிகளில் நம்பிக்கை வரட்சியையும், மார்க்ஸியத்தின் மீதான அவநம்பிக்கையையும் ஏற்படுத் துகின்ற வேலையினையே இந் நாவல் மூலம் ஜெயமோகன் செய்திருக்கின்றார். இதற்கு முன் தோன்றிய நாவல்களான கல்கியின் அலையோசை, சுந்தர ராமசாமியின் ஜே.ஜே. சிலக் குறிப்புகள் முதலிய நாவல்களிலும் இப் பண்பு முனைப்படைந்திருப்பதைக் காணலாம். அதன் சற்றே வளர்ச்சிடைந்த நிலையினை நாம் இந்த நாவலில் காணுகின்றோம்.

இது குறித்து மேலும் கூறுவதாயின் ஜெயமோகன் தனது நாவல்கள் (ஏனைய எழுத்துக்களும் பொருந்தும்) மூலம் சமூகப் பண்மைகளை மூடி மறைத்தல், அழுகுபடுத்தல், சமரசம் செய்தல் முதலியவற்றினையே செய்து வருகின்றார்.

இந்த நோய் கூற்றாளனுக்கு எதிரான தத்துவப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்து மக்கள் இலக்கியத்தின் இருப்பினை நிலை நிறுத்த வேண்டியது எமது முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

தற்கால தலித் இலக்கிய போக்குகள் பற்றி.....

ஓர் நாகரீக சமூகத்தின் மூலத்தைப் போலவே ஒரு புறமான சமூக உருவாக்கமும் மறுபுறமான ஒடுக்குமுறைகளின் செயற்பாடும் தாம் தனித்துவமாக இனம் என்ற உணர்வினை பலப்படுத்தி இருக் கின்றது. பல ஆண்டுகளாக சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்டு சுரண்டல், வறுமை முதலிய ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டு வந்த மக்கள் அதற்கெதிராக கலக உணர்வு கொண்ட போது அப்பிரக்ஞையின் வெளிப்பாடே தலித் இலக்கியமாகும். தலித் இலக்கியம் பற்றிய போக்குகள் இரு தளங்களில் இடம்பெற்று வந்துள்ளது. ஒன்று தலித்துக்களுக்கான தலித்துகளால் எழுதப்படுவது தலித் இலக்கியம் எனும் வாதம் மறுபுறமாக

தொடர்ச்சி 19ம் பக்கம்.....

இப் பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியன்தல வீதி 83ம் இலக்க ராவய அச்சகத்தில் 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.